# பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ.,
பத்திராதிபர்

G. A. VaidyaRaman, B. A.
EDITOR.

புஸ்தகம் 4. Vol. 4. — விரோதிகிருது௵ பங்குனி௴, MARCH, 1912. — ஸஞ்சிகை 3. No. 3.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. | A. | P. | | *Foreign.* Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |
| Sample copy ... | 0 | 2 | 0 | ... ... | 0 | 3 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do. | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompained with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | | | அந்நிய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| தனிப்பிரதி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 2 | 0 | ... | 0 | 3 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் | ஒன்றுக்கு | 5 | 0 | 0 |
| ½ பக்கத்திற்கு | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, | ,, | 1 | 4 | 0 |

**வியாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை**

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். எவ்வொரு வியாஸத்தையும் சடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்திரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக க்ருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை க்ருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## EDITORIAL NOTES.
## பத்திராதிபர் குறிப்புகள்.

### The Price of Rice.

அரிசியின் விலை.—சென்ற வருஷத்தைவிட இந்த வருஷத்தில் நெல் ஸாகுபடியான விஸ்தீரணம் குறைந்திருக்கிறது. இதனால் இந்தியாவிற்கு அதிக நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. தவிரவும், ஏராளமான லாபத்தையடையவும் கூடாமல்போய்விட்டது.

உலகத்தில் அரிசி ஒரு முக்கியமான ஆகாரப்பொருள். இது இந்தியா, பர்மா, சீனதேசம், ஜப்பான், கொரியா, பார்மோஸா, ஸயாம், அமெரிக்கா ஐக்கியமாகாணங்கள், ஆகிய பல தேசங்களில் பயிர் செய்யப்படுகிறது. ஆனால் இந்த வருஷத்தில் அநேகமாய் எல்லா தேசங்களிலும் விளைவு குறைந்திருக்கிறது. சீனதேசத்தில் அதிக வெள்ள மேற்பட்டதால் நெல் விளைவு குறைந்துபோய்விட்டது. ஸயாம் தேசத்திலேயும் இந்த வருஷம் விளைவு மட்டுப்பட்டுப்போய்விட்டது. ஸைகானிலும் அரிசி ஏற்றுமதி அதிகமாகவில்லை. பார்மோஸாதீவில் வழக்கத்தைவிட 69,000 டன் அரிசி குறைவாகவிருக்கிறது. பிலிப்பைன் தீவுகள், ஜப்பான், யுனைடேட் ஸ்டேட்ஸ் முதலிய விடங்களிலும் அரிசி அதிகமாகக்கிடையாது. இவ்விதம், அரிசியையே முக்கிய உணவாகக் கொண்டிருக்கும் நாடுகளில் விளைவு குறைச்சலாயிருப்பதால் பஞ்சம் வருமோவென்று அநேகர் அஞ்சுகிறார்கள். சீனவில் கலகத்தாவில் பஞ்சம் ஏற்கனவே வந்துவிட்டது.

கொரியாவில் மாத்திரம் விளைவு நன்றாயிருக்கிறது. ஆனால் அதிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய 100,000 டன் நிறையுள்ள அதிக அரிசியை வைத்துக்கொண்டு எல்லாருக்கும் கொடுக்கமுடியாது. ஆகையால், அரிசியின் விலை உயர்ந்துவிடும். இந்தியாவிலும் அயல்தேசங்களில்போல் விலை யதிகமாகிவிடும்.

சென்றவருஷத்தில் இந்தியாவில் நெல் ஸாகுபடியான நிலத்தின் விஸ்தீரணம் 56,443,000 ஏக்கராக்கள். இந்த வருஷத்திலோ முன் வருஷத்தைப்போலல்லாமல் 1,586,000 ஏக்கராக்கள் ஸாகுபடிக்கு வராமல் நிறுத்தப்பட்டுப்போயின. அதனால், விளைவு மட்டுப்பட்டிருக்கிறது. ஆகவே மேற்சொன்ன காரணங்களால் நெல்லின் விலை ஏறும்போலிருக்கிறது. நெல்லிருக்கும் பக்ஷத்தில் இந்த வருஷத்தில் விவஸாயிகள் பணத்தை கையில் நிறையப் பார்க்கலா மென்று தெரிகிறது.

தற்காலம் விலையேற்றம் அதிகமாக இல்லாவிட்டாலும், அயல்நாட்டு வர்த்தகர்கள் நம்முடைய வர்த்தகர்களை அரிசியேற்றுமதி செய்யும்படி கேட்டால் விலையதிகமாகிவிடும். அப்பொழுது, உணவுக்காகச் சேகரித்துவைத்திருக்கும் நெல்லும், விதைக்காக வைத்திருக்கும் நெல்லுங்கூட செலவாகிவிடும்.

### Rice Mills in the Tanjore District.

தஞ்சாவூர் ஜில்லாவில் நெல் ஆலைகள்.—சில மாஸங்களாக தஞ்சாவூர் ஜில்லாவில் அனேக "ரைஸ்மில்கள்" அதாவது நெல் ஆலைகள் ஏற்பட்டு வருவதாகக் கேள்விப்படுகிறோம். தஞ்சாவூர் ஜில்லாவில் நெல் விளைவு அதிகந்தான். அந்த ஒரு விஷயத்தை மட்டும் கொண்டே எங்கே பார்த்தாலும் ரைஸ் மில்களை வைக்கலாமென்று எண்ணுவது பிசகென்று தோன்றுகிறது. எந்த வியாபாரத்திலும் முதல் முதல் இறங்குகிறவனுக்கு லாபம் கிடைக்குமென்று எண்ண நியாயம் உண்டு. ஆனபோதிலும், தஞ்சாவூர் ஜில்லாவில் ஆரம்பத்தில் நீடாமங்கலத்தில் ஏற்பட்ட ரைஸ்மில் ரொம்ப நல்ல ஸ்திதியை யடைந்ததாகத் தெரியவில்லை. இந்த ஒரு உதாரணத்தைக் கொ

ண்டு வேறொருவரும் வேறொரு இடத்திலும் "ரைஸ்மில்" ஏற்படுத்தக்கூடாதென்று சொல்லவந்ததாக எண்ணக்கூடாது. தஞ்சாவூர் ஜில்லாவில் நெல் ஏராளமாகவிளைகிறது, யந்திரங்கள் விற்பவர்கள் மெஷீன்களைக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள், வேண்டிய பணமோ கையிலிருக்கிறது, என்று இந்த விஷயங்களை மட்டும் யோஜனை செய்துகொண்டு தஞ்சாவூர் ஜனங்கள் ரைஸ்மில்களை ஏற்படுத்த ஆரம்பித்திருக்க மாட்டார்களென்று நம்புகிறோம். ரைஸ்மில்லில் பணம்போட உத்தேசிக்கும் ஒவ்வொருவரும் அதைப்பற்றிய விஷயம் ஒவ்வொன்றையும் நன்றாக அறிந்து கொண்டு அந்த வியாபாரத்தில் இறங்கவேண்டும். ரைஸ்மில் ஏற்படுத்தி வியாபாரம் செய்வதில் நல்ல அனுபோகமுள்ள பெரும் முதலாளிகளும்சிறுமுதலாளிகளும் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஆகிய இந்த ஜில்லாக்களில் அனேகம்பேர்களிருக்கிறார்கள். இந்த ஜில்லாக்களில் ஏற்பட்டுள்ள ரைஸ்மில்களின் அனுபோகத்தை விசாரித்தால் அவைகளுக்கு தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் கதி வேறு ஜில்லாக்களில் ஏற்படாமலிருக்கவேண்டுமே யென்று ஸ்வாமியைப் பிரார்த்திக்கவேண்டியதாக இருக்கிறது. விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், இவைகளில் ஸுமார் இருநூறு ரைஸ்மில்களிருக்கின்றன. இவைகளெல்லாம் விசேஷமாய் நெல்லூர், பொன்னூரு, தெனாலி, துக்கிராலா, பெஜவாடா, மங்களகிரி, குண்டூர், நரஸராவ்ப்பேட்டை, கோட்டவரம், குடிவாடா, ஏலூர், புல்லா, தடபள்ளிகூடம், நிததவோலு, ராஜமஹேந்திரபுரம், த்வாரபூடி, ஸாமல்கோட்டை, காகிநாடா, கொரிங்கா, கொல்லப்ரோலு, தூனி, அனகப்பள்ளி, விசாகபட்டணம், விஜயநகரம் முதலிய பட்டணங்களி லிருக்கின்றன. இவைகளெல்லாம் ஸுமார் 15 வருஷத்துக்குள் ஏற்பட்டவைகள். சில மில்களில் ஸ்டீம் எஞ்ஜினைக்கொண்டும், மற்றவைகளில் ஆயில் எஞ்ஜினைக் கொண்டும் வேலை நடந்துவருகிறது. இவைகளில், பெரிய மில்கள் ஐம்பது; மற்றவைகள் சிறிய மில்கள். அனேகம் மில்கள் நெல்லைப் புழுக்கிக் குத்தி அரிசியை மோரீஸ் முதலிய தீவுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன.

இப்படி ஸுமார் பதினைந்து வருஷங்களுக்குள் மேற்சொன்ன ஜில்லாக்களில் ரைஸ்மில்கள் அதிகமாகியிருப்பதைக்கொண்டு ஸந்தோஷப்பட்டு ஏன் தஞ்சாவூர் ஜில்லாவிலும் ரைஸ்மில்களை ஸ்தாபித்து லாபம் ஸம்பாதிக்கக் கூடாதென்று கேட்கலாம். ஆனால் மேற்சொல்லிய ரைஸ்மில் சொந்தக்காரர்களுடைய அனுபோகத்தை தீர விசாரித்து அறிந்து கொள்வது நல்லது. கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களில், நெல் ஏராளமாக விளைவதோடு அதை வேண்டிய இடத்துக்குக் கொண்டு போக ரெயில் மார்க்கத்தோடு அனேக கால்வாய்களும்இருக்கின்றன. தவிர, அந்த ஜில்லாக்களிலுள்ள ரைஸ்மில்களில் தயாராகும் அரிசியை வாங்குவதற்கும், இதர தேசங்களில் வாடிக்கைஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு ஸௌகரியங்களிருந்தும் அங்குள்ள ரைஸ்மில்கள் வருஷத்தில் அனேக மாஸங்களில் வேலையில்லாமலிருக்கின்றனவாம். எங்கே பார்த்தாலும் ஏகப்பட்ட ரைஸ்மில்கள் ஏற்படவே ஒருவருக்கும் லாபம் கிடையாது. அதனால், தற்போது அனேகம் ரைஸ்மில் சொந்தக்காரர்கள் "இந்த வியாபாரத்தில் ஏன் புகுந்தோம், இப்பொழுது மில்லை யாராவது போட்ட முதலுக்கு பாதி கொடுப்பதாயிருந்தால் விற்றுவிடுகிறோம்" என்று கதறுகிறார்கள். ஆதியில் அனுபோகமில்லாமல் ரைஸ்மில் ஸ்தாபிக்க ஏற்பட்டதால் அப்படி மில்களை ஸ்தாபித்ததில் அனேகவித நஷ்டங்கள் ஏற்பட்டனவாம். மில்லுக்கு வேண்டிய கட்டிடங்களையும்,

யந்திரங்களையும் தகுந்த நிபுணர்களுடைய உதவியைக்கொண்டு கட்டாமலும், வாங்காமலும் போனதால் அவைகளில் வேலை நடத்த முடியாமல் மறுபடியும் மறுபடியும் பணம் போட்டுப்புதிப்பித்ததில் செலவு ஒட்டிக்கு இரட்டியாகிவிட்டது. அரிசிசெய்வதிலேயே "ஹல்லர்" விதமென்றும்," கோன்" விதமென்றும், சில விதங்க ளிருக்கின்றனவாம். எந்த விதம் செய்தால் லாபம் வருமென்று தெரியாமல் முதலில் ஒருவிதப்படி செய்ய ஏற்பாடு செய்த பிறகு, அந்தவிதம் ஸரிப்படாமல் மற்றொரு விதப்படி செய்ய புது யந்திரங்கள் முதலியவைகள் வாங்கும்படி நேரிட்டு அதனால் நஷ்டமடைந்தவர்கள் சிலர். முதலில் உமியைப் போட்டு எரிப்பதா, நிலக்கரிபோட்டு எரிப்பதா அல்லது விறகுபோட்டெரிப்பதா என்று தெரியாமல் ஏற்பாடுசெய்துவிட்டு உத்தேசித்தபடி செய்யமுடியாமல் வேறுவிதமாக மாற்ற பணம் செலவழித்து நஷ்டமடைந்தவர் சிலர். போகப்போக பணம் எவ்வளவு இழுக்கும், மில்லை யெந்த இடத்தில் ஸ்தாபிக்கிறது, குத்தும் அரிசிக்கு விலைபோக இடமிருக்கிறதா, இன்னும் போட்டிமில்கள் ஏற்பட்டால் உத்தேசிக்கிறலாபம் கிடைக்குமா, மில்லை யென்னாளும் வேலைசெய்வதற்கு வேண்டிய நெல் எப்பொழுதும் கிடைக்குமா, அதை சேகரித்து வைப்பதற்கு எவ்வளவு முதல் தேவையாயிருக்கும், வேண்டியநெல்லை வேறொரிடத்திலிருந்து தருவித்து, அரிசியாக்கி, அதை விற்கக்கூடிய இடத்திற்கு அனுப்ப ஆகக்கூடிய ரெயில்சார்ஜ், வண்டி சார்ஜ் இவைகளுக்கெல்லாம் கொடுத்தும் லாபம்வர இடமிருக்கிறதா, என்னும் இந்த விஷயங்களையெல்லாம் தீரவிசாரித்து அதன்பிறகு ரைஸ் மில்கள் ஏற்படுத்த உத்தேசிப்பார்களென்று நம்புகிறோம். கிராமம் கிராமமாய் ரைஸ்மில் ஏற்பட்டாலும் நமக்கு ஸந்தோஷந்தான். நாம்வேண்டிக்கொள்வதெல்லாம் என்னவென்றால் இந்த வியாபாரத்தில் பணம்போட உத்தேசிக்கும் ஒவ்வொருவரும், முக்கியமாய் ஸ்வல்ப முதலாளி ஒவ்வொருவரும். இந்த வியாபாரத்தின் லாப நஷ்டங்களை வடக்குஜில்லாக்களில் ரைஸ்மில் ஸொந்தக்காரர்களிடத்திலிருந்து தீரவிசாரித்து, அதைப்பற்றிய ஒவ்வொரு விவரத்தையும் நன்றாக அறிந்துகொண்டு, பிறகு ரைஸ்மில் ஏற்படுத்த உத்தேசிக்கவேண்டும். யந்திரம் விற்கிறவர்கள் தங்கள் யந்திரம் முதல்தரமென்றும், அதையெவ்வளவோபேர்கள் வாங்கி உபயோகிக்கிறார்களென்றும் ஜாப்தா கொடுப்பார்கள். அப்படி, ஏற்கனவே உபயோகிக்கும் முதலாளிகளை தீரவிசாரித்து, தம் உத்தேசிக்கும் முறைப்படி உபயோகிக்க அந்த யந்திரம் ஸரிப்படுமா வென்பதைக் கண்டறிந்து கொள்ளவேண்டும். இதோடுகூட, தம் வேலைக்குத் தகுந்த வேறு தகுந்த யந்திரம் ஒன்றும் இல்லையாவென்றும் அறிந்துகொள்ளவேண்டும். வடக்கு ஜில்லாக்களில், ரைஸ் மில்களுக்கு வேண்டிய அனேக யந்திரத்தின் பாகங்களை சில விடங்களிலுள்ள ஸ்வதேச மெக்கானிகல் எஞ்ஜினீர்கள் செய்து விடுகிறார்களாம். இதனால், யந்திரங்களின் விலை, ரொம்ப குறைச்சலாக அடங்குகிறதாம். கடைசியாக இன்னொருதடவையும் சொல்லுகிறோம். ரைஸ்மில்லில் பணம் போட உத்தேசிக்கும் ஒவ்வொருவரும் அதில் அநுபோகமுள்ள கோதாவரி, கிருஷ்ணா ஜில்லா ரைஸ்மில் ஸொந்தக்காரர்களோடு கலந்துபேசி, அதைப்பற்றிய ஒவ்வொரு விஷயத்தையும் நன்றாய் அறிந்துகொண்டு, பிற்பாடு இந்த வியாபாரத்தில் இறங்கவேண்டும். இவ்வளவே நாம் கேட்டுக்கொள்வது.

## LIFE ASSURANCE.

BY
DIWAN BAHADUR K. KRISHNASAMI RAO, C. I. E.

## லைப் இன்ஷ்யூரென்ஸ்.

[இந்த வியாஸத்தைப் படிப்பதற்கு முன்னால் போனவருஷத்து "பிழைக்கும் வழி" யின் ஸெப்டம்பர் மாஸத்து ஸஞ்சிகையில் இன்ஷ்யூரென்ஸ் என்றால் என்னவென்று விளக்கி யெழுதிய பாராவைப் படிப்பது நலமென்றெண்ணி அதை இங்கே அச்சிட்டிருக்கிறோம். (ப-ர்)

இங்கிலீஷ் படித்தவர்கள் இன்ஷூரென்ஸ் என்றால் இன்னதென்று நன்றாய் அறிவார்கள். இது பணம்சேர்ப்பதற்கான ஒரு உபாயம். அனேக குடும்பஸ்தர்கள் ஸம்பாதிப்பதெல்லாம் செலவழிந்துபோய் பிற்காலத்தில் வயதான பிறகு உழைத்து ஸம்பாதிக்க சக்தியில்லாமல் தரித்திரத்தால் வருந்துகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஸம்பாதிக்கும் காலத்தில் வருஷம் ஒன்றுக்கு சில வருஷங்களுக்கு ஸ்வல்பக்கட்டணம் கட்டிவந்தால் ஒரு குறிப்பிட்டவயதில் கட்டணம் கட்டி வந்தவனுக்கோ அல்லது அவனுக்குப்பின்பு அவனுடைய வார்ஸுகளுக்கோ கட்டணத்துக்குத் தகுந்தபடி குறிப்பிட்ட தொகை கொடுப்பதற்காக சில வியாபாரக் கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு உதாரணத்தை எடுத்துக்காட்டினால் இந்த விஷயம் நன்றாய் விளங்கும். ஒருவன் ஸுமாராய் ஸம்பாதிக்கிறான். வந்ததெல்லாம் செலவழிந்துபோகிறது. வயது காலத்தில் தனக்கோ அல்லது தனக்குப் பிற்பட்டு தன்னுடைய குழந்தைகளுக்கோ ஆஸ்தி ஏற்படும் என்று எண்ண ஹேதுவில்லை. அல்லது அப்படி ஏற்பட்டாலும் அது ஸ்வல்பமாகவே தான் இருக்குமென்று தோன்றுகிறது. குழந்தைகளுக்கு 1000 ரூபா ஆஸ்தியாவது வைக்க வேணுமென்ற ஆசையிருக்கிறது. இவனுக்கு தற்போது வயது 45 என்று வைத்துக்கொள்வோம். 55 வயது வரையில் சரீரம் திடமாயிருந்து ஸம்பாதிக்கலாமென்று தோன்றுகிறது. இவன் என்னசெய்யக் கூடுமென்றால், ஒரு கம்பெனியில் இன்ஷூர் செய்தால் 1000 ரூபாய்க்கு வருஷம் ஒன்றுக்கு ரு. 72 முதல் 84 வரையில், கம்பெனிக்குத் தக்கபடி, கட்டணம் செலுத்தும்பட்சத்தில், இவன் செத்த பிறகு இவனுடைய வார்ஸுகளுக்கு 1000 ரூபாய் அந்தக் கம்பெனியார் கொடுப்பார்கள். கட்டணம் கட்டிய மறுவருஷத்தில் செத்துப்போனாலும் 1000 ரூபாய் கொடுத்துவிடுவார்கள். மொத்தத்தில் 10 வருஷத்துக்குமேல் கட்டணம் கொடுக்கவேண்டியதில்லை.

இன்ஷூரென்ஸ் கம்பெனிகள் என்ன விதமாய் கட்டணத்தை நிர்ணயம் செய்கிறார்களென்றால், அவர்கள் அந்தந்த தேசங்களில் பொதுவாக ஜனங்களுடைய ஆயுள் காலமென்ன என்று கணக்கிட்டுப் பார்த்து ஒரு ஸராஸரி ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். கட்டணமாகக் கிடைக்கும் பணங்களுக்கு ஸாதாரணமாக வட்டி என்ன கிடைக்கும், இன்ஷூரென்ஸ் தொழிலை செய்வதற்கு செலவு என்ன ஆகும், என்று இப்படிக்கெல்லாம் கணக்குப்போட்டுக் கொள்கிறார்கள். ஒருவன் 1000 ரூபாய்க்கு இன்ஷூர் செய்யவேண்டுமென்றால், அவன் கேட்கும் காலத்தில் அவனுக்கு என்னவயதோ அதை மேலேசொன்ன ஸராஸரி வயதிலிருந்து கழித்து, பாக்கிவருஷங்களில் எத்தனை ரூபாய் மேனிக்கு வருஷாவருஷம் கட்டணம் கட்டினால் அவையெல்லாம் சேர்ந்து 1000ம் ரூபாயாகுமென்று பார்த்து, கட்டணத்தை நிர்ணயம் செய்கிறார்கள்.]

ஆயுளை இன்ஷியூர் செய்வதால் உண்டாகும் நன்மைகளைச் சொல்லிமுடியாது. ஸம்பாதிக்கிறவர்கள் முன்யோஜனையோடு புத்திசாலித்த

னமாய் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்தால் அவர்கள் அந்திகாலத்திலோ அல்லது இறந்து போன பிறகோ அவர்களுடைய குடும்பங்கள் கஷ்டப்படாமல் கௌரவமாய் ஜீவிக்க ஹேது வுண்டு. இப்படி ஆயுளை இன்ஷ்யூர் செய்வது நாம் மேல் நாட்டாரிடத்திலிருந்து கற்றுக் கொண்ட உபாயமாகும். இதில் பரோபகாரம், தர்மம், தனக்குத்தானே உதவி செய்து கொள்ளுதல், ஆகிய எல்லா குணங்களும் அடங்கி யிருக்கின்றன. முதலில் இந்த உபாயத்தைக் கண்டுபிடித்ததற்குக் காரணம் கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்ற எண்ணமாகத்தானிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. லைப் இன்ஷியூரென்ஸை லாபம் ஸம்பாதிக்க ஏற்படுத்தினார்க ளென்று சொல்வது ஸரியல்ல. இன்ஷியூர் செய்து விட்டு சீக்கிரம் செத்துப்போகிறவர்களுடைய குடும்பங்களுக்கு கம்பெனிகளில் முதல்போடும் ஷேர் ஹோல்டர்களும், ஆயுளை இன்ஷியூர் செய்துவிட்டு வெகுநாள் ஜீவித்திருக் கிறவர்களுமே உபகாரஞ் செய்கிறவர்கள். இது இவர்கள் செய்யும் பெருந்தர்மமல்லவா? மனுஷ்ய ஆயுளில் ஒன்றையும் நிச்சயமாகச் சொல்ல முடியாமல் போனாலும் மனுஷ்யன் சாவது மட்டும் நிச்சயமென்று உறுதியாகச் சொல்லலாம். ஆகையால் ஒவ்வொருவனும் அவனுக்குப் பிற்காலம் அவனைச் சார்ந்தவர்கள் கஷ்டப்படாமல் ஜீவனஞ் செய்ய தகுந்த ஏற்பாடு செய்வது அவசியம். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் அரசர்களும் கோடீசுவரர்களுங்கூட எந்த நிமிஷத்தில் என்ன கதி வருமோ வென்று அவரவர்களுடைய ஆயுளை இன்ஷியூர் செய்திருக்கிறார்கள். சீனதேசத்துக்கு அரசனா யிருந்தவனுக்கு என்னகதி வந்து விட்டது பாருங்கள்! தனக்குப் பிற்காலம் தன் குழந்தை குட்டிகள் கஷ்டப்படாவென்று எண்ணிக்கொண்டு சா கிறவனுடைய மனதின் ஸமாதானத்துக்கு எதுதான் ஈடாகும்?

இந்தியாவில் அநேக தகுந்த ஸ்வதேச இன்ஷியூரென்ஸ கம்பெனிகள் நன்றாய் வேலை செய்து வருகின்றன. அவைகளுக்குள்ள ஸொத்துகளெல்லாம் இந்தியாவிலேயே இருக்கின்றன. அவைகளுடைய டைரெக்டர்கள் கம்பெனியைச் சேர்ந்தவர்களுடைய கண்முன்னேயேவேலைசெய்து வருகிறார்கள். இங்கிலாந்து முதலிய அந்நிய தேசத்துக் கம்பெனிகளுக்கோ ஸொத்துக்கள் அநேகமாய் இந்தியாவில் இல்லை. அவைகள் இந்தியாவிலுள்ள கோர்ட்டுகளுக்கும் உட்பட்டவைகளல்ல. இப்போது பாஸ் செய்திருக்கும் இந்தியன் லைப் இன்ஷியூரென்ஸ் ஆக்ட்படிக்கு இந்தியாவிலுள்ள லைப் இன்ஷியூரெனஸ் கம்பெனிகளெல்லாம் ஸொத்துள்ளவைதானென்று காட்ட 2° லக்ஷம் ரூபாயை கவர்ன்மெண்டாரிடத்தில் டிபாஸிட்டு செய்யவேண்டும். இங்கிலீஷ் கம்பெனிகள் இப்படி செய்யவேண்டியதில்லை. இந்தியர்கள் இன்ஷியூர் செய்ய உத்தேசிக்கும்போது மேற்சொன்னவைகளை யெல்லாம் கவனித்து ஸ்வய நன்மையை உத்தேசித்தும், தேசாபிமானத்தை உத்தேசித்தும், இந்தியர்களால் நடத்தப்பட்டுவரும் கம்பெனிகளிலேயே இன்ஷியூர் செய்யவேண்டும். இன்னும், இந்தியாவிலுள்ளஇன்ஷியூரென்ஸ்கம்பெனிகளின் கணக்குகளை ஆக்சுவரி என்றுசொல்லப்படும் நிபுணர்களான கணக்கர்களால் கவர்ன்மெண்டார் பரிசோதனைசெய்து வருவார்கள். தவிர, இருபது அல்லது இருபதுக்கு மேற்பட்ட பாலிஸி ஹோல்டர்கள் அதாவது ஆயுளை இன்ஷியூர் செய்திருக்கிறவர்கள் மனு செய்துகொள்ளும்பக்ஷத்தில் தக்க இன்ஸ்பெக்டர்களைக் கொண்டு ஸம்பந்தப்பட்ட இன்ஷியூரென்ஸ் கம்பெனி விஷயங்களைப்பற்றி விசாரணை செய்வார்கள். இப்படி விசாரணை செய்து நல்ல கம்

பெனியாகத் தோன்றுவிட்டால் அதை நிறுத்தி விடும்படி கவர்ன்மெண்டார் உத்தரவுசெய்ய லாம். மொத்தத்தில், ஐக்கிய நாணயச்சங்கங் களை எப்படி மேல்பார்வை பார்த்துவருகிறார் களோ அவ்விதமாகவே இன்ஷியூரென்ஸ் கம் பெனிகளையும் மேல் விசாரணை செய்துவருவா ர்கள். இப்படி கவர்ன்மெண்டார் தணிக்கை செய்து வருவதால் இந்திய இன்ஷியூரென்ஸ் கம்பெனிகளைப்பற்றி எவ்விதத்திலும் ஸந்தே கிக்க நியாயமில்லை. இந்திய இன்ஷியூரென்ஸ் கம்பெனிகள் கிரமமாய் வேலைசெய்து வருவத ற்கு கவர்ன்மெண்டாருடைய மேல்பார்வை மட்டும் போதாது. கம்பெனியில் பணம் போட்டிருக்கும் ஒவ்வொரு ஷேர்ஹோல்டரும் இன்ஷியூர் செய்திருக்கும் ஒவ்வொரு பாலிஸி ஹோல்டரும் அவரவர்களுடைய கம்பெனி யின் விஷயமாக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இன்ஷியூர் செய்திருக்கிறவர்கள் ஒருக்கால் அசிலாக்கியமாயிருந்தாலும் கம்பெ னியில் பணம் போட்டிருக்கும் ஷேர் ஹோல் டர்கள் அப்படியிருக்க நியாயமே இல்லை. அந் நியதேசத்து இன்ஷியூரென்ஸ கம்பெனிக் காரர்கள் மும்மரமாய்ப்போட்டிபோட்டு வேலை செய்து வருகிறார்கள். இன்ஷியூரென்ஸ் விஷ யத்தில் இவர்களுக்கு எதிரே நின்று இந்தியர் கள் வேலைசெய்யக்கூடுமோ வென்பது இப் பொழுது பரீக்ஷையாகிற தென்று சொல்ல வேண்டும். ஆகையால் தேசாபிமானியாயுள்ள ஒவ்வொரு இந்தியனும் தன்னால் இயன்ற மட்டும் இந்த விஷயத்தில் சிரத்தை காட்ட வேண்டும். ஐக்கியத்தோடு பலபேர் சேர்ந்து வேலைசெய்யும் பக்ஷத்தில் வியாபாரம் கைகூடு மென்பதற்கு ஸந்தேகமே இல்லை. வியாபார விஷயங்களில் எது எப்படிப் போனாலென்ன என்று அசிலாக்கியமாயிருப்பதால் வியாபாரம் பாழாய்ப்போகிறது. இப்படிக்கிராமல் அதில் சிரத்தை எடுத்துக்கொண்டு பிடிவாதமாய் வேலைசெய்யும் பக்ஷத்தில் வியாபாரம் கை கூடும் என்பதிற்கு ஸந்தேகமே இல்லை.

கே. கிருஷ்ணஸாமி ராவ்.

## THE CARE OF THE COCOANUT.

BY

N. APATHSAHAYA IYER.

### தேன்னைமரப் பாதுகாப்பு.

தென்னைமரத்திலிருந்து உற்பத்தியாகும் ஒவ்வொரு ஸாமானும் மிகவும் பிரயோஜன முள்ளதாயிருக்கிற தென்பது ஸகலரும் அறி ந்த விஷயம். முக்கியமாய் தேங்காயெண் ணெய், ஸோப், மெழுகுவர்த்தி, முதலியவை தயார்செய்ய அதிக உபயோகமுள்ளதா யிருப் பதால் தேங்காய் அயல் நாடுகளுக்கு ஏராள மாய் ஏற்றுமதியாகிறது. அதனாலேயே தேங் காயின் விலை ஸுமார் 10 வருஷங்களுக்கு முந்தி இருந்ததைவிட இப்போழுது மூன்று மடங்கு ஜாஸ்தியாயிருக்கிறது. சற்றேறக்கு றைய 4 மடங்கும் விற்று வருகிறது. விலை அதிகமாய் ஏறி இருப்பதால் திருட்டும் ஜாஸ்தியாகிறது. குடியிருப்பு வீட்டுக் கொல்லை களிலிருக்கிற மரங்களிலேயே திருட்டுப்போ கிறதென்றால் தோப்பு முதலிய தூரமான இடங்களிலிருக்கும் மரங்களைப்பற்றிச் சொல் லவேண்டியதில்லை. இதற்காக பலவிடங்களில் அநேகவிதமான தந்திரங்கள் செய்துவருகி றார்கள்.

1. சில விடங்களில் ஒரு ஆள் உயரத்தி ற்குமேல் மரத்தைச் சுற்றிலும் பனைமட்டை யை அடித்து வைக்கிறார்கள். இதனால் ஏறும் போது சத்தம் கேட்பதுந்தவிர தாராளமாய் ஏறி இரங்கவும் முடியாது.

2. சிலவிடங்களில் ஈச்சமட்டையைச் சுற்றி வைக்கிறார்கள்.

3. சில விடங்களில் சப்பாத்தி முள்ளை அடித்து வைக்கிறார்கள்.

4. சில விடங்களில் கருவை முள்ளைக் கட்டி வைக்கிறார்கள்.

5. சில விடங்களில் மூங்கில் முள்ளைக் கட்டிவைக்கிறார்கள்.

6. சில விடங்களில் ஆணியை அடித்து வைக்கிறார்கள்.

7. சில விடங்களில் தென்னை மட்டையை விரியலாகமுடைந்து சுற்றி வைக்கிறார்கள்.

இத்தியாதி உபாயங்களினால் கொஞ்சம் தடைபட்டபோதிலும் திருடர்களின் யுக்திகளினால் இவைகளெல்லாம் பலிக்காமல் அவர்களுடைய காரியங்கள் வழக்கம்போல் நிறைவேறிக்கொண்டு வருகின்றன.

கடைசியாக, நாம் சென்ற வருஷத்தில் பரீக்ஷார்த்தமாக இங்கிலீஷில் "பார்பெட்வையர்" என்று சொல்லப்படும் இரும்பு முள்கம்பியை மரம் ஒன்றுக்கு 6 கெஜத்தை ஒரு ஆள் உயரத்திற்குமேல் ஒரு கஜ அகலம் சுற்றி அதற்கென்று ஏற்பட்டிருக்கிற ஹுக் ஆணியைக் கொண்டு அடித்துவைத்தோம். ஷை கம்பியில் ஸுமார் 12 ஆணிகள் வரையில் பல இடங்களில் அடிக்கப்பட்டுப் போனபடியால் எளிதில் கம்பியை எடுக்கக்கூடவில்லை. ஷை கம்பி சுற்றியிருக்கிற வரையில் ஏணியைவைத்துக் கொண்டு அதற்குமேல்தான் ஆள் ஏறவேண்டியிருக்கிறது.

இந்த உபாயத்தினால் தென்னைமரங்களில் கம்பி அடித்த நாள்முதல் திருட்டுப்போகிறதே யில்லை. இப்பொழுது காய்கள் பழுத்த பிறகுதான் பறித்து வருகிறோம்.

ஷை கம்பியை அடிக்கும்போது சிலர் விஷம் தோய்த்த கம்பியென்றும், அதனால் மரங்களின் காய்ப்புக்கு ஏதாகிலும் கெடுதி உண்டாகுமென்றும் ஸந்தேகித்தார்கள். கம்பி அடித்து ஒரு வருஷமாகிவிட்டது. காய்ப்பு முன்போலிருக்கிறது. மரத்திற்கு யாதொரு கெடுதலுமில்லை.

இதை அனுபவத்தில் பார்த்த கிராமத்தார்கள் தங்கள் மரங்களிலும் இந்தக் கம்பியை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டார்கள். அநேக மரங்களுக்கு அடித்தாகிவிட்டது. மரம் ஒன்றிற்கு அடிகூலி உள்பட நாலு அணாத்தான் செலவாகிறது.

இவ்வியாஸத்தைப் படிக்கும் ப்ரதி நண்பரும் தங்கள், தங்கள் மரங்களில் இக்கம்பியை உபயோகிப்பதுடன் தங்கள் நண்பர்களையும் இம்மாதிரி செய்யச்சொல்லி லாபமடையும்படி செய்வார்களென்று நம்புகிறோம்.

என். ஆபத் ஸகாய அய்யர்.

## SAVINGS BANKS IN EUROPE.

BY

C. S. SIVARAMA KRISHNA SARMA B.A B.L.

### ஐரோப்பாக்கண்டத்தின் க்ஷேமநிதிகள்

### (ஸேவிங்ஸ்பாங்கிகள்)

கிரமமான க்ஷேமநிதிகள் என்று சொல்லப்படும் ஸேவிங்க்ஸ் பாங்கிகளுக்கும் அமானத்து அதாவது டிப்பாஸிட்டு வாங்கும் இதர நிதிகளுக்கும் (பாங்கிகளுக்கும்) அதிக வித்தியாஸம் உண்டு. ஸாதாரண நிதிகள் தங்கள் தங்கள் வியாபாரத்துக்குதவியாக டிப்பாஸிட்டை வேண்டுகின்றன. க்ஷேமநிதிகளின் கருத்தோ அப்படியல்ல; குடிகளிடத்தில் சிக்கின ஸ்வபாவத்தைப் பெருக்குவதுதான் இந்த நிதிகளின் கருத்து; சிக்கனமாவது பணத்தை க்ஷேமிப்பது. வருமானத்தை வீண்செலவிடாமல் வருமானத்துக்குத் தக்கபடி சிக்கனமாய்க் குடித்தனம் செய்துகொண்டு, கஷ்டகாலத்துக்கு உதவும்படிக்கு, வருமானத்தில் சிலபாகத்தை மிச்சம் பிடித்து வைப்பதுதான் க்ஷேமிப்பது. க்ஷேமநிதிகள் குடிகளிடமிருந்து சிறுகச் சிறுக மிச்சம் பிடித்த சிறு திரவியங்களைவாங்கி, நாளாவட்டத்தில் பெருக்கி, பெருந்திரவியமாக்கிக் கொடுப்பதே இவைகளின் கருத்து. ஸாதாரண நிதிகளின் நோக்கம் லாபம் ஸம்பாதிப்பது ஒன்றேதான். க்ஷேமநிதிகளின் நோக்கமோ, குடிகளின் விஷயஸுகத்தையும் நன்னடவடிக்கையையும், பெருக்குவதுதான். ஸாதாரண நிதிகளில் பங்குக்காரர்களின் நன்மையே முக்கியமானது. க்ஷேமநிதிகளிலோ, டிப்பாஸிட்டு வைப்பவர்களின் நன்மையே முக்கியமானது. ஸாதாரண நிதிகள் வர்த்தக நிதிகளாம்; க்ஷேமநிதிகள் பரோபகார நிதிகளாம். மேலும், ஸாதாரணநிதிகள் பெருந்தொகைகளை டிப்பாஸிட்டாக வாங்கிக்கொண்டு, டிப்பாஸிட்டர்களுக்குச் செக்குகளின் (பணம் கொடுக்கும்படி எழுதிக் கேழ்க்கும் சீட்டுகள்) பேரில் சிறு

தொகைகளாக அப்போதைக்கப்போது திருப்பிக்கொடுக்கின்றன. க்ஷேமநிதிகளோ, அதிக சிறு தொகைகளை டிப்பாஸிட்டாக பெற்றுக்கொண்டு நாளாவட்டத்தில் பெருந் தொகையாகப் பெருக்கி, திருப்பிக் கொடுக்கின்றன.

2. உண்மையான க்ஷேமநிதிகள் அனுஸரிக்கவேண்டிய முறைகள் என்னவென்றால் :— (1) க்ஷேமநிதிகள் டிப்பாஸிட் வைப்பவர்களுக்கு அத்தியந்த ஸமீபத்தில் இருக்கவேண்டும் ; (2) டிப்பாஸிட் வைப்பவர்கள் எவ்வளவு சிறு தொகைகொண்டுவந்தாலும்பெற்றுக்கொள்ளவேண்டும். இங்கிலாந்தில் "அணு க்ஷேம நிதிகள்" (பென்னி பாங்கி) கூட ஏற்படுத்தியிருக்கிறார்கள். (3) ஒரு தடவையில் அல்லது ஒரு வருஷத்தில் இவ்வளவு தொகைதான் டிப்பாஸிட் வைக்கலாம் என்பதற்கும், டிப்பாஸிட்டர்கள் மொத்தத்தில் இவ்வளவு தொகைதான் டிப்பாஸிட் வைக்கலாம் என்பதற்கும், ஒரு மிதமான திட்டத்தைஏற்படுத்தவேண்டும். (4) டிப்பாஸிட்டுக்கு மிதமான வட்டி நியாயமாய்க்கொடுக்கவேண்டும்; வட்டியை சுளுவாய் கணக்கிடுவதற்காக, வட்டிப் பொறுப்பான குறைந்ததொகையை குறிக்கவேண்டும்; அதாவது குறைந்ததொகை 1 ரூபாயாக வைத்துக்கொண்டால் இதற்கு வட்டி மாஸம்ஒன்றுக்கு 1 பை வீதம் வருஷம்ஒன்றுக்கு 100-க்கு $6\frac{1}{4}$-வீதம் ஆகிறது. (5) சிறு தொகைகளைக் கேட்டவுடனும், பெருந்தொகைகளை நோட்டீஸ் கொடுத்த பிறகும், திருப்பிக்கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும் (6)க்ஷேம திரவியங்களை நிராக்ஷேபணையான ஆதாரங்களில் (ஸெக்யூரிடீஸ்) போடவேண்டும் ; திரவியங்களை வீண் மனோராஜ்ய வியாபாரங்களில் போடுவதை முற்றிலும் ஒழிக்கவேண்டும். டிப்பாஸிட்டு திரவியத்தில் சிலபாகத்தை வேண்டும்போது பணமாக்கிக் கொள்ளக்கூடிய ஆதாரங்களில் போடவேண்டும். (7)டிப்பாஸிட்டு வைப்பவர்களுக்கு க்ஷேமநிதிகள் தகுந்த ஆதாரம் காட்டவேண்டும் ; அதாவது நிதியை ஸ்தாபித்தவர்களின்பொறுப்பாவது,நிதியின்பரிபாலகர்களின் பொறுப்பாவது (ட்ரஸ்டீஸ்) ஒருபொது சங்கத்தின் பொறுப்பாவது, காட்டவேண்டும். தகுந்த பங்கு முதலாவது காப்பு திரவியமாவதுகாட்டவேண்டும். (8)க்ஷேம நிதியின் காரிய விசாரணையை இலவசமாகவே நடத்தவேண்டும் ; ஆனால் நிதியில்முதல் வைத்திருப்பவர்களுக்கு மட்டும், லாபம் கிடைத்தால் அதில் ஒருமிதமான பாகம் கொடுக்கலாம் ; ஆனால் இந்தலாபம் இவ்வளவு தொகைக்குமேல்படக்கூடாதென்று திட்டம் செய்யவேண்டும். (9) எவ்வழிகளில் திரவியத்தை உபயோகித்தால் குடிகள் அமோகமான க்ஷேமத்தை அடையக்கூடுமோ அவ்வழிகளிலேயே திரவியத்தை செலவிடவேண்டும். கூடுமான வரையில் க்ஷேம திரவியத்தை க்ஷேமித்த இடங்களிலேயே செலவிடவேண்டும். மேல்கண்ட அம்சங்களால், உண்மையான க்ஷேம நிதிகளுக்கும், பரபத்தியத்தையே (பணம் கொடுக்கல் வாங்கல் பண்ணுதல்) முக்கிய கருத்தாக நாடி நடத்தும் ஸாதாரண நிதிகளுக்கும் உள்ள பெரும் வித்தியாஸங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

3. மேலும் சுத்தமாய் விவஸாயத்தையே கைகொண்டிருக்கும் தேசத்தில் நிதிகள், க்ஷேம நிதிகளாக மாத்திரம் இருந்தால் அவ்வளவு பிரயோஜனமில்லை. க்ஷேமநிதிகள் பரபத்திய நிதிகளாகவும் இருக்கவேண்டும். ஏனெனில், குடியானவனுக்கு தான் பயிரிட்டு க்ஷேமித்த திரவியத்தை தனக்கு மறுபடி விவஸாயத்துக்கு வேண்டும் வரையில், மத்திய காலத்தில் பத்ரமாய்ப்போட்டு வைப்பதற்குத்தான்க்ஷேம நிதி தேவை. உண்மையில் குடியானவனுக்கு அவன் நிலந்தான் க்ஷேமநிதி. ஆகையால் குடியானவனுக்குத் தேவையான நிதி க்ஷேம நிதி

யாகவும் பரபத்திய நிதியாகவும் இருக்கவேண்டும். உண்மையில் ஐரோப்பா கண்டத்தில் சில தேசங்களிலும், அமெரிக்கா கண்டத்தில் ஐக்கிய நாடுகளிலும், க்ஷேம நிதிகள் கிராமாந்தரத்தில்சிறுகுடியானவர்களுக்கும்,ஜனஸகாய நிதிகளுக்கும், தங்கள் திரவியங்களை ஏராளமாகக் கடன் கொடுத்து அபார நன்மையை விளைவித்திருக்கின்றன.

4. க்ஷேம நிதிகளில் ஸொந்த க்ஷேமநிதிகள் என்றும் ராஜாங்க க்ஷேமநிதிகள் என்றும் இருவகையுண்டு. ஸொந்த க்ஷேமநிதிகள் என்றால்,ஸொந்த முதலாளிகள் முதல்வைத்து லாபம் ஸம்பாதிக்க ஏற்படுத்திய க்ஷேமநிதிகள். ராஜாங்க க்ஷேம நிதிகள்என்றால், ராஜாங்கத்தார் ஏற்படுத்திய நிதிகள். மேலும், இன்னொருவகையில் அதாவது திரவியத்தை உபயோகிப்பதில், நிர்பந்தமுள்ளநிதிகள் என்றும், நிர்பந்தமில்லாத நிதிகள் என்றும்,இருவகுப்பாகப் பிரிப்பதுமுண்டு. இங்கிலாந்து, ப்ரான்ஸ், இந்த தேசங்களில் ஸொந்த க்ஷேம நிதிகளும், ராஜாங்க க்ஷேம நிதிகளும் உண்டு ; ஆனால் க்ஷேம திரவியங்களை யெல்லாம் க்ஷேமநிதிகள் கண்டிப்பாய் ஸர்க்கார் கஜானாவில்போடவேண்டும். இடாலி, ஆஸ்திரியா, முதலான தேசங்களிலும், ஸொந்த க்ஷேமநிதிகளும் ராஜாங்க க்ஷேம நிதிகளும் இருக்கின்றன. ஆனால் ஸொந்த க்ஷேமநிதிகள் தங்கள் திரவியங்களை யுக்தானுஸாரமாய்உபயோகிக்கலாம். பேல்ஜியம், ருஷியா இந்த தேசங்களில் க்ஷேமநிதிகள் தங்கள்திரவியங்களைஒருபிரதானசங்கத்துக்கு ஸெண்டிரல் பாங்கிச்கு) அனுப்புகிறார்கள்.) பிரதானசங்கத்தார், ராஜாங்கத்தார் உத்திரவாதம் பெற்று, சட்டவரம்பு தாண்டாமல், பல வழிகளிலும் திரவியத்தை உபயோகிக்கிறார்கள். ஜெர்மனி தேசத்தில் க்ஷேம நிதிகள் முக்கியமாய் பொது ஸபைகளால் ஸ்தாபித்த நிதிகளே;அவைகள் கிராமஸமுதாய க்ஷேம நிதிகள், தாலுகா க்ஷேம நிதிகள், ஜில்லா க்ஷேம நிதிகள்; ஆனால் இந்நிதிகள் தங்கள் திரவியத்தை இஷ்டம்போல் உபயோகிக்கலாம். அமெரிக்காவில் ஐக்கியநாடுகளில் க்ஷேம நிதிகளெல்லாம் ஸொந்த க்ஷேமநிதிகளே ; சில நிபந்தனைகளுக்குள்பட்டு திரவியங்களை இந்நிதிகள் யுக்தானுஸாரமாய் உபயோகிக்கலாம். ஜெர்மனியிலும் ஐக்கிய நாடுகளிலும், ராஜாங்க க்ஷேமநிதிகள் கிடையாது. இங்கிலாந்திலும், ப்ரான்ஸிலும், க்ஷேம நிதி திரவியங்கள் முற்றிலும் ஸர்க்கார் கஜானாவில் போய் விழுகிறது ; ராஜாங்க க்ரியங்களில் உபயோகப்பட்டுவருகிறது. தொகை வேண்டும்போது ராஜாங்கத்தார் திருப்பிக் கொடுக்கிறார்கள் ; ஆனால் இந்த திரவியத்தை குடிகளுக்கு கடன் கொடுத்து உதவுகிறதில்லை. ப்ரான்ஸில் 1891ஹூ த்தில் க்ஷேமநிதிகளில் 7,000,000 டிப்பாஸிட் கணக்குகள் இருந்தன, இவைகளின் மொத்தம் £ 140,000,000, (210 கோடி ரூபாய்) ஆயிற்று.

5. ஐரோப்பா தேசத்து க்ஷேமநிதிகள் பரபத்தியத்துக்கு ஸகாயகரமா யிருக்கின்றன. அதாவது ; (1) க்ஷேமநிதிகளே ஜனஸகாயநிதிகளை ஸ்தாபிக்கின்றன. (2) ஜனஸகாய நிதிகளுக்கு கடன்கொடுத்து உதவுகின்றன. (3) தங்கள் திரவியங்களையும், குடிகளுக்கு கடன் கொடுத்து உதவுகின்றன. (4) ஜனஸகாய நிதிகளுக்கு கிளைச் சங்கமாக இருந்துகொண்டு க்ஷேம திரவியங்களைப் பெற்றுக்கொள்கின்றன

6. ஜெர்மனி க்ஷேம நிதிகளுக்கு அத்தேச கவர்ன்மெண்டார் பொதுச்சட்டம் ஒன்றை ஏற்படுத்தவில்லை ; பிரதி மாகாணமும் தனிச் சட்டம் செய்திருக்கிறது. ப்ரஷ்யா மாகாணத்தை உதாரணமாக எடுத்துக்கூறுவோம். ப்ரஷ்யாவில் போஸ்டல் ஸேவிங்ஸ் பாங்கிகள் (ராஜாங்க க்ஷேமநிதிகள்) கிடையாது. பிரதேச அரசாக்ஷிக்கூட்டத்தார் (அதா

வது மகாணஸபை, ஜில்லாஸபை, தாலுகா ஸபை, கிராம ஸபை) க்ஷேமநிதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்நிதிகள் ராஜாங்க உத்திரவாதம் பெற்றவை. ராஜாங்க அதிகாரிகளால் காரியவிசாரணை செய்யப்பட்டு வருகின்றன: ஆனால் வெகுவாய் ஸ்வயாதிகாரமுள்ளவை. திரவியத்தை உபயோகிப்பதிலும், அநேகமாய் ஸ்வயாதிகாரமுள்ளவை. ஆனால் ராஜாங்கத்தார் கண்காணிக்கை வைத்திருக்கிறார்கள். 1890-91வருஷத்தில் 3,540 க்ஷேமநிதிகள் இருந்தன. அதாவது ஸராஸரி 8,462 குடித்தொகைக்கு ஒரு நிதியும், ஸராஸரி 38 சதுரமைலுக்கு ஒரு நிதியும், ஆகிறது. 5,592,662 டிப்பாஸிட்டுக் கணக்குள் இருந்தன. அதாவது ஸராஸரி 18 ஜனத்துக்கு ஒரு கணக்குவீதம் ஆகிறது. மொத்த டிப்பாஸிட்டுக் கணக்குகளில், 100-க்கு 29 பங்குகள் £3 (45 ரூ.) க்குள்பட்டது, 6½ பங்கு £3-க்கு மேல்பட்டும், £7½-க்குள் பட்டும் இருந்தது. வெகுவாய் கணக்குகளில் பாதிக்கணக்குகள் £7½-க்குள்பட்டிருக்கின்றன. அந்த வருஷத்தில் டிப்பாஸிட்டின் மொத்தம் £164,078,550 இருந்தது; அதாவது, குடித்தொகையில் தலை ஒன்றுக்கு ஸராஸரி £5½-வீதமாகிறது.

7. டிப்பாஸிட்டு திரவியத்தில் பாதிக்கு மேல் கிராமாந்தரத்தில் நில அடமானத்தின் மேல் கடன் கொடுத்திருக்கிறார்கள். வட்டி வருஷம் 1-க்கு 100-க்கு 4⅔ வீதம். ஸராஸரி 32 குடியானவர்களில் ஒருவன் இந்நிதிகளில் நில அடமானத்தின்மேல் கடன்வாங்கி யிருக்கிறான். இந்நிதிகள் கிராமாந்தரங்களில் இருப்பதால், கடன் வாங்குபவர்களின் அந்தஸ்தையும் அடமான ஸொத்தின் நிலைமையையும் அடிக்கடி கண்காணித்து வரக்கூடும். டிப்பாஸிட்டுகள் நிரம்பியிருக்கும் பெருநிதிகளிலோ இந்த சிறு வேலைகளைச் செய்யமுடியாது. இந்த க்ஷேமநிதிகள் கடன்காரன் எப்பொழுது கொடுத்தாலும் சிறு தொகைகளைப் பெற்றுக்கொண்டு, வட்டிபோட்டுப் பெருக்கி, கடன் வாயிதாகாலத்தில் கடனுக்கு வரவு வைத்துக் கொள்கின்றன. அதாவது ஒருவன் 3 ஷில்லிங்கு (36 அணா) கடன் வாங்கினால், வாரம் 1 அணா வீதம் கொடுத்து கடனைத் தீர்த்துக்கொள்ளலாம்.

8. க்ஷேமநிதிகளை ஸ்தாபிப்பதற்கும் காரியவிசாரணை செய்வதற்கும் ப்ரஷ்யா அரசாக்ஷியார் தக்க சட்டதிட்டம் செய்திருக்கிறார்கள்.

9. கிராமாந்தரத்து க்ஷேமநிதிகள் கிராம ஸமுதாய ஸபைகளால் அவர்கள் உத்தரவாதத்தின்மேல் ஸ்தாபிக்கப்படுகின்றன. கிராம ஸமுதாய ஸபை மெம்பர்களில் சிலரைப் பொறுக்கி யெடுத்து ஒரு கமிட்டியாக ஏற்படுத்தி, சிப்பந்திகளை நியமித்து இந்நிதிகளை நடத்தி வருகிறார்கள். இந்நிதிகள் ஸ்வாதந்தரியமாய் வேலை நடத்திவந்தாலும் கிராம ஸமுதாய ஸபைகளின்மேல் விசாரணைக்கு உள்பட்டிருக்கின்றன. ஆயினும் நிதியின் திரவியம், கணக்கு, முதலியவை பிரத்தியேகமாய் வைக்கப்பட்டிருக்கின்றன.

10. ஒரு கிராமத்தார் க்ஷேமநிதியொன்றை ஸ்தாபிக்க விருப்பம்கொண்டால், அவர்கள் விருப்பத்தை அதிகாரிகளுக்கு அறிவிக்கவேண்டும். நிதியின்நோக்கம், பத்ததிகள், நிபந்தனைகள் இவைகளை ராஜாங்கத்தாருக்கு அறிவிப்பதுடன், இவர்கள் விருப்பத்தை கலெக்டருக்கும் தெரிவிக்கவேண்டும். கலெக்டர் யோசிக்கவேண்டிய அம்சங்களாவன: (1) திரவியம் பத்திரமாக இருக்குமா? (2) நிபந்தனைகள் கிரமமாக இருக்கின்றனவா? (3) முக்கியமாய் ஏழைக்குடிகள் முகுத்தபணத்தைப்போட்டுவைப்பதற்கும், அவர்களுக்குகடன்கொடுப்பதற்கும்தக்கஸௌகரியங்கள் செய்திருக்கின்றனவா? ராஜாங்கத்தார் அனுமதி கொடுத்த பிறகுதான் க்ஷேமநிதிகள் வேலை துவக்கவே

ண்டும். அதுமுதல் இந்நிதிகளை அதிகாரிகள் மேல் விசாரணை செய்கிறார்கள். நிதிகள் கிரமமாய் வேலைசெய்து வருவதையும் வேலைசெய்யும் பத்ததிகளையும் விசேஷமாய் கவனித்து வருகிறார்கள். கணக்குகளையும் காரியங்களையும் பரிசோதிக்கிறார்கள். அக்கிரமங்களைக் கண்டிக்கிறார்கள். நிதிகள் வருஷாந்தர விருத்தாந்தம் ஒன்று கிரமப்படி தயாரித்து கலெக்டருக்கு அனுப்பவேண்டும்; பிரதேச கெஜட்டிலும் பிரசுரப்படுத்தவேண்டும். இந்நிதிகளின் விருத்தாந்தத்தை கலெக்டர் ராஜாங்க மந்திரிக்கு அனுப்பவேண்டும்.

11. ஆனால் உள்வயண வேலையில் இந்நிதிகளுக்கு அதிக ஸ்வதந்தரமுண்டு. ஆரம்பத்தில் சிப்பந்திகள் சம்பளமின்றி வேலை செய்கிறார்கள். காரியதர்சிகள் கௌரவத்துக்காக உழைக்கிறார்கள். நிதியின் வேலைகள் பெருகவே சிப்பந்திகளுக்குச் சம்பளம் போடுகிறார்கள். ஆரம்பத்தில் ஒரு கணக்குப் பிள்ளையைத்தான் வைத்துக்கொள்கிறது; இவர் நடவடிக்கைக்கு ஜாமீன் கொடுக்கவேண்டும். தாலூகா நிதிகளில்கூட நிருவாக சபை மெம்பர்கள் (டைரெக்டர்கள்) இலவசமாகவே வேலை செய்கிறார்கள். இங்கிலாந்தில் ட்ரஸ்டிஸ் ஸேவிங்ஸ் பாங்கி நிதிகளிலும் ட்ரஸ்டிகளும் (பரிபாலகர்கள்) மானேஜர்களும் (காரியதர்சிகள்) இலவசமாகத்தான் உழைக்கிறார்கள்.

12. கிராம ஸமுதாயஸபை, க்ஷேமநிதியின் கடன்களுக்கெல்லாம் உத்தரவாதமாயிருப்பதால், இது நிதியின் உறுதிக்கும் பொதுஜன விசுவாஸத்திற்கும் முக்கிய ஆதாரமாக இருக்கிறது. ஆகிலும் க்ஷேமநிதியின் திரவியத்துக்கு எவ்வித அபாயமும் நேரிடாமலிருக்க, க்ஷேமநிதிகள் ஆரம்பமுதல் இதர ஆதாரங்களையும் கட்டாயமாய் உருவாக்கவேண்டும். அதாவது, நிகர் லாபத்திலிருந்து பிரதிவ்ருஷமும் காப்பு திரவியம் (ரிஸர்வ் பண்டு) ஒன்று உருவாக்கவேண்டும். டிப்பாஸிட்டு தொகை மொத்தத்தில் பத்தில் ஒரு பாகமாகும் வரையில் காப்புதிரவியத்தைப் பெருக்கவேண்டும். 1882௵த்தில் காப்பு திரவியம் ஸுமார் £1,000,000 இருந்தது. காப்புதிரவியம் பூர்ணநிலையை அடைந்தபோது ($\frac{1}{10}$)· அதற்கு மேல்படும் திரவியத்தை (கலெக்டர் உத்தரவு பெற்று) கிராமத்தின் பொதுநன்மை காரியங்களில் (ரோட்மராமத்து, விளக்குப்போடல், ‘பள்ளிக்கூடம் கட்டல், குளம்வெட்டல், ஆஸ்பத்திரி கட்டல் முதலியன) செலவிடலாம். 1882௵ல் இவ்வித கிராமப் பொதுநன்மைக்காரியங்களில் £ 307,000 (45 லக்ஷம் ரூ.) க்குமேல் செலவிடப்பட்டன. 1838௵ம் முதல் 1882௵ வரையில், இவ்வழியில் ஸுமார் £ 3,225,000 ($4\frac{1}{2}$ கோடி ரூ.) செலவாயிருக்கிறது. ஜெர்மனி கிராம ஸமுதாயஸபைகள் ராஜாங்கத்தால் சட்டமூலமாய் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள். பிரதி கிராமத்தில் இந்தஸபை இருக்கிறது. இந்த கிராமஸமுதாய ஸபைகளுக்கு சட்டமூலமாய் ஸ்வதந்தரங்களும் கடமைகளும் ஏற்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான கிராமஸமுதாய ஸபைகள் (கிராமப் பஞ்சாயத்து ஸபைகள்) நம்தேசத்திலும் இந்தியா சட்டமூலமாய் ஏற்பட்டால் கிராமத்தில் நடக்கவேண்டிய பொதுநன்மைக் காரியங்கள் எல்லாம் சுளுவாயும், நியாயமாயும், திறமாயும் அக்கரையாயும் நடத்தப்படுவதுடன் குடிகளுக்குள் ஒற்றுமையும், பொதுக்காரியங்களில் ஒன்றுகூடிச் செய்யும் பழக்கமும், பொது சங்கத்தை நடத்துங் காரியத்திறமையும், கிராமஸ்வய அரசாக்ஷியில் பயிர்ச்சியும் உண்டாகி, பொது உணர்ச்சி பெருகி, குடிகள்மேலே அபிவிருத்தியடைவார்கள் என்பதற்கு ஐயமில்லை. ஜெர்மனி தேசத்தில் கிராமஸமுதாய ஸபைகள் கிராமப் பொதுநன்மைக் காரியங்களில் செலவிட்டிருக்கும் அபாரமான திரவியத்தை பார்த்தாலே இது நன்கு விளங்கும்.

சி. எஸ். சிவராம கிருஷ்ணசர்மா.

## KOTHAVARAI CULTIVATION

BY

N. V. SUBRAMANIYA SASTRIAL.

### கோத்தவரை ஸாகுபடி.

சென்ற அக்டோபர் மாஸத்து ஸஞ்சிகையில் கொத்தவரை நான்குவித மென்றும் அவைகளில் சீப்புக் கொத்தவரை சிலாக்கிய மென்றும் சொன்னோம். இப்பொழுது அவ்விதக் கொத்தவரையைப் பயிரிடும் வகையைக் கொஞ்சம் விவரிப்போம்.

கொத்தவரைக்கேற்ற பூமிசெம்மண் மணல் கலந்த களிமண் பிரதேசமே. அதை விதைக்க ஆடிமாஸமே நல்ல தருணமாகும். ஆகையால், அந்நிலங்களில் பயிரிடப்பட்டிருக்கும் செடிகளில் காய் மாறி நிலங்கள் கொஞ்சம் காய ஆரம்பித்தவுடன் நிலத்தின் உரம்போகாமலிருப்பதற்காக நன்செய்களை உழுது போடுவதுபோல் இந்த நிலங்களையும் ஆழமாகக் கொத்திவைக்கவேண்டும். பிறகு ஆடிமாஸத்தில் நிலங்கள் நன்ருய் உலர்ந்திருக்குமாதலால் கட்டிகளை நன்ருய் உடைத்துப் புழுதியாக்கி, புல் முதலானவைகளை நன்ருய் அரித்தெடுக்கவேண்டும். இப்படிச்செய்த புழுதிகளைப் பாத்திகளாகக் கட்டவேண்டும். பாத்திகளை ஒவ்வொன்றும் நீளத்தில் 6 அடிமுதல் 12 அடிக்கு அதிகப்படாமல், கட்டவேண்டும். அகலத்தில் நான்கு அடிக்குக் குறையாமலும் எட்டடிக்கு மேற்படாமலும் இடத்திற்குத் தகுந்தபடிப் பாத்திகள் கட்டவேண்டும். இதற்கு மேற்பட்டால் ஜலம் நன்ருய்ப் பாய மாட்டாது. இடங் குறுகலாய் இருந்தால் ஒரேபக்கத்தில் வாய்க்காலைச் செய்யலாம். விசாலமாய் இருந்தால் நடுவில் வாய்க்காலையும் இரண்டுபக்கங்களில் பாத்திகளையும் செய்யலாம். பிறகு இப்படிச் செய்யப்பட்டப் பாத்திகளில் ஒரு அடிக்கு ஒரு குழியாய் பத்தியாகக் குழிகள் போட்டு, குழிகளில் கொஞ்சங் கொஞ்சம் சாம்பலையும் போட்டு, குழிக்கு மூன்று அல்லது நான்கு விதைகள் வீதமாய்ப் போடவேண்டும். பிறகு மேலே கொஞ்சம் மண்ணைத்தள்ளி, குழிகளுக்குத் தனித்தனியாக ஜலம் ஊற்றவேண்டும். விதைகள் முளைத்துவர மூன்று அல்லது நான்கு நாள்கள் செல்லும். விதைகள் முளைத்து நான்கு அங்குலம் உயரமானவுடன் சிறுகுச்சிகளால் குழிகளைக் கொத்திக் கொடுத்து, கொத்தின மறுநாள் முதல் தண்ணீர் இறைக்கவேண்டும். இரண்டாவது தண்ணீர் இறைக்குமுன், ஒவ்வொரு குழியிலும் நல்ல செடியாய் இரண்டை நிறுத்திவிட்டு பாக்கியைப் பிடுங்கிவிடவேண்டும். சீக்கிரத்தில் ஜலம்காயாத நிலங்களாய் இருந்தால், மாஸத்தில் நான்குமுறை தண்ணீர் இறைக்கவேண்டும். இல்லாவிடில் 6 முறை இறைக்கவேண்டும். தண்ணீர் இறைப்பு நிலத்தின் தன்மையைப் பொறுத்ததாகும். செடிகள் ஒரு அடிவுயரமானவுடன் பாத்திகளை முழுமையும் ஒரு தரம் கொத்தி, நல்ல சாணி எருவை பாத்திகளில் பரப்பித் தண்ணீர் இறைக்கவேண்டும். அப்பொழுதுதான் செடிகள் நன்ருய்க் கொழுத்துக் கிளம்பும். பிறகு இரண்டடி உயரம் வளர்ந்தவுடன் ஒருதரம் கொத்திக் கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்தால் ஆடி, ஆவணி இந்த இரண்டு மாஸங்களில் செடிகள் நன்ருய் வளர்ந்து புரட்டாசியின் முதலிலேயே காய்களைக் கொடுக்கும். பிறகு மழைகாலமானபடியால் தண்ணீர் அதிகமாய் இறைக்கவேண்டியதில்லை; மழை இல்லாத காலங்களில் மட்டும் இறைத்தால் போதும். இச்செடிகள் புரட்டாசி, அர்ப்பசி, கார்த்திகை, மாஸங்களில் நன்ருய்க் காய்களைக் கொடுத்து பிறகு வர வர மாறிப்போகும்.

இனி கொஞ்சம் விதை எடுப்பதைப்பற்றி விசாரிப்போம். முதலில், காய்களை யெல்லாம் பறித்துவிட்டு பிறகு விதை எடுக்கலாமென்று

சிலர் எண்ணுவார்கள். அப்படிச் செய்வதால் ரொம்பவும் கெடுதிகள் ஏற்படுகின்றன. மேல் குலேகளை விதைகளுக்காக விட்டால் அவை முற்றிப்பழுத்து நன்றாகும் ஸமயத்தில் மழைகாலமானதால் மழையால் நெற்றுகள், கறுத்து விதைகள் உபயோகமில்லாமல் போகின்றன. ஆகையால் விதைகளை முதலிலேயே எடுத்துக்கொள்ளவேண்டும். முதலில் என்றால் அடிக்குலேயும் உதவாது. அடிக்குலேயில் அதிகக்காய்கள் இல்லாமலிருப்பதாலும், அக்குலேயின் காய்கள் அதிக வளர்ச்சியில்லாமலிருப்பதாலும், நிலத்தின் ஸமீபமாயிருப்பதால் நெற்றுக்களின்பேரில் மண்பட்டு விதைகள் கெட்டுப்போகுமாதலாலும், அவைகளேயும் விதைக்காக விடகூடாது. நன்றாய் வளர்ந்த செடிகளில் இரண்டாவது அல்லது மூன்றாவது குலேகளை விதைக்காக நிறுத்தி அக்குலேகளில் ஏழு, எட்டு காய்களை மட்டும் விட்டுவிட்டு மேலுள்ள காய்களைப் பறித்துவிடவேண்டும். இப்படியாக நமக்கு எவ்வளவு விதை வேண்டுமோ, அதற்குத் தக்கபடி காய்களை நிறுத்திவைக்கவேண்டும். அக்காய்கள் பழுத்து நெற்றானவுடன் அவைகளைப் பறித்து வெயிலில் நன்றாய் உலர்த்தி சட்டியில் போடாமல் காற்றோட்ட மிருக்கும்படியாக ஓலைப்பெட்டிகளில் போட்டு வைக்கலாம். பிறகு ஒவ்வொரு அமாவாஸையிலும் காயவைக்கவேண்டும். இப்படி இதை எடுத்துக் காப்பாற்றினால் ஒரு விதையாகிலும் பழுது போகாதென்பது நிச்சயம்.

இவ்விதம் விதை எடுத்து என் வீட்டுச் செலவிற்காக, நாராயணமங்கலம் என்னும் கிராமத்தில் பிடாரிகளம் என்ற ஸ்தலத்தில் $2\frac{1}{2}$-க்குழிப் பயிர் செய்ததில் அதற்காகச் செலவு முதலில் நிலத்தைக் கொத்திப் புழுதியாக்க $\frac{1}{2}$-வேலேக்கு $1\frac{1}{2}$-அணுவும், பிறகு இரண்டு முறைகள் கொத்திவிட 1-அணுவும், அதற்கு மூன்றுகூடை எருவுக்கு $1\frac{1}{2}$-அணுவும், சிலமுறைகளில் ஜலம் இறைப்பதற்காக 2-அணுவும், ஆகமொத்தச்செலவு 6-அணு. அதுகாய்த்தது எவ்வளவென்றால் ஸராஸரி ஒரு குழியில் தடவை ஒன்றுக்கு 8 சேர் வீதம் $2\frac{1}{2}$-குழிக்கு 20-சேர். இந்த இருபது சேருக்கும், சேர் ஒன்றுக்கு காலக்கிரயப்படி தாழ்ந்தவிலே போட்டாலும் 2-பைசாவீதம் 20-சேருக்கும் 3-அணு 4-பை. ஒரு தடவைக்கு 3-அணு 4-பையாக, மாஸம் ஒன்றுக்கு மூன்று தடவையாக அது காய்க்கும் மூன்று மாஸங்களுக்கும் 9 தடவை ஆகிறது. இந்த ஒன்பது தடவைக்கும் 1-ரூ 14-அணு இந்த 1-ரூ. 14-அணுவில் செலவு 6-அணு போக, பாக்கி $1\frac{1}{2}$ ரூ. ஆகிறது. ஆகையால் இப்பயிரில் எல்லாச்செலவும் போக, $2\frac{1}{2}$-க்குழிக்கு $1\frac{1}{2}$-ரூபாயும் கிடைக்கிறபடியால், மஞ்சள் முதலியவைகளோடு இதையும் ஒப்பிடலாம். மஞ்சள்போன்ற பயிர்கள் வருஷத்தில் மொத்தமாய் லாபத்தை கொடுக்கின்றன. கொத்தவரையானது கொஞ்சங்கொஞ்சமாய் பலனைக் கொடுக்கிறபடியால் கணக்குத் தெரியாத சிலர் இது அதிகப்பலனைக்கொடுக்காதென்று இதை கவனிக்கிறதில்லே. இப்பொழுதாவது இதைப்பார்த்துப் பயிரிட்டு ஏழைகள் லாபமடைவார்கள் என்று பிழைக்கும் வழி மூலமாய் இதைத் தெரிவிக்கலானேன்.

என். வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

## SUN HEMP

BY

A. SANKARALINGAM PILLAI, B. A.

### சணல்.

கயிறு முதலியவை திரிப்பதற்கும், கோணி முதலியவை பின்னுவதற்கும் பொருத்தமும் உறுதியுமான பலவகை நாருள்ள செடிகள் இந்தியாவில் விசேஷமாயுண்டாகின்றன. ஸன் அல்லது ஸன் - ஹேம்ப் என்ற ஒருவகைச் சணல் பயிர், பர்மா முதலிய எல்லா மாகாணங் களிலுமுண்டாகின்றதென்றாலும், சென்னை, ஐக்கிய மாகாணங்கள், மத்திய மாகாணங் கள் இவைகளில் தான்மிகவும் அதிகம். இந்தச் சணல் மற்றச் சணல்களையெல்லாம்விட மேலானது. ஸாதாரண மழையுள்ள ஜில்லாக்களிலும் இந்தப் பயிர் நன்றாய் வளர்ந்து பலனைத்தருகிறது. ஸாதாரணமாய் நெல்விதைப்பதற்குமுன்பு இந்தச் சணலை உண்டுபண்ணுகிறார்கள். இந்தச் செடி வயல்களுக்கு நல்ல உரமாயிருப்பதால், பின்பு விதைக்கப்படும் நெற்பயிரும் நன்றாய்ச் செழித்து வளர்கிறது. சில பாகங்களில் நெற் பயிர் அறுத்த பின்பு ஸன்-சணல் உண்டாக் கப்படுகிறது. சென்ற 1906-07 ம் வருஷத்தில் பம்பாய் ராஜதானியில் 23,700 ஏக்கர் நிலத்திலும், 1907-08 ம் வருஷத்தில் 25,470 ஏக்கராநிலத்திலும் இந்தச்சணல் உண்டாக்கப் பட்டது. பெரும்பான்மையும் நாருக்காகவும் பச்சை இலை உரத்துக்காகவுமே இந்தச்செடி உண்டாக்கப்படுறது. பம்பாய் ராஜதானியில் தானா டிஸ்ட்ரிக்டில் நெல் அறுத்த பின்பு இந்தச் செடியை உண்டாக்குகிறார் கள். இங்கேயுள்ள செம்படவர்கள் இந்தச் செடியிலிருந்து நார் எடுத்து மீன் பிடிக்கும் வலைகள் செய்கிறார்கள். சென்னை ராஜதானியில் ஸுமார் மூன்று லக்ஷம் ஏக்கர் நிலத்தில் விசேஷமாய்உரத்துக்காவே இந்தச் செடிஉண் டாக்கப்படுகிறது. கோதாவரி கிருஷ்ணாஜில் லாக்களில் அமலாபுரம், நரஸாபூர் தாலூகாக் களில் இந்தச் செடியிலிருந்து நார் உரிக்கிறார் கள். திருநெல்வேலி ஜில்லாவிலும் கொஞ்சம் நார் உரிக்கப்பட்டுப் பலமும் உறுதியும்பொருந்திய கோணிகள் அல்லது சாக்குகள்பின்னப்படுகின்றன. இந்தச்செடி கால்நடைகளுக்கு நல்ல தீனியாகவு மிருக்கிறது. கீழ்வங்காளத்தில் பாப்னாடிஸ்ட்ரிக்டில்ஸிராஜ்கஞ்ச் ஸப்-டிவிஷனில் ஸுமார் 33,900 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் இந்தப் பயிரை உண்டாக்குகிறார்கள். முதல் முதல் ஜூட் என்றசணல் பயிர் விதைத்துப் பிற்பாடு இந்தப் பயிரைஉண் டுபண்ணுகிறார்கள். சிட்டகாங்கில் 1906-07 ம் வருஷத்தில் 7900 ஏக்கர் நிலத்திலும், அதற்கடுத்த வருஷத்தில் 1600 ஏக்கர் நிலத் திலும் இந்தப் பயிர் உண்டாக்கப்பட்டது. கீழ் வங்காளத்தில் இந்தப்பயிர் உண்டாகும் மொத் த விஸ்தீரணம் 42,000 ஏக்கர். இந்த மாகாணத்திலிருந்து வருஷ மொன்றுக்கு ஸுமார் முப்பதினாயிரம் மணங்கு நார் ஏற்றுமதியாகிறது. இங்கே ஜூட்பயிரே விசேஷமாயுண் டுபண்ணப் படுவதால் ஸன் பயிரைப் பெரும் பான்மையும் கவனிப்பதில்லை. மத்தியமாகாணங்களில் 1907 ம் வருஷத்தில் 55,400 ஏக் கர் நிலத்திலும், 1908-ம் வருஷத்தில்85,044 ஏக்கர் நிலத்திலும், பீராரில் 1907-ம் வருஷத்தில் 32,300 ஏக்கர் நிலத்திலும், 1908-ம் வருஷத்தில் 35,484 ஏக்கர் நிலத்திலும் முக்கியமாய் நாருக்காகவே இந்தப் பயிருண்டாக் கப்பட்டது. இதனுடைய விதை மாடுகளுக்கு நல்ல தீனியாகும். இதைத் தண்ணீரில் ஊறப்போட்டு நார் எடுப்பதற்கு மிகவும் செலவாவதால் சுலப விலையில் தகுதியான யந்திரம் நார் உரிப்பதற்குக் கிடைக்குமானால் மத்திய மாகாணங்களிலும் பீராரிலும் இந்தப் பயிர் இன்னும் விசேஷமாயுண்டாகலாம். மத்திய மாகாணங்களில் சென்ற பத்துவருஷங்களில்

முன்னைவிட இரண்டுபங்கு அதிகமான நிலத்தில் இந்தப்பயிர்உண்டாக்கப்படுகிறது. இந்தப்பயிர் நல்ல லாபம் தருவதால் அநேக இடங்களில் கோதுமைக்குப் பதிலாக இதைவிதைக்கிறார்கள். இந்தப் பயிரில் நல்ல சத்திருப்பதால் இது நிலத்துக்கு உரம் கொடுக்கிறதென்பது எல்லாவிவஸாயிகளுக்கும் தெரிந்திருக்கிறது. இதனுடைய தழைகளைப்பொடித்துக் கோதுமைப் பயிருக்கும் கரும்புப் பயிருக்கும் உரமாய் உபயோகிக்கிறார்கள். ஆனால் பருத்தி விளையும் பாகங்களில் இந்தப் பயிரைவிடப் பருத்திப் பயிர் அதிக லாபம் தருகிறது. சென்ற நான்கு வருஷங்களில் மத்திய மாகாணங்களிலிருந்து ஏற்றுமதியான ஸன்-சணலும், அதனுடைய கிரயமும் பின்வருமாறு:—

| வருஷம் | மணங்கு | கிரயம்-ரூபா. |
|---|---|---|
| 1904—1905 | 226,751 | 12,18,783. |
| 1905—1906 | 201,402 | 10,82,534. |
| 1906—1907 | 168,096 | 9,30,513 |
| 1907—1908 | 271,727 | 14,60,532. |

பஞ்சாபில் 1906-ம் வருஷத்தில் 57,000 ஏக்கர் நிலத்திலும் 1908-ம் வருஷத்தில் 52,400 ஏக்கர் நிலத்திலும், விசேஷமாய் மலையையடுத்த பாகங்களில் இந்தப்பயிருண்டாக்கப்பட்டது. பஞ்சாபின் தென் கீழ்ப்பாகங்களில் இப்பயிரையுண்டாக்குவதில்லை. பெரும்பான்மை நாருக்காகவும் சிறுபான்மை உரத்துக்காகவும் இதைப் பயிரிடுகிறார்கள். இதைத்தண்ணீரிலூறவைப்பதும், பிற்பாடு நாருரிப்பதும் மிகவும் கஷ்டமாயிருப்பதால் பஞ்சாப்வாசிகள் இத்தொழிலில் பெரிதும் பிரவேசிப்பதில்லை. ஐக்கிய மாகாணங்களிலிருந்து 1906-07-ம் வருஷத்தில் 25,382 மணங்கு நாரும், 1907-08-ம் வருஷத்தில் 20,984 மணங்கு நாரும் பஞ்சாபுக்குள் இறக்குமதியாயின. பஞ்சாபிலிருந்து 1906-07-ம் வருஷத்தில் 4,078 மணங்கு நாரும், 1907-08-ம் வருஷத்தில் 2,584 மணங்கு நாரும் ஏற்றுமதியாயின. ஐக்கிய மாகாணங்களில் 1906-07-ம் வருஷத்தில் 133,000 ஏக்கர் நிலத்திலும் 1907-08-ம் வருஷத்தில் 158,000 ஏக்கர் நிலத்திலும் பெரும்பான்மையும் நாருக்காக இந்தச்செடி பயிரிடப்பட்டது. இங்குள்ளவர்கள் சணலைக் கயிறாகத் திரிப்பதால் யாதொரு சணலும் வெளிப்பாகங்களுக்கு ஏற்றுமதியாவதில்லை. கல்கத்தாவுக்கும் பம்பாய்க்கும் கயிறுகளைத்திரித்து அனுப்புகிறார்கள். கீழ்ப்பாகங்களில் 400-ஏக்கர் நிலத்தில் இந்தச் செடி பயிராகிறது. இதிலிருந்து நாருரித்து மீன் வலைகள் செய்யப்படுகின்றன. இந்தச் சணலானது ருஷியா தேசத்துச் சணலைவிட பலமானதாகவும் ஒரு டன் முப்பதுமுதல் முப்பத்தைந்து பவுன் விலையுள்ளதாகவு மிருக்கிறது. இந்தச் செடியின் தண்டு மெல்லியதாயிருந்தபோதிலும் இது சிலஸமயங்களில் ஸுமார் ஒன்பதடி உயரம் வளர்கிறது. மழைகாலத்தில் புஷ்பிக்கிறது. புஷ்பம் தோன்றியபினபு இரண்டு மாஸத்தில் விதைகள் முற்றிப்போகின்றன. உரமாகவும், நாராகவும், கால்நடைகளுக்குத் தீனியாகவும் உபயோகமும் பிரயோசனமும் கொண்ட இந்தப் பயிர் சென்னை ராஜதானியில் விசேஷமாய்ப் பயிர் செய்யப்படுவதில்லை. உழவர்கள் இப்பயிர் விஷயத்தில் விருப்பமும் அக்கரையும் காட்டுவது நன்மையே தரும்.

ஏ. சங்கரலிங்கம்.

## SELECTIONS.

## விசேஷத்திரட்டு.

### LAUNDRY BUSINESS IN INDIA.

### இந்தியாவில் துணி வெளுக்கும் முறை.

பட்டணங்களில் இக்காலத்து நாகரிகத்தை யனுசரித்துக் காலங்கழிக்க வேண்டியவருக்கு இனியின்றியமையாத சாதனம் வண்ணனே யாவான். உத்தியோகஸ்தராகிலும், வேறு யாராகிலும் இனிச் சட்டை முதலிய அங்கங்களில்லாமல் காலங் கழிப்பது அசாத்தியம். ஆதலால் துணிகளை வெளுத்துக் கொடுக்கும் தொழில் இதுவரை யிருந்ததைவிடப் பல வகையாலும் மாறி மேம்படவேண்டும்.

ஆனால் பரம்பரையாக வெளுப்போரென்னும் வண்ணார் காரியம் எப்படி யிருக்கிறது? அன்று (கிருத யுகத்தில்) பார்த்த கண்ணுக்கு அழிவேயில்லை. வண்ணான் மட்டும் யார் சொன்னாலும் கேட்பதில்லை. அவனுக்குப் பிடிவாதம் அதிகமா, அவனுடைய கழுதைக்கதிகமா, சொல்லமுடியாது. அனுவசியமாய்ப் பாடுபட்டு வருகிறான். அதையும் இதையும் கலந்து, நீலம் முதலிய வேண்டாச் சரக்கைச் சேர்த்துத் துணியைப் பாழாக்குகிறான். யார் தோலிலிருக்கும் வியாதிகளையும் அவன் லக்ஷியம் செய்வதில்லை. அதாவது, தன் வாடிக்கைகாரர் அனைவருக்கும் தோலைப்பற்றிய வியாதிகள் விஷயத்தில் தாரதம்மிய மிருக்கக்கூடாதென்று தன்னாலானவரை பாடுபட்டு வருகிறான்! வருஷத்தில் எக்காலத்திலும் தன்னிஷ்டம்போல துணியை வாப்ஸ் செய்வதும், கேட்டால் தாமத மானதற்குக் காரணம் 'ரெடி' யாகச் சொல்வதும் இவனுக்கு இயற்கையா யமைந்த லக்ஷணம். வண்ணாரத்தொழில் என்று ஆரம்பமாயிற்றோ அன்று முதல் நாளதுவரை இந்திய வண்ணார் ஒருப்போலவே யிருந்து வருகிறார்கள். அன்று முதல் இன்றுவரை அவர்கள் 'துணிகளைக் கொண்டு கல்லையுடைக்க வேண்டியே' பலத்த பிரயத்தனம் செய்து பார்க்கிறார்கள்!!

தண்ணீர் மூலமாய் அழுக்கை யெடுப்பதும் சவர்க்கார மூலமாய்ப் பசையை அகற்றுவதும் இவனுக்குத் தெரியும். ஆனால் சவர்க்காரத்தினுடைய பலனைச் சுடு தண்ணீரைக் கொண்டுசுலபமா யடையலாமே, அதுமட்டும் இவன் செய்வதேயில்லை. ஏன்? சுடு தண்ணீரை உபயோகிக்கச் சில கருவிகளுடைய சகாயம்வேண்டும். அந்தக்கருவிகளை உபயோகிப்பதென்றால், அதைத் தன் ஜாதிக்கு ஈனமாக இவன் எண்ணுகிறான்! ஆதலால் அவற்றை தானாக வாங்குவதுமில்லை, வாங்கிக்கொடுத்தால் அவற்றை நேராக வைத்துக்கொள்வது மில்லை!!

சென்ற முப்பதுவரு காலமாக அனேக முறை 'வெளுத்தல்' கம்பெனிகள் புறப்பட்டுத் தக்க சாதனங்களுடன் தமுக்கடித்துக்கொண்டு வேலை யாரம்பித்தன. ஆனால் அவையெல்லாம் கடையைக் கட்ட வேண்டியே யாயின. ஏனெனில் வண்ணானில்லாமல் இவை யொன்றும் நடக்கமுடியவில்லை. வண்ணானே தன் பிடிவாதத்தினால் இந்தப் புதிய காரியங்களில் ஒன்றையும் நேராக நடத்த வொட்டவில்லை. துணியை வாங்குவது, தினுசு தினுசாக வகுத்து வெளுப்பது, மறுபடி உடமைக்காரருக்குச் சரியாக ஒப்புவிப்பது, இக்காரியங்களில் சிரத்தையற்றவர் உழைத்தால் துணிகெட்டும், காணாமலும், மாறியும் போவது வெகு சுலபம். ஆகவே இந்தக் கம்பெனிகள் ஒன்றும் நன்றாயுருப்படவில்லை! தவிர வண்ணானுக்கு அவலக்ஷணங்கள் எவ்வளவிற்கு நிறைந்திருந்தாலும் யஜமானனுடைய 'தந்தோஷம் போல' நடந்துகொள்ளத் தெரியும்.

இவைகளெல்லாம் உபயோகப்படாமற் போகவே, இப்பொழுது சில விடங்களில் ஒரு நூதனக் கம்பெனி தினுசு கண்டு வருகிறது. யாராகிலும் ஒரு கிரகஸ்தன் ஒரு ஷாப்பு வைத்துக்கொண்டு, சில வண்ணாரைக் கூலிக்கு அமர்த்திக்கொண்டு, துணிகளை வாங்குவது, மறுபடி யவைகளைச் சரிவர வாப்ஸ் செய்வது, இந்த இரண்டு காரியங்களை மட்டுமே தான் ஏற்று நடத்திவருவது இதன் லக்ஷணமாம். வேண்டுமானால் இவைகள் இன்னும் கொஞ்ச தூரம் போகலாம். ஆவியந்திர முதலிய பெரிய உபத்திரவங்களையும், ஆற்றுக்குப் போகவேண்டியது முதலிய சில்லரை உபத்திரங்களையும், இரண்டையும் ஒழித்து ஏதோ ஒரு சுமாராகக் கைவேலையும், யந்திர சகாயமும் கலந்த ஓர் முறையில் வேலை செய்யலாம். ஆனால் அவர்கள் இப்படி யொன்றும் செய்வதில்லை.

இந்தியர்கள் வெகு சமர்த்தாகப் பிழைக்கிறவர்களென்று தமுக்கு மட்டும் பலமாகக் கேட்கிறது.

என்றாலும் துணியை வெளுத்துக் கட்டுவதில் அவர்களுக்குச் சமர்த்தே யில்லையென்றுதான் சொல்ல வேண்டும். இதற்கு வண்ணான் காரணமாதலாலும், அவனே மேற்குறித்தபடி முரடனாதலாலும், அவன் தொழில் சாமான்னியமாய் யாரும் சுலபத்தில் கற்கலாமாதலாலும், 'இழிகுலத்தவர்' அனேகர் இந்தத் தொழிலைக் கைப்பற்றலாம். இவர்கள் விஷயத்தில் விவேகிகளுக்குச் சிரத்தை யதிகரித்து வருவதால், சுடுதண்ணீர், சோடா, சவர்க்காரம் முதலியவற்றையும், பிழியும் யந்திரம், 'அலசும்' யந்திரம் முதலிய 'கை யந்திரங்களையும்' உபயோகித்துத் துணியைச் சேதப்படுத்தாமலும், தாமதமில்லாமலும் வெளுத்துக் கொடுக்கக் கற்பிப்பதற்கு ஒரு பாடசாலை மதிராசிலிருக்கலாம். இதில் கற்றுப்போகிறவர்கள் தாங்களாகவோ, வேறு பணக்காரரைக் கொண்டோ ஆங்காங்கு காரியம் ஆரம்பித்தால் பட்டணவாசிகளுக்கு ஒரு பெரிய உபத்திரவம் நீங்கும். காலக்கிரமத்தில் அல்லது அக்கரை யுண்டானால் ஆரம்பத்தில், கோஆபரேடிவ் முறையிலும் காரியம் ஆகலாம். யார் ஆரம்பம் செய்த போதிலும் சுகிர்தமுண்டு. வித்யா விஹாரிணி.

---

## WHOOPING COUGH.

### கக்குவாய் இருமல்.

நிதானம்:—கக்குவாய் இருமலென்னும் இவ்வியாதியானது பெரும்பாலும் சிறுவர்களுக்கும், வெகு அபூர்வமாய்ச் சில வாலிபர் அல்லது வயது முதிர்ந்தவருக்கும் உண்டாகும் ஒருவித தொத்துநோய். இது சாதாரணமாய் ஜீவிதகாலத்தில் ஒருவருக்கு ஒரு தடவை வந்தால் மறுதடவை வருவதில்லை. குழந்தைகளுக்குச் கக்குவாயிருமலைப் பார்க்கிலும் உபத்திரவம் செய்யத்தக்க கொடிய நோய் வேறொன்றுமில்லை. தொண்டை மூக்குகளினுள்ளிருக்கும் சிவந்த ஜவ்வுகளில் ஜனிக்கும் சில சூக்ஷ்ம கிருமிகளின் மூலமாய் இவ்வியாதி பரவுவதாய் இக்காலத்திய இங்கிலீஷ் வைத்தியர்களின் கோட்பாட்டுக் கிணங்கச் சீதளமான பூமியில் நடமாடுவதாலும், மிகக் குளிர்ந்த காற்றுத் தாக்குவதாலும், ஈரமான ஆடைகளை அணிவதாலும், பழைய ஆகாரங்களையும் கெட்ட பதார்த்தங்களையும் உபயோகிப்பதாலும், நெஞ்சில் தோஷங்கள் சேர்ந்து கபத்தை அதிகப்படுத்தி இவ்வித ரோகத்தை யுண்டுபண்ணுவதாக ஆரியர்களுடையவும் அபிப்பிராயமாகும். இந்த இருமல் ஆதியில் சாதாரண இருமலாக ஆரம்பித்துப் பின்பு சிறிது நாட்களுக்கெல்லாம் இவ்விருமல் மூச்சைப் பல நிமிஷங்கள் இழுத்துக்கொண்டே போகும்படி அவ்வளவு கோரமாக விருத்தியாய்ச் சில குழந்தைகளுக்கு அத்தருணத்தில் மூர்ச்சையையும் உண்டுபண்ணும். மிகக் கெட்ட இருமலில் சில சமயம் நாளொன்றுக்கு இருமலென்பது நமது காதுக்குக் கேட்கப்படாமலே உண்டாய் இருபது தடவைக்குமேல் குழந்தைகளின் மூச்சை யிழுத்துக்கொண்டேபோய் மகா சங்கடத்தை யுண்டுபண்ணுவதுண்டு. இவ்விருமலால் பீடிக்கப்படும் குழந்தைகளுக்கு இருமல் உண்டாகும் சமயம் சிறிது நேரத்திற்கு முன்னமே தெரிய வருமானதால் அப்பொழுது தனது தாய் முதலியவர்களை இழுத்துக்கட்டிக்கொண்டு பயத்துடன் பதறி அழத் துவக்கும்; சற்றுப்புத்தி வந்த குழந்தைகள் தாமிருக்குமிடத்தில் ஏதேனும் ஆதாரமிருந்தால், அதை நன்றாகப் பிடித்துக்கொண்டு இருமல் வருவதற்குச் சிலநேரம் முன்னமே வெகு ஜாக்கிரதையாய் உட்கார்ந்த விடத்தில் ஸ்திரமாய்த் தங்களை நிலைநிறுத்திக் கொள்வார்கள். இந்த இருமலுண்டாகும் தருவாயில் அடிக்கடி வாந்தியுமெடுப்பதுண்டு. சில குழந்தைகளுக்கு இருமலின் வேகத்தினால் காதினுள்ளிருக்கும் ஜவ்வு கிழிந்து போவதும் மூக்கிலிருந்து இரத்தம் பெருகுவதும் கண்கள் பிதுங்கி விழுவதுபோல் பயங்கரமாயிருப்பதுமுண்டு. கக்குவாயிருமல் ஆரம்பத்தில் கொஞ்சம் சுரம் ஜலதோஷம் இவைகளு மிருக்கும். மார்பில் பளுவாயிருப்பதுபோல் தோற்றும். சுரம் நின்றவுடன் இருமல் அதிகப்படும். இருமல் நின்றவுடன் குழந்தை சாதாரணமாய் ஆடிக்கொண்டிருக்கும். ஆனால் இருமல் விட்டுவிட்டு வந்துகொண்டிருக்கும். இந்த வியாதி வெகுநாள் தொந்தரவு செய்யும்; சிலருக்கு இரண்டு வாரத்திலும், மற்றும் சிலருக்கு பன்னிரண்டு வாரங்களிலும் இது கிரமமாக குணத்தையடையும்.

சிகிச்சை:—கக்குவா இருமலுண்டான குழந்தைகளை மற்றக் குழந்தைகளுடன் சேர்க்கக்கூடாது. இருமலால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கு எப்பொழுதும் கம்பளிப் போர்வை அல்லது ஆடைகளை உடுத்தி யிருக்கவேண்டும். இருமல் ஆரம்பித்தவுடன்

குழந்தையின் முதுகை ஒரு கையாலும், முன் நெற்றியை மற்றொரு கையாலும், கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளவேண்டும். முதுகையும் நன்றாய்த் தடவிக் கொடுக்கவேண்டும். போஸ்தக்காய் போட்டுக் காய்ச்சிய ஜலத்தினால் முதுகிலும் மார்பிலும் நன்றாய்ச் சுடச்சுட ஒத்தடம் கொடுப்பது நலம். குளிர்ந்த காற்று வீசும் வெளிகளில் குழந்தைகளை விட்டிருக்கக்கூடாது. அப்போதைக்கப்போது ஆமணக்கெண்ணெய் கொடுத்து குடல்களைச் சுத்தமாக வைக்கவேண்டியது. நடுமுதுகிலும் மார்பிலும் கற்பூரத் தைலத்தையும் அடிக்கடி பூசிவரலாம். பால் கஞ்சி இனங்கள் முதலிய சீக்கிரம் ஜீரணமாகக்கூடிய புஷ்டிகரமான உணவுகளை வேண்டிய வரையில் கொடுத்துவரலாம். அஜீர்ணம் செய்யக்கூடிய பதார்த்தங்களை கொஞ்சமும் கொடுக்கலாகாது. இருமும் போது வாந்தியானவுடனே ஆகாரம் கொடுத்தால் மற்றொரு தரம் இருமல் வருவதற்குள் ஜீர்ணமாய் விடும். நாம் சொல்லுவதை அறிந்து கொள்ளக்கூடிய புத்தியுள்ள குழந்தைக்கு உப்புக் கரைத்த நீரை ஓர் அவுன்ஸ் சுத்தக்கண்ணாடி அல்லது பீங்கான் பாத்திரத்தில் வைத்து ஒரு நாளைக்கு மூன்று நான்கு தடவை மூக்கினால் உறியச் செய்வது நலமாகும். சுத்தமான காற்று மெதுவாக உலாவக்கூடிய அறையில் உஷ்ணகுணமுள்ள (கம்பளியிற் செய்த) படுக்கையில் குழந்தைகளைத் தலையுயரமாய் விட்டு மேலேயும் சுறசுறப்பில்லாத கம்பளப்போர்வையைப் போர்த்து வைக்கவேண்டும். சுரத்துடன் கூடிய கக்கிருமலில் முதலில் ஆமணக் கெண்ணெய் கொடுத்து வயிற்றைச் சுத்தமாக்கிப் பின்பு குறிஞ்சா (Ipecacuanha) மூலிகையின் வேர் இலைகளை உலர்த்திப் பொடி செய்து 5-லிருந்து 10 குன்றுமணி எடை எடுத்து விளாம்பிசின் கொஞ்சம் சேர்த்து மாத்திரை உருட்டி தினம் மூன்று நான்கு தடவை கொடுக்கக் கக்கிருமல் குணமாவதுண்டு. குறிஞ்சாவைக் கொடுத்துவர வாந்தியும் சற்று அதிகம் உண்டாய்க் கபத்தை நன்றாய் வெளிப்படுத்தி அடிக்கடி இருமல் வருவதைத் தடுக்கும். இதில் அதிகம் கபம் வெளிப்படாம லிருந்தாலும், இருமலும் நெஞ்சு வலியும் அதிகமிருந்தாலும், சுத்தமான நவாசாரத்தில் 10 குன்றுமணி எடை நாட்டு அதிமதுரக் கஷாயத்தில் (இந்த கஷாயம் பொடித்த அதிமதுரத்துளால் காப்பியைப் போல் போட்டுக்கொள்ளவேண்டும்) சேர்த்து அத்துடன் கறுவாப்பட்டைத்தூள் ஒன்றிலிருந்து 5-குன்றுமணி வரையில் குழந்தையின் வயதுக்குத் தக்கவாறு சேர்த்து ஒரு நாளைக்கு 6-தடவை (இரண்டு மணிக்கு ஒரு தடவையாய்) கொடுக்கலாம். சுரமில்லாமலிருக்கிற பழகிய இருமலுக்கு இரண்டு மூன்று வயது குழந்தைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு குன்றுமணி எடை பெருங்காயத்தைச் சுத்த நீரில் கரைத்து நான்கு தேக்கரண்டியளவு இரண்டு மணிக்கு ஒருதரம் கொடுப்பதும் நலம். கடுகை ஜலம் விட்டு அரைத்துக் கட்டியாகவெடுத்து முதுகின் நடுவிலும் மார்பில் தோல்பட்டைகளுக்குச் சமீபங்களிலும் பத்து பதினைந்து நிமிஷம் போல்டீசுமாதிரி கட்டி எடுத்து விடுவதால் இருமலினால் நேரிடும் வருத்தம் நீங்கும். கடுகு போல்டீசு போட்டால் சற்று நேரத்திற்கெல்லாம் உடனே எடுத்துவிடவேண்டும். இல்லையேல் கொப்புளித்துப்போய்த் தோல் வெந்து விடும். பவழபஸ்மம், வராடபஸ்மம் இவைகளை மூன்று குன்றுமணி எடை சேர்த்து மிளகு கஷாயத்துடன் கொடுக்கலாம். கக்கிருமல் விட்டபிறகு பலங் குன்றி ஜீர்ணசக்தியில்லாத இளைத்த குழந்தைகளுக்குச் சுவாஸாசயங்கள் பலப்படவும், பசி எடுத்து ஜீர்ணசக்தியுண்டாகி உடம்பில் வலுவுண்டாவதற்கும் சாகபாதி க்ருதம், திராக்ஷாரிஷ்டம் என்கிற மருந்துகளைச் சில நாட்கள் உபயோகித்து வருவதால் அக்குழந்தைகள் சுகப்படும்—வைத்திய போதினியில் பண்டித, எம். துரைசாமி அய்யங்கார்.

---

## ADVANTAGES OF TRANSPLANTING.

## நாற்று நடுவதின் பிரயோசனம்.

எம்மூர்க் கமக்காரர் (விவஸாயிகள்) பெரும்பான்மையாய் நெல்லை நிலத்தில் விதைத்து அது முளைத்து வளர்ந்து விளையச்செய்து வேளாண்மை வெட்டுகிறார்கள். நெல்லை நாற்றுப்போட்டுப் பிடுங்கி நட்டு விளைவிப்பது மிக அருமையாய்க் கையாடப்படும் முறையாயிருக்கின்றது. கண்டிப்பகுதியிலுள்ள சில இடங்களில் நெல்லு நாற்றுப்போட்டு நடும் வழக்கமிருக்கின்றதாயினும் யாப்பான் (ஜப்பான்) தேசத்திலேயே இது சரியான முறையாயனுசரிக்கப்பட்டுப் பெரும் பலன் பெறப்படுகின்றதாம்.

மெஸ். கிறீன் அவர்கள் வித்தியாகர்த்தராயிருந்த

காலத்தில் நடப்பித்த பரிசோதனைகளால் நெல்லை விதைத்து விளைவிப்பதிலும்பார்க்க நாற்றுநடுவதினால் அதிக லாபமிருக்கின்றதென ரூபிக்கப்பட்டது. நாற்றுநடுவதின் நயங்களாவன:—

(1) விதைநெல்லு அதிகஞ் செலவழியமாட்டாது.

(2) களைபிடுங்குவது மிக இலகுவாயிருக்கும்.

(3) பயிர் நன்றாய்ச் செழித்து வளர்ந்து, விதைத்து விளைந்த நெல்லிலும்பார்க்க அதிக விளைவைக் கொடுக்கும்.

நாற்றுநட்டு நெல்லை விளைவிப்பதிலிருக்கும் நட்டங்களும் வசதியீனங்களுமெனப் பின்வரும் நியாயங்கள் சிலராற் சொல்லப்படுவதுண்டு.

(1) அதிகம் ஈரலிப்பான வயல்களுக்கு நாற்றுநடுகைநயமா யிருக்கிறதில்லை.

(2) அதிக விஸ்தாரமான காணி வைத்திருப்பவர்கள் இவ்வாறு நட்டுமுடிப்பதற்கு அனேக வேலையாட்கள் தேவை. அவர்களைக் கண்டு பிடிப்பது இலகுவானகாரியமல்ல.

(3) இது அதிகநேரமெடுக்கின்றது.

(4) நாற்றுப்பாத்திகளைக் காவல்பண்ணுவது பிரயாசமான காரியம்.

(5) நட்டபயிர்கள் கதிர் வருதற்குக் கூடியகாலமெடுக்கும்.

ஆனல் நாற்றுநட்டு நெல் விளைவிப்பதினல் வரும் நயங்களைக் கவனிக்கும்போது மேற்குறிக்கப்பட்ட நட்டங்கள் நட்டங்களல்ல.

நாற்று நடும்போது பத்துப் பன்னிரண்டுபயிர்கள் ஒன்றாய்ச் சேர்த்து ஓர் குளியிற் சிலர் நட்டுவிடுகிறார்கள். இது நல்லதல்ல, ஒரே குளியில் நடப்படும் பயிர்களின்தொகை எவ்வளவு குறைந்ததோ அவ்வளவுக்குப் பயிர்கள் நன்றாய்ச் சடைத்துவளர்ந்து பலன் கொடுக்கும். இவ்விஷயத்திற் பெரும்பயிர்களாகிய தேயிலை, றப்பர், தென்னை ஆகியவற்றைப்போலவே நெற்பயிருமிருக்கு மென்பதை யறிந்து கொள்ளல் வேண்டும்.

நாற்றுகளுக்கிடையில் ஒன்பது அங்குலத் தூரமிருக்கத்தக்கதாய் ஒரு ஏக்கர் நிலம் நடுவதற்கு 77,450 பயிர் தேவையாயிருக்கும். இரண்டுகொத்து நெல்லில் 75,000 நெல் தொடக்கம் 1,50,000 நெல்வரைக்குண்டு. ஆகையால் அழிவு செலவு தள்ளி ஒன்பது அங்குல இடைவெளிவிட்டு ஒரு ஏக்கர் நிலத்தைத்தனிப்பயிர்களால் நடுவதற்கு இரண்டுகொத்து நெல் நாற்றுப் போட்டால் போதியதாகும். நடப்பட்ட ஒரு பயிரிலிருந்து சராசரி 30 அல்லது 40 கதிர்கள் வருவதாய்க் கணக்கிடப்பட்டிருக்கின்றது. யாப்பான்தேசத்தில் ஒரு பயிரிலிருந்து 70 அல்லது 80 கதிர்கள் வருமாம். பயிர்களைப் பிடிபிடியாய் நட்டால் ஒவ்வொன்றிலிருந்து 10 அல்லது 12 கதிர்கள் மாத்திரம் வரும்.

இந்தியாவிலே 9 அங்குலத்தூரத்திற் தனிப்பயிர்களாய் நட்டுப் பரீட்சை பண்ணியபோது, அதினல் வந்த விளைவு பிடிப்பிடியாய் நட்டுவந்த வருமானத்தினிருமடங்காம். இவ்வாறு சொற்ப அளவான நெல்லை விதைத்துக் கூடிய வீதமான வேளாண்மை வெட்டுவது எவ்வளவு நயத்துக்குரிய காரியம். இப்படி நாற்றுநட்டு நெல்விளைவிப்பதே அதிகலாபத்துக்குரியதென்பது யாப்பான், யாவா, (ஜாவா) இந்தியா தேசங்களில் ஒப்புக்கொள்ளப்பட்டு அனுசரிக்கப்படுங் காரியம். ஆகையால் விசேஷமாய்ச் சிறுவயல்களை வைத்திருப்பவர்கள் நெல்லை விதைத்து விளைவிப்பதிலும் பார்க்க இவ்வாறு தனிப்பயிர்களை நட்டு விளைவிப்பது மிகுந்த லாபத்துக்குரியதாம்.

இவ்விஷயத்தைக்குறித்துச் சென்னையின் வடபாகத்தின் கமத்தொழிலின் தலைவர் அங்குள்ள ஓர் இங்கிலீஷபத்திரிகையில் எழுதியவற்றின் சாரத்தை இவ்விடங் குறிக்கின்றோம்.

நெல்வித்துக்களை விதைத்துப் பயிராக்கி வேளாண்மை செய்வதை ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது பிந்தின (நாற்றுநட்டு வேளாண்மைசெய்யும்) முறையிற்தான் அதிகபலன் வருகிறது. இவ்விருவகையையுங் கமக்காரர் சரியாய்ச் சோதித்துப் பார்ப்பார்களாயின் எது அதிக பிரயோசனங் கொடுக்கு மென்பதைத் தெளிவாயறியக்கூடியவராவர். நெல்லை விதைத்து வேளாண்மைசெய்யுங் கமக்காரர் கொஞ்ச இடத்திலாகிலும் நாற்றுநட்டுச் சோதித்துப் பார்ப்பாராயின் அதினல்வரும் லாபத்தை மிக எளிதாகக் காணக் கூடுமென்பது நிச்சயம்.

நாற்றுநட்டு வேளாண்மை செய்வதால்வரும் லாபங்கள் எவை? முதலாம் லாபம் தானிய விதையை மிச்சம் பிடிப்பதாம். தானியங்களை விதைக்கும்பொழுது எல்லா இடங்களிலும் ஒரேயளவாக விதைக்கப்

படுவதில்லை. அப்படி இடத்துக்கிடம் வித்தியாச அளவாக விதைக்கப்படுவதினால் ஒரு ஏக்கருக்கு நாற்று நடும்பொழுது 20 இருத்தல் அல்லது 30 இருத்தல் நெல்லு மிச்சம் பிடிக்கப்படக் கூடியதாகின்றது. அது ஏறக்குறைய ஒரு ரூபா பெறுமதியுடையதாகும். நாற்றுகள் தனிமையாய்ப் பிடுங்கப்பட்டால் அது இன்னும் இரண்டு பங்கு லாபமுடையதாகும். வித்தின் வீதம் நிலத்தின் தன்மைக்கும் வளருந்தன்மைக்குந் தக்கதாக இருக்கும் அதிக காலமாய் வளருகிற பயிர் வகையிலும் கொஞ்சக்காலம் வளருகிற பயிர்வகைக்கு அதிகமான இடங் கொடுக்கப்படவேண்டியதாம். நாற்றுகளைப்பிடுங்கி வயல்நிலங்களில் நடும்பொழுது அவைகளுக்கிடையிற் சமவெளியுண்டாகின்றது. அதனால் ஒவ்வொரு பயிருஞ் சமமான பசளையையும் பரமாணுவையுந் தண்ணீரையும் பெற்றுக்கொள்ளக் கூடும். அப்படிப் பெற்றுக்கொள்ளுகிறபடியால் அவைகள் ஒரேவிதமாய் வளர்ந்து ஒரே விதமான விளைவைக் கொடுக்கக்கூடும். இந்தவிதமான அனுகூலத்தை விதைத்தலினாலேயுண்டான பயிர்கள் பெற்றுக் கொள்ளமாட்டார். விதைக்கும்பொழுது சிலவிடங்களில் அதிக பயிருண்டாகவும் சிலவிடங்களில் ஐதாய் (அற்பமாய்)ப் பயிருண்டாகவுங்கூடும். நெருக்கமாயுண்டாகும்பயிர் நல்லவளர்ச்சியும் விளைவுமடையமாட்டா என்பது பிரத்தியட்சம். அன்றியும் நாற்றுப் பிடுங்கி நடும்பொழுது பழுதானவைகளையும் வளர்ச்சியிற் குறைந்தவைகளையும் தள்ளிவிடக்கூடும். அதனால் நடப்பட்ட பயிர்கள் ஒரேயளவாக வளர்ந்து நல்ல பலனைக் கொடுக்கும்.

நாற்றுகளைப்பிடுங்கி நடும்நிலத்திற் களையுண்டாவதிலும் விதைக்குமிடங்களில் அதிககளையுண்டாவதினாலும் அக்களைகளைப்பிடுங்க அதிகசெலவு உண்டாகுவதினாலும் நாற்றுநடுதல் செலவுச் சுருக்கமும் லாபமுமாகிறது. நாற்றுநடுதல் சில இடங்களில் இப்பொழுது நடப்பதுபோல நெற்பயிர்கள் நிரையில் நடப்பட்டாற் களைபிடுங்குதல் அதிகம் இலேசாயிருக்கும். ஆனபடியால் அவைகளை அதிககளையின்றி நல்லாய்ப் பாதுகாக்கலாம். நாற்றுநடுங்காலத்தில் வயல்நிலங்கள் அதிக சகதியாக்கப்படுவதால் கிளைகள் இயல்பாய் அழிக்கப்பட்டுப்போம். நாற்றுகள் நடப்பட்டு ஒருமாசத்தின்பின்தான் ஒரு முறை களைபிடுங்கவேண்டும். அதற்குப்பின் பயிர்கள் நல்லாய் வேரூன்றிக்களைகளை மேற்கொள்ள விடாமல் வளர்ந்துவரக் கூடியபடியால் அந்நிலங்களில் இரண்டாம்முறை களைபிடுங்க வேண்டியதில்லை. தானியம் விதைக்கப்பட்ட நிலங்களில் இரண்டுதரம் களைபிடுங்கவேண்டியதாயிருக்கும். அன்றியும் விதைநிலங்களில் நெருக்கமாயிருக்கும் இடங்களிலுள்ள பயிரைப் பிடுங்கி ஐதானவிடங்களில் நடுந்தொந்தரவும் அதற்குரிய செலவுமுண்டு. சிலவிடங்களில் நெல்விதைத்து ஒருமாசத்தின்பின் களைகளை நாசமாக்கவும், பயிர்களை ஐதாக்கவும் உழுவார்கள். இப்படி உழப்பட்டபின் மிச்சமாயிருக்கும் பயிர்கள் நல்லாய் வளருகின்றன. அப்படி நல்லாய் வந்ததற்கு நாற்றுநடுதலையொத்த வேலைசெய்ததே காரணமாம். அன்றியும் அதிலும் விதைப்பதில் தானியம் அதிகஞ் செலவழியுமென்பதும் வெளிப்படை.

கடைசியாக அருவியறுக்கப்படும்பொழுது நாற்று நடப்பட்ட நிலத்தில் அதிக பலனைப் பெறுவதால் இலாபம் அதிகமாம். இரண்டுவகையிலும் வைக்கோல் எடுக்கப்பட்டாலும் நாற்று நடப்பட்ட நிலத்திலிருந்தே அதிகமான நல்ல வைக்கோல் எடுக்கப்படுகிறது. அத்துடன் விளைவிலுண்டாகுந்தானியமும் அதிகமே.

நாற்றுநட்டு வேளாண்மை செய்வதைப் புது இடங்களில் முயற்சிபண்ணுவதற்கு ஓர் ஆட்சேபமுண்டாகும். செழிப்பான தரையும் தண்ணீர்வசதியுமுள்ள இடங்களில் நாற்றிட்டுச் செய்தல் அதிகபலனுக்கேதுவாயிருக்குமென்பதை யாவரு மொத்துக்கொள்வர். வறண்ட நிலங்களில் இம்முறையைப்பாவிக்கும் பொழுது தண்ணீர் அதிகம் பாய்ச்சவேண்டியபடியாற் செலவு அதிகமாய் வருமோவென்ற யோசனையுண்டாகும். இருபகுதியையுஞ் சரியாய் ஆராய்ந்துபார்க்கும் பொழுது இந்த ஆட்சேபத்துக்கு இடம்வராது. நாற்றுகளைப்பிடுங்கி வயலுக்குக் கொண்டுபோய் நடுவதினால் வருஞ்செலவு நெல் விதைக்கப்பட்ட நிலத்தின் களைபிடுங்குவதற்கும் நெருக்கமான இடங்களில் நடுவதற்குமுண்டாகுஞ் செலவுக்குக் கூடமாட்டாது. தண்ணீரிறைக்க வருத்தமான இடங்களிலும் இந்த வகை (நாற்றுநடுதல்) பாவிப்பதே அதிகலாபமாம். நாற்றுப்போடப்படும்நிலம் நடப்படும் நிலத்தின் இருபதிலொன்று அல்லது இருபத்தைந்திலொன்றாயிருக்கவேண்டும். நாற்றுப்பாத்திகள் மழையினால் அல்லது கிணற்றினால் நீர்ப்பாய்ச்சப்படலாம்.

நாற்றுநடுவதினாலுண்டாகும் நெல் நல்ல நெல்லாயும், அதிக பலனைக்கொண்டு வருவதாயுமிருக்கும். அத்துடன் நெல்விதைக்கப்பட்ட நிலங்களிலும் நாற்றுநடப்படும் இடங்களில் இருபோக வேளாண்மை செய்யக்கூடியதாகும். இவ்வகையாக நாற்றுநட்டு வேளாண்மைசெய்தல் அதிகபலனைத்தரு மென்னும் முறையை எம்மூர்க் கமக்காரரும் தம் வயல்நிலங்களிற் சோதித்து அனுபவத்திற்கண்டு அதிகபலனைப் பெற முயற்சிப்பாராக.—கமத்தொழில் விளக்கம்.

## JEWEL MANIA.

## ஆபரணப் பிரியம்.

(இவ்விஷயம் பெண்பாலார்க்குப் பயன்படும் வண்ணம் எழுதப்பட்டது.)

ஆபரணம் பெண்களுக்கு அழகைச் செய்தற்காகிய தொன்றாயினும் ஆபரணப் பிரியம் அப்பெண்களுக்கு எப்போதும் கேட்டைத் தருதற்கு ஏதுவாகின்றது. தாந்தாம் விரும்பிய ஆபரணங்களை அணியவேண்டு மென்று பெண்களுட் பலர் நினைப்பதாற் குடித்தனங் களில் வரும் திருப்தி யீனமும் கலகமும் பல பெண் கள் தாங்கள் அணியும் ஆபரணம் என்ன நோக்கத் தின்பொருட்டு என்பதைச் சிறிது சிந்தித்திருப்பார் களாயின் இத்துணைக் கலகங்களும் மனத் திருப்தி யீனங்களும் உண்டாகா.

தன் நாயகன் அந்நிய தேசத்திற் சஞ்சரிக்கும் போது அப்பெண் தன்னை ஆடையாபரணாதிகளால் அலங்கரித்தல் கூடாதென்றும், அமங்கல ஆபரணம் அணிதல் தகாதென்றும், எங்கள் சாஸ்திரங்கள் கூறு வதனால் நாயகனை மகிழ்வித்தற் பொருட்டே நாயகி தன்னை ஆடையாபரணாதிகளால் அலங்கரித் தல் வேண்டுமென்பது நன்கு புலப்படுகின்றது. ஆடவர்கள் பெரும்பான்மையுந் தத்தம் மனைவியரை ஆடையாபரணாலங்கிர்தராய் வைத்திருக்க விரும்பு வது உலக இயல்பு. பாக்கியவதிகளாயுள்ள பெண் கள் தாங்கள் விரும்பிய ஆபரணங்களை விரும்பியபடி யணிதல் கூடுமாதலால் அவர்கள் விஷயத்தில் ஒரு போதும் குடும்பத் திருப்தியீனம் இக்காரணத்தால் வருதற்கு இடமில்லை. ஏழைகளாயுள்ள பெண்க ளும் பாக்கியவதிகளைப் பார்த்துவிட்டுத் தாங்களும் அவர்களைப்போல் நடக்கவேண்டுமென்று நினைக்கும் போது அதனால் உண்டாகும் திருப்தியீனங்கள் பல.

ஒரு பெண் தன் நாயகன் தரித்திரன் என்பதை நன்கு அறிந்திருந்தும் அவனைத் தனக்கு நகை செய்து தரும்படி கேட்டுத் துன்பப்படுத்த அவன் அவளைத் திருப்திப்படுத்தும்படி கடன்பட்டேனும் விரும்பிய நகைகளை அவளுக்குச் செய்வித்துக் கொ டுக்க அப்பெண் சிறிதுகாலம் அப்பூஷணங்களைப் பூண்டு மகிழ்தல் கூடும். அனால் "கடன்கொண் டார் நெஞ்சம்போலக் கலங்கினன் இலங்கைவேந் தன்" என்றவாறு நகையின் பொருட்டுத் தான்பட்ட கடனை நினைத்து நினைத்து தீர்க்க வகையறியாமல் நாயகன் கலங்கும்போது அவன் மனைவி நகைகளைப் பூண்டு மகிழ்வதனால் அவள் அடையும் பயனென்ன? ஒன்றுமில்லையே. அம்மட்டோ, சிறிதுநாட் செல்ல நகைசெய்தற்பொருட்டுத் தன் நாயகன் பட்டகடன் வட்டிமுதலியவற்றால் அதிகரித்துப் பெருந்தொகை யாக, கடன் கொடுத்தவன் இவன் நெடுங்காலமாகி யுந் தன் கடனைத் தீராமையினால் இவன்மேல் வெறுப்புற்று நியாயத்தலமூலமாய்ச் சித்தாரித்துத் தன் பணத்தை அறவிடும்போது "வந்தவெள்ளம் நின்றவெள்ளத்தையுங் கொண்டு சென்றதே" என் றாற்போலத் தான் முன்னர் அணிந்திருந்த ஆபர ணங்களையும் புதிதாகக் கடன்பட்டுச் சம்பாதித்த ணிந்த ஆபரணங்களையும் கடன் நிமித்தங் கழற்றிக் கொடுத்துவிட்டு வெறுமனையிருக்க நேரிடுமல்லவா? இது உசிதமோ ? அல்லது உள்ளது போதுமென்று மனரம்மியத்துடன் நாயகனுக்கு வேண்டிய கடமை களைச் செய்துகொண்டு கடனின்றி யிருத்தல் உசி தமோ ? நாயகன் மகிழ்தற்பொருட்டே நாயகி நகை யணிதல் நிசமாயின் அவன் மனத்தை வருத்தி அவ னைக்கொண்டு நகையைச் சம்பாதிப்பதில் எங்ஙனம் முறையாகும் ?

சில பெண்கள் இன்னொருத்தி புதுமாதிரியான ஒரு நகையை அல்லது வஸ்திரத்தை அணிந்திருந் தால் அவற்றைபோலத் தமக்கும் புதுமாதிரி நகைக ளைச் செய்வித்துத் தரவேண்டுமென்றும் புது வஸ்தி ரம் வாங்கித்தரவேண்டுமென்றும் தத்தம் கணவனை வருத்துவது வழக்கம். பழைய நகைகளை மாற்றிப் புதிதாய்ச் செய்வித்தலால் வரும் தட்டான் கூலியா கிய நட்டமோ அதிகம். மேலும் புதுமாதிரியென்று எண்ணிச்செய்வித்த அந்நகைகளும், சிறிதுகாலஞ் செல்ல இன்னொரு நவீனமாதிரி நகைவரப் பழைய மாதிரியாய்ப் போகும். அப்போது புதிதெனச் சில காலத்திற்குமுன் எண்ணித் தாம் அணிந்த அந்நகை களும் மாற்றியே அணியப்படவேண்டி நேரிடும். எனவே காலத்துக்குக்காலம் தாம் அணிந்திருக்கும் நகையை மாற்றத் துணிதலால், (பங்கிட்டுத்தரும்படி குரங்கிடம் வெண்ணெயைக் கொடுத்து ஈற்றில் வெறுமனே சென்ற பூனைகளைப்போல்) தட்டான் கூலியெனத் தம்மிடத்திலுள்ள பொருளைக் கொடு த்து நஷ்டமடைய நேரிடுவதுடன் மிக்க உலைச்சலு (கலக்கமும்) முண்டாகுமல்லவா ?

இனித் தமக்கென நகையில்லாதவிடத்து எத்தனையோ பெண்கள் உற்சவம் முதலிய விசேடகாலங்களில் தாங்கள் ஆலயதரிசனஞ் செய்யவேண்டுமென்றும் அங்ஙனம் போதற்கு நகையிரவல் எடுத்துத் தரவேண்டுமென்றும் தங்கள் நாயகரைக் கேட்கின்றார்கள். அவர்கள் என்னசெய்வார்கள், "இல்லாள் வலிகிடந்த மாற்றமுரைக்குமேல், அவ்வில் புலிகிடந்த தூறாய்விடும்" என்றபடி தங்கள் இல்லாள் கூறும் கடும் வார்த்தைக்குப்பயந்து, நகையுள்ளவரிடம்போய் அவரைப் பின்சென்று பணிசெய்து பெற்றுவந்து கொடுக்க இப்பெண்கள் அணிந்து கொள்ளுகிறார்கள். அணிந்தும் இவர்களுக்கு, "இரவல் நகையல்லவா பவுத்திரமாய்க் கொண்டுபோய் ஒப்பித்துப்போட்வேண்டும்" என்று இடையிடையே தொட்டுப்பார்த்துக்கொண்டு அந்தச் சிந்தனையா யிருத்தலினால் அவ்விரவல் நகைகளை அணிதலால் மகிழ்ச்சியேயில்லை. இனி, தற்செயலாய் இந்த இரவல் நகைகளில் ஒன்று நழுவிவிட்டால் அவர்கள் படுந் துன்பஞ் சொல்லவும் வேண்டுமா! இங்ஙனமாயின் இரவல் நகை பூணுதலால் இவர்களடையும் பயனென்ன?

இது இவ்வளவில் நிற்க, பெண்களுட் சிலர் தாங்கள் முன்போல் அதிக ஆபரணங்களை அணியவில்லையென்றும், தற்காலத்திலே தாங்கள் அணியும் நகைகள் குடுமிக்கு ஓர் கொண்டைப்பூ, காதிற்கு வைரக்கம்மல், நாசிக்கோர்மின்னி, கழுத்திற்குக் கெட்டிப் பூரான் அட்டிகை, காசுமாலை, கைக்குக் காப்பு, கொலுசு, இடைக்கு ஒட்டியாணம், காலுக்கு வெள்ளிக் கொலுசு, ஆகிய இவைகள் மாத்திரந்தானே என்றும் சொல்லுதல்கூடும். இக்காலத்தில் அணியப்படும் ஆபரணங்கள் கணக்கால் அதிகமில்லையாயினும் விலையால் முன்னர் அணியப்பட்டுவந்த ஆபரணங்களிலும் பலமடங்கு அதிகமென்று சொல்லலாம். இக்காலத்தில் அணியப்படும் காசுமாலை யொன்றைக் கொண்டே முன்னாளிலே பெண்கள் அணிந்துவந்த சகல நகைகளையுஞ் செய்வித்தல் கூடும். 75,80 முழுத் தங்கப்பவுன் கோவை செய்யப்பெற்ற எத்தனையோ காசுமாலைகளைக் கண்டிருக்கின்றோம். இம்மாலைகளிற் சென்றிருக்கும் பணத்தொகைசிறிதா? ஆதலால், பெண்கள் இக்காலத்தில் நகையைச் சுருக்கிக்கொண்டார்களே யன்றி நகைக்குச செலவுசெய்யும் பணத்தைச் சுருக்கிக்கொள்ளவில்லை. இன்னுங் கூட்டிக்கொண்டார்கள். இனி நாயகனுக்கு ஓர் ஆபத்து வந்தகாலத்தில் அவன் மனைவி தனது நகையால் அவனுடைய ஆபத்தை நீக்கல் சாத்தியமாயிருப்பதும் அங்ஙனஞ்செய்யாது வாளாவிருப்பளேல் அது நீதியாகாது. இவ்விஷயமாக எத்தனையோ குடும்பக் கலகங்கள் நிகழ்ந்திருப்பதை நாங்கள் கண்டுங் கேட்டுமிருக்கின்றோம். அம்மம்ம! இப்பெண்களின் அறியாமை இருந்தபடி யென்னே? சந்திரவதி தன்னை விற்றுத் தனது நாயகனின் கடனைத் தீர்க்கவில்லையா! ஈசுர சங்கற்பத்தால் நேர்ந்த வறுமை காரணமாய்ச் சில தினங்களாகப் பட்டினியிருந்த குங்குலியக்கலய நாயனாரது மனைவியார் தன் நாயகனை நோக்கி "பிராணநாதா! பசிநோய் எம்மை மிகவும் வருத்துகின்றது. இவ்வுயிரை உடம்போடு நிறுத்தவேண்டுமாயின் நாங்கள் யாதாயினு மாகாரமுண்ணவேண்டும், என்னிடத்தில் வேறு பொருளில்லை யென்பது தங்களுக்குத் தெரியும். ஆதலால் இம்மங்கிலியத்தைக் கொண்டு போய் விற்றேனும் இன்றைக்கு நெல்வாங்கிவருவது நல்லது' என்று கூறி மங்கிலியத்தை அவிழ்த்து நாயனாரிடங் கொடுத்தார். நாயனார் அதற்கியைந்து அம் மங்கிலியத்தைப் பெற்றுக்கொண்டு கடைத்தெருவை நோக்கிச் சென்றார். செல்லும்போது ஒருவன் ஓர் சுமைகொண்டுவந்தான். வந்தவனை "அது என்ன சுமை" என்று நாயனார் வினவினார். "இது குங்குலியம்" என்றான். சிவபிரானுக்கு நாடோறுங் குங்குலியத் தூபமிடும் நியமம்பூண்ட நாயனார் அவன் சொல்லக்கேட்ட மாத்திரத்தே பேருவகைபூத்து அவனை நோக்கி "அப்பா இம்மங்கிலியந் தருகிறேன், பெற்றுக்கொண்டு குங்குலியந் தருகின்றாயா" என்றார். அதற்கு அவன் இயைந்தான். நாயனார் மங்கிலியத்தைக் கொடுத்தார். குங்குலியத்தை எடுத்தார். வீட்டிற்கு மீண்டார். இதனை அவர் மனைவியார் அறிந்தார். அறிந்தபோதும் அவ்வம்மையார் மனங்கோணினாரா இல்லை! இல்லை!!

இவ்வாறான உத்தம பத்தினிகளையெல்லாம் தங்கள் முன்னோராகக் கொள்ளும் பெரும் பாக்கியம் படைத்த எங்கள் பெண்மணிகளுக்கு இந்த மேலான எண்ணம் ஏன் வரவில்லை. "சந்தன மென்குறடு தான்றேந்த காலத்தும் கந்தம் குறைபடா" தல்லவா?

எமது சகோதரிகள் விரும்பி அணியவேண்டிய ஆபரணங்கள் வேறு சில இருக்கின்றன. அவை களுக்குத் தட்டான் கூலியேயில்லை. அணிய அணிய அழகுறுவனவே அன்றித் தேயுந்தன்மை யில்லை. கள்வராலே திருடமுடியாது, அணிந்த காலத்து நழுவமாட்டா, அவைகள் என்னையெனிற் சொல்லு தும்:

கற்பே பெண்களுக்கு எல்லாவற்றுள்ளுஞ் சிறந்த ஆபரணம். இதனை ஒருத்தி அணிந்திருப்பளேல் அவள் யாவராலும் நன்கு மதிக்கப்படுவள். அவளை நிகர்ப்பார் பிறரொருவருமில்லை யென்னலாம். இது பற்றியே நாயனாரும் "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனுந், திண்மை யுண்டாகப் பெறின்" என்று கற்பை வியந்து கூறினர்.

பெண்கள் அவசியம் அணியவேண்டும் பிறிதொரு பூஷணம் யாதெனில் "கல்வி". இதுவும் பெண் பாலருக்குச் சிறந்தவோர் ஆபரணமாதலன்றோ. ஆன்றோரும்,

"குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்தே
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு" என்று கல்வியைப் புகழ்ந்து கூறினர்.

மேலும் பெண்களுக்குத் தங்கள் புத்திரர்கள் சிற ந்த ஆபரணங்களாவர். இதற்கோர் திருஷ்டாந்தம் இங்கே தருகின்றோம்.

விலையுயர்ந்து மிகவும் சிறந்த விதம் விதமான வஸ் திரங்களும், நவரத்தினமிழைத்த விசித்திர ஆபரணங் களும் அதிகமாக வைத்திருந்த ஓர் பாக்கியவதி தம்மைப்போலும் பெருஞ் செல்வர் கூடுஞ் சபையில் அனைவரும் மெச்ச மேற்படி வஸ்திராபரணதிகளைத் தரித்துக்கொண்டு வருவது வழக்கம். அப்படிப்பட்ட சமயங்களில் பலருந் தன் விசேஷ அலங்காரத் தைக் கண்டு வியந்துகொள்வது அந்தப் பெண்ணு க்கு அளவிறந்த ஆநந்தமாயிருந்தது. ஒருநாள் அந்தப் பெண் ரோமை நகரத்தில் வசித்த ஒரு பிரபு பத்தி னியைக்கண்டு பேசிக் கொண்டாடப் போயிருந்த ஸமயத்தில் தான் பூண்டிருந்த விலையுயர்ந்த நகை களை ஒவ்வொன்றாய்க் காண்பித்து அவற்றிற்குச் சென்ற தொகை இவ்வளவென்றுங் கூறினள். தான் இங்ஙனங் கூறிய பின்னருந் தனது நகைகளை அந்த ரோமநகரத்துப் பெண் வியக்கவில்லை யென்று கண்ட அப்பெண் ஆச்சரியமுற்றுத் தனது ஆடை யாபரணங்களிலும் பார்க்க இவளிடம் அதிக விலை யுயர்ந்த ஆடையாபரணங்கள் இருக்கவேண்டு மென்று ஒருவாறு அநுமானித்து அங்ஙனமுளதாயின் அந்நகைகளைத் தனக்குக் காட்டும்படி கேட்டாள். அதற்கு அந்த ரோமை நகரத்துப்பெண் தன்னுடைய ஆபரணங்கள் அப்போது கைவசமில்லையென்றும், இரண்டு நாழிகைக்குள் வந்துவிடுமென்றும், அது வரையிலுந் தாமதித்து நிற்பின் காட்டுவேனென்றுங் கூறினள். ஆபரணப் பிரியம் பூண்ட மற்றப்பெண் அங்ஙனம் நின்றாள். அவள் சொற்படி இரண்டு நாழிகைக்குள் உருவில் மிக்க சிறியவராகிய அவள் மைந்தர் இருவர் பாடசாலையினின்றும் திரும்பி வீட் டிற்கு வந்து சேர்ந்தனர். உடனே மாதர் அவர்களை அந்தச் செல்விமுன்னர் கொண்டுபோய் விட்டு "இவர்கள் தான் எனது ஆபரணங்கள் என மொழிந் தாள். கேட்ட செல்வியும் நாணமுற்றாள்.

இவைகளைத் தவிர இன்னும் எங்கள் பெண்மணி கள் பூணத்தகுந்த சில நகையுள. அவை எவை யெனிற் சொல்லுகின்றோம்.

பெண்ணானவள் தான் தன் கணவனுக்கும் பிள்ளை களுக்கும் பிறருக்கும் செய்யவேண்டிய வீட்டுக் கடமைகளனைத்தையும் குற்றமில்லாமல் நிறை வேற்றி விட்டேனேயென்று தன்மனதில் நினைக்கும் போது உண்டாகும் மகிழ்ச்சி காரணமாக அரும்பும் புன்னகையொன்று. சீவனார்த்தமாகப் பொருள் சம்பாதிக்கும் பொருட்டேனும் வேறு கருமத்தேனும் தூரதேசத்திற்குச் சென்ற தன் நாயகன் (ஆல விருட் சத்தை நோக்கிப் பறவை வருதல்போல) வீடுநோக்கி வரும்போது கண்ட நாயகி தன்மனதிற் கொண்ட பேருவகை காரணமாகச் செய்யும் சிறுநகை (புன் சிரிப்பு) பிறிதொன்று. அறிவுடையோர் தன் மக்களைச் சான்றோரெனக் கூறக் கேட்டபோது உண்டாகும் பெருமகிழ்ச்சி காரணமாய் அம்மாதாவிடத்து எழும் மந்தகாசமாகிய நகை மற்றொன்று. இந்த மூவகை நகைகளையும் பூணுவளேல் அப்பெண் அடைந்த பாக்கியத்தை வேறு யார் அடைவார் ?

இக்காயம் நீர்க்குமிழிபோல் நிலையற்றதென்றும், நகை பூணுதற்காய யௌவனகாலம் மின்னலைப் போல் அதிவிரைவில் நீங்குந் தன்மையுடைய தென் றும், அன்றியும் அந்த யௌவனகாலத்திற்கு நோய் முதலியவற்றாலே பங்கமுண்டென்றும் உணர்ந்து, பொன்னாபரணங்களைப் பெரியனவா யெண்ணுது யாம் இதுகாறுங் கூறிய கற்புமுதலிய ஆபரணங்கள் தலைமயிர் கொக்குக் கொக்க நரைத்துத் தடியேடு தத்தித்திரியும் விருத்தாப்பிய தசையினும் அணியத் தகுந்தன வென்றும், அன்றியும் இப்பூதவுடம்பு நீங் கிய காலத்தும் புகழுடம்பிலும் அவ்வாபரணங்கள் விளங்குந் தன்மையுடையன வென்றுஞ் சிந்தித்து எம் சகோதரிகள் பின்னர்க்கூடிய ஆபரணங்களையே பெரிதும் விரும்பியொழுகக்கடவர்.—இந்துசாதனத் தில் வே. திருஞானசம்பந்தப் பிள்ளை.

# DEPARTMENTAL NOTES.

## பகுதிக் குறிப்புகள்.

### AGRICULTURE.

### விவஸாயம்.

**Fertility of Alluvial Soil.**

வண்டல் பிரதேசங்களின் செழுமை.—இது வரையில், வண்டல் படியும் பூமிகளின் செழுமைக்குக் காரணம் வெள்ளங்கொண்டுவரும் வண்டல் மண்ணே என்று நினைத்திருக்கிறோம். இப்பொழுது ப்ரெண்ட் என்னும் ஒரு பாதிரி, வண்டல்களில் சிறு புழுக்களிருக்கின்றன வென்றும், ஒவ்வொரு புழுவும் தன்னுடைய தலையை மண்ணில் புதைத்துக்கொண்டு வாலை வெளிப்பக்கத்தில் ஆட்டிக்கொண்டிருக்கிறதென்றும், சொல்லுகிறார். சில விடங்களில், ஒரு அவுன்ஸ் வண்டல் ஊற்றத்தில் இம்மாதிரியான புழுக்கள் காலவுன்ஸ் வரையில் இருக்கின்றனவென்று சொல்லுகிறார். இந்தப் பூச்சிகளால் தானும் வண்டல் மண்ணுக்கு மகிமை.

**Green Manure.**

பசுந்தாள் உரம்.—நன்செய் பூமியில் பசுந்தாள் உரத்தை விருத்தி செய்வதற்கு வேண்டிய சணல், காவாளை (கொளுஞ்சி) தக்கைப்பூண்டு விதைகளை மிராசுதார்கள் சுலபமாய் அடையும் பொருட்டு விவஸாய டிபார்ட்டுமெண்டார் தஞ்சாவூர் ஜில்லாவில் கொள் முதலுக்கு விற்கும்பொருட்டு டிப்போக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். டிப்போ ஏஜெண்டுகளிடமிருந்து தேவையான விதைகளை அடியில்கண்ட விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| சணல் | பட்டணம் படி | 1-க்கு அணா | 0—3—0 |
| தக்கைப்பூண்டு | படி | 1-க்கு அணா | 0—6—0 |
| காவாளை (கொளுஞ்சி) | | 1-க்கு அணா | 0—2—0 |

ஒரு ஏக்கர் விதைக்க சணல் 10 பட்டணம் படி, தக்கைப்பூண்டு $2\frac{1}{2}$ பட்டணம்படி, காவாளை 5 பட்டணம் படி, வேண்டியது. கீழ் குறிப்பிட்டிருக்கும் டிப்போக்களின் ஏஜெண்டுகளுக்கு தேவையான விதைக்கு எழுதிக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| 1. சீர்காழி. | 6. நீடாமங்கலம். |
| 2. மாயவரம். | 7. கொரடாச்சேரி. |
| 3. கும்பகோணம். | 8. விஜயபுரம். |
| 4. பாபநாசம். | 9. நன்னிலம். |
| 5. தஞ்சாவூர் | 10. மங்கநல்லூர் |

**Emigration and Agriculture.**

வெளியேறலும் விவஸாயமும்.—நம் தேசத்து ஜனங்களில் பெரும்பான்மையோர் விவஸாயம் செய்து ஜீவிக்கவேண்டியிருப்பதால், அதன் க்ஷேமத்தை எல்லா விதத்தாலும் கவனிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். அதன் க்ஷேமத்துக்கு ராஜாங்கத்தாரின் தயவும் மிராசுதாரர்களுடைய ஊக்கமும் கூலி வேலையும் அவசியம். இவைகளில் கூலி வேலையைப் பற்றி ஸமீபத்தில் கவலையுண்டாகி வருகிறது. கூலிவேலை செய்யும் வகுப்பார் அன்னிய தேசங்களை நாடிச் செல்லும் வழக்கம் அதிகப்பட்டு வருகிறது. நம் தேசத்திலேயே விவஸாயமல்லாத வேறு தொழில்கள் தோன்றி வருவதால் அவைகளிலும் விவஸாயக் கூலிகள் போய்ச் சேர்ந்து விடுகிறார்கள். ஐரோப்பியர் நடத்தும் தோட்டப் பயிர்களிலும் பலர் அமர்கிறார்கள். இப்படி யிருப்பதால் விவஸாயத்தால் லாபம் பெற்று ஸுக ஜீவனம் செய்கிறவர்கள் கூலிவேலை செய்வோரை தயவாயும் அன்புடனும் நடத்தல் அவசியமென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. இந்தக் கூலிவேலை செய்வோர் பெரும்பான்மையும் பஞ்சமர்கள். அவர்களை நாம் இழிவாய் நடத்துவது வழக்கமாயிருந்தாலும், அநாதி காலந்தொட்டு அவர்களே தேசத்து விவஸாயத்தைத் தாங்குகிறவர்களா யிருக்கிறார்கள். அவர்களில்லா விட்டால் விவஸாயம் நடக்காதென்றே சொல்லலாம். இதுவரை அவர்கள் அறியாமையாலும் வெகு காலத்து வழக்கத்தாலும் தங்கள் நிலைமையில் திருப்தி கொண்டிருந்தார்கள். இப்போது அந்த திருப்தி பல காரணங்களால் குறைந்து வருகிறது. கிறிஸ்துவப் பாதிரிகளொரு பக்கம், ராஜாங்கத்தாரொரு பக்கம், திருத்தக்காரர் ஒரு பக்கமாய், இந்தத் திருப்தியைக் கலக்கி வருகிறார்கள். பஞ்சமர்களே மற்றவர்களைப் பார்த்துப் புது உணர்ச்சிகளும் விருப்பங்களும் கொண்டு வருகிறார்கள். தங்கள் நிலைமை கேவலம் இழிவானதென்றும், உயர்குலத்தார் தங்களைக் கடுமையாய் நடத்துகிறார்களென்றும், உணர்ச்சியுண்டாகி வருகிறது. தாங்களும் நாகரிகமான நிலைமையை யடையவேண்டுமென்ற விருப்பம் அவர்களில் அநேகர் மனதில் உண்டாகி வருகிறது. பழைய காலத்தைப்போல் அவர்களைப் பலவந்தமாய் விவஸாயத்திலேயே இருக்கச் செய்தல் ஸாத்தியமல்ல.

மற்றவர்களைப்போல் அவர்களுக்கு ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தில் பூரணமான ஸ்வதந்திரம் உண்டாயிருக்கிறது. நல்ல குணமும் நல்ல உடையும் நல்ல வாஸஸ்தலமும் மற்றவர்களுக்கு எப்படிப் பொருந்துமோ அப்படி யவர்களுக்கும் பொருந்தும். மற்றவர்களைப் போல் அவர்களும் ஸொத்துக்கள் பெற்று வாழலாம், உத்தியோகமும் செய்யலாம். இப்படி யிருப்பதால் மிராசுதாரர்களும் பொதுவாய் உயர்குலத்தோரும் பஞ்சமர்களை முன்போல நடத்தாமல் அவர்கள் மனதில் திருப்தி யுண்டாகும்படியாய் நடத்தவேண்டும். நம் தேசம் எத்தனையோ வழிகளில் பெரும் மாறுதல்கள் அடைந்து வருகிறது. பிற்காலத்து நிலைமை எப்படியிருக்குமோ இப்போது சொல்லுதல் ஸாத்தியமல்ல. பஞ்சமர்கள் இப்போது அடிமைகள் போலிருப்பதை வெறுத்து விவஸாயத்தைவிட்டு சிதறிப் போவார்களானால் அவர்கள் செய்துவரும் வேலையை யார் செய்வார்கள்? உலகத்தில் தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்ற வித்தியாஸம் எப்போதும் இருந்து கொண்டே இருக்குமாயினும், தாழ்ந்தோர் உயர்ந்தோராவதும் உயர்ந்தோர் தாழ்ந்தோராவதும் கால விபரீதமாகிப் பெருந் தீங்குகளை விளைக்கும்.

**Facts about the Cocoanut.**

தென்னையைப்பற்றி சில குறிப்புகள்.—தென்னையின் உபயோகத்தை நாடி இதற்குப் பூலோக கற்பக விருக்ஷமென்று பெயரிட்டு சுபகாரியங்களுக்கு இதன் காய்கள் இத்தேசத்தில் உபயோகப்பட்டு வருகின்றன.

2. இது உஷ்ணதேசங்களில் ஸமுத்திரம் சுற்றியிருக்கும் தீவுகளில் வளர்கிறது. நெற்று ஜலத்தில் விழுந்து மிதந்துபோய் மற்ற இடங்களுக்குப் பரவுகிறது.

3. இது ஸமுத்திர மட்டத்திற்கு 3000 அடி உயரம் வரையிலும் இந்தியாவில் அலஹாபாத் பட்டணம் வரையிலும் வளர்ந்து காய்க்கிறது.

4. இலங்கையில் 32 வகைத் தேங்காய் இருப்பதாகத் தெரியவருகிறது.

5. நடுவதற்கு உரிமட்டை சிறுத்தும் மணி பெருத்து மிருக்கும் நெற்று சிரேஷ்டம். நெற்று உருட்சியாயும் குலையில் மலாறு நீளமில்லாமல் நெருக்கமாய் ஒட்டியும் இருக்கவேண்டும்.

6. நெற்றைக் கொஞ்சம் சாய்த்து நட, மழை ஜலம் நெற்றின் உச்சிக்குழியில் தங்காமல் வடிந்து விடும். அப்போது காய் அழுகாது.

7. ஸாதாரணமாய் 8 மாஸம் முதல் 15 மாஸம் வரையில் பிள்ளையைப் பிடுங்கி நடுவார்கள். கோதாவரி ஜில்லாவில் 8-15 மாஸத்தில் ஒரு தரம் பிடுங்கி நட்டு, 3-4 வருஷத்தில் இரண்டாந்தரம் பிடுங்கி நடுவார்கள்.

8. இதற்கு மணல் கலந்த சுண்ணும்பு நிலம் மிகச் சிரேஷ்டமானது. கடலோரத்து மணலும் ஆற்றோரத்து எக்கலும் நிலமும் இதற்குத் தாயிடங்கள். நீர் உள்ள இடத்திலுள்ள கடினமான சுண்ணும்புப் பாறைகளும் தென்னைக்கு உபயோகமாகின்றன.

9. சாலையில் 12 அடி தூரத்திற்கொன்றும், சோலையில் 24 அடி தூரத்திற் கொன்றும் நடவேண்டும். சதுரமாய் நடுவதைவிட முக்கோணமாய் நடுவதில் பிள்ளைகள் அதிகமாய்க் கொள்ளும்.

10. இது ஸாதாரணமாய் பத்து வருஷத்தில் காய்க்கும். 28 நாளைக்கு ஒரு பாளை தள்ளும். 3 மாஸத்தில் இளநீராகும். 8-ம் மாஸத்தில் காய் முற்றும்.

11. நீர் ஊற்ற அதிக ஆழத்திலுள்ள இடங்களில் தென்னைக்கு நீர் பாய்ச்சுவது அவசியம்.

12. அப்போதைக்கப்போது வேரைக் கொத்தி தகுந்த எலும்பு, பிண்ணாக்கு முதலியவற்றை எரு விட காய்ப்பு அதிகமாகிறது.

13. காய் பல விதங்களில் உதவுகிறது. இளநீர் பானம் செய்யவும், தேங்காய்ச் சதை பல உணவுகளுடன் சாப்பிடவும், எண்ணெய் தலைமுழுகவும். நார்கயிறு முதலியவற்றிற்கும் உதவுகிறது. ஸமுத்திரத்தில் நனைந்தாலும் இற்றுப் போகாமலிருப்பதற்கு இதன் நார் மிகத்திறமையானது. இது பல வேலைகளுக்கு உதவுகிறது.

14. கள், சாராயம், வெல்லம் முதலியன பாளையிலிருந்து கிடைக்கின்றன.

15. முற்றின வைரமரமும், கொட்டாங்கச்சியும், பொத்தான் செய்யவும் பலவித விசித்திரமான வேலை செய்யவும் உதவுகின்றன.

16. ஓலை குளிர்ந்த பந்தல் போடுவதற்கு மிகத் திறமானது.

17 தேங்காய்ச் சதையில் முத்து சில வேளைகளில் கிடைக்கிறது.

18. அனேக விதமாய் வேர், ஓலை, பூ, பால் முதலியன நோயைத் தீர்க்க மருந்தாக உதவுகின்றன.

19. வண்டுகள், புழுக்கள், நோய் நொடிகள், மரநாய், எலி, முதலியவைகளால் தென்னை நஷ்டமடைகிறது.—தென்னை.

# COMMERCE.
## வியாபாரம்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வியாபார ஊக்கம்.—இந்தியாவில் போன ஜனவரி மீ தத்தில் அடியில் கண்ட விவரப் படி 29 கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டன. அந்த விவரங்களைக்கொண்டு அந்த மீ தத்தில் வியாபாரத்தில் ஊக்கம் எவ்வளவு இருந்த தென்பதை அறிந்துகொள்ளலாம்:—

| | | முதல் ரூ. |
|---|---|---|
| 4 | பாங்கிகளும் லேவாதேவி கம்பெனிகளும் | 8,00,000 |
| 8 | இன்ஷுரென்ஸ் கம்பெனிகள் | 2,90,000 |
| 1 | நாவிகேஷன் (கப்பல்) கம்பெனி | 20,000 |
| 1 | ரெயில்வே கம்பெனி | 1,00,000 |
| 2 | கோவாப்பரேட்டிவ் சங்கங்கள் | 75,940 |
| 10 | வியாபாரக் கம்பெனிகள் (மேற் சொன்னவைகளைத்தவிர) | 7,90,200 |
| 1 | அரிசி மில் கம்பெனி | 20,000 |
| 1 | மரமறுக்கும் மில் கம்பெனி | 4,00,000 |
| 1 | எண்ணெய்க்காக சுரங்கம் வெட்டும் கம்பெனி | 5,00,000 |
| 29 | ஆக மொத்தம் ரூ. | 29,96,140 |

### The Bombay Chamber of Commerce.

பம்பாய் வியாபாரச் சபையின் வருஷாந்தர மீட்டிங் ஸமீபத்தில் நடந்தது. அந்த மீட்டிங்கின் தலைமையை அந்தச் சங்கத்துச் சேர்மென் ஆனரெபில் மிஸ்டர் ஆரம்ஸ்டிராங்கே வகித்திருந்தார். அவர் சென்ற வருஷத்தில் இந்நாட்டில் நடந்த விசேஷங்களைச் சுட்டிப் பேசினதில் இந்தியா கவர்ன்மெண்டின் தலைமை ஸ்தானம் கல்கட்டாவைவிட்டு டெல்விக்கு மாற்றப்பட்டதை யங்கீகரித்தார். பம்பாய் யூனிவர்ஸிடி அதிகாரிகள் வர்த்தகப்படிப்பு ஸம்பந்தமாய் ஒரு பட்டப்பரீட்சை ஏற்படுத்தியிருப்பதைச் சிலாகித்துப்பேசினர். ஆமதபாத்தில் வர்த்தக காலேஜ் ஒன்று ஸ்தாபிக்கப்படப் போகிறதை மெச்சிப்பேசி, அந்த காலேஜுக்கு 100பவுன் பம்பாய் வியாபாரச் சபையார் நன்கொடை கொடுத்திருக்கிறார்களென்றும், அந்த காலேஜ் ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, அதற்கு வருஷந்தோறும் திரவிய சகாயம் செய்வதைப் பற்றி யோசிக்கப்படுமென்றுஞ் சொன்னார்.

### The Envy of British Traders.

பிரிட்டிஷ் வர்த்தகர்களின் பொறாமை.—இந்தியாவின் வடபாகத்திலுள்ள அயோத்தி - ரோகில் சண்ட் ரயில்வேயில் ஹமிர்பூர் பாலம் கட்டவேண்டி அந்தப் பாலத்துக்கு மேல்நாட்டுக் கண்டிராக்டர்களிட மிருந்து லண்டனிலுள்ள இந்தியா ஸெக்ரிடரி டெண்டர்கள் வரவழைத்ததில், ஒரு அமெரிக்கக் கம்பெனியினுடைய டெண்டர் ஒப்புக்கொள்ளப் பட்ட காரணத்துக்சாக, இங்கிலாந்திலுள்ள வர்த்தகர்களுக்குள் ஆத்திரம் ஜனித்திருக்கிறதென்று அறிகிறோம். ஒவ்வொரு வர்த்தகக் கூட்டத்தாருக்கும், மற்றத் தொழிலாளிகளுக்கு இருப்பதுபோல, பார்லிமெண்டில் பிரதிநிதி மெம்பர்கள் இருப்பதால், இதைப்பற்றி காமன்ஸ் ஸபையில் ஒரு கேள்விகேட்கப்பட்டது. இந்தியாவின் அண்டர் ஸெக்ரிடரியாகிய மிஸ்டர் மாண்டேகு, அமெரிக்கக் கண்டிராக்டர்களின் டெண்டர் குறைவா யிருந்தபடியாலும், ஆங்கிலேய கண்டிராக்டர்களின் டெண்டர் நூற்றுக்கு 26½ அதிகமா யிருந்தபடியாலும் அமெரிக்க டெண்டர் ஒப்புக்கொள்ளப்பட்ட தென்று பதில் சொன்னார். அமெரிக்கக் கண்டிராக்டர்கள் இளப்பமான ஸாமான்களை மேற்படி பாலத்துக்கு அனுப்புவார்களென்றும், அதனால் அவர்கள் குறைந்த டெண்டர் கொடுத்தல் ஸாத்தியமாயிற்றென்றும், அப்படிச் செய்யாமல் இந்தியா ஸெக்ரிடரி பாதுகாக்கவேண்டுமென்றும், ப்ரிட்டிஷ் வர்த்தகர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

இந்த விஷயத்தில் இந்தியராகிய நாம் கவனிக்க வேண்டிய தென்னவென்றால், இப்படிப்பட்ட விலை பெற்ற ஸாமான்கள் இந்தியாவிலேயே செய்யப்பட்டு அவைகளை நம் கவர்ன்மெண்டார் வாங்கி உபயோகப்படுத்தாமல் அன்னிய தேசங்களிலிருந்து வாங்கி உபயோகப்படுத்துவதைத்தான். ரயில்வேக்களிலும் பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டிலும் உபயோகப்படுத்தப்படும் ஸாமான்கள் இந்தியாவிலேயே செய்யப்பட்டு வாங்கப்படுமானால், இந்திய வர்த்தகர்களும் தொழிலாளிகளும் எவ்வளவோ நன்மைபெறுவார்கள். அப்படி யில்லாமலிருப்பதால் ஸகல லாபத்தையும் அன்னியர்கள் பெறுகிறார்கள். அன்னிய தொழிலாளிகள், அன்னிய வர்த்தகர்கள், அன்னிய கண்டிராக்டர்கள், அன்னியக் கப்பற்காரர்கள், அன்னிய இன்ஷுரென்ஸ் கம்பெனிகள், அன்னிய த்தரகர்கள் இத்தனை பேருடையலாபமும் இந்தியா ரெவினியூவிலிருந்து கிடைக்கிறது.—சு. மீ.

## INDUSTRY.
## கைத்தொழில்.

**Wood and Paper.**

மாமும் காகிதமும்.—ஆஸ்திரியாவிலே மரத்தைக் காகிதமாக மாற்றுகிற ஒரு பட்டணம் உண்டு. அதிலே அறுப்புண்டு விழுகிற மரங்களை 145 நிமிஷத்தில் யந்திரத்தால் பக்குவப்படுத்திக் காகிதமாக்கிப் பத்திரிகைகள் அச்சிடப்பட்டு முடிகின்றன. இனி மரங்களைப் பட்டாடைகளாகவும் மாற்ற உத்தேசிக்கிறார்களாம்.

**Cotton Seed Oil Plant.**

பருத்திக்கொட்டை எண்ணெய் இறக்கும் பண்டகசாலை.—பம்பாய்க்கு ஸமீபத்திலுள்ள கூர்லா என்னுமிடத்தில் பருத்திக்கொட்டையிலிருந்து எண்ணெய் இறக்க ஒரு யந்திரசாலை இருக்கிறதென்று தெரிகிறது. இந்தச்சாலை சில பணக்கார வர்த்தகர்களுடையது. அவர்கள் பருத்திக்கொட்டையிலிருந்து என்னென்ன ஸாமான்கள் எடுக்கலாமோ அவ்வளவையும் இந்த சாலைக்காரர்கள் எடுத்துக் காட்டி இன்னும் இந்தியாவில் யாராவது அப்படிப்பட்ட சாலைகள் ஸ்தாபிக்க உத்தேசிக்கும் பக்ஷத்தில் அவர்களுக்கு ஒத்தாசை செய்யத் தயாராயிருக்கிறார்கள்.

**Dried Fish Industry.**

கருவாடு செய்யும் தொழில்.—மதராஸ் பிஷரீஸ் டைரெக்டர் ஸர். எப். நிக்கல்ஸன் கொஞ்சநாளைக்கு முன் ஸ்தாபித்த கள்ளிக்கோட்டையைச் சேர்ந்த தானூரில் கருவாடு செய்யும் கவர்ன்மெண்டு ஸ்டேஷனில் மும்முரமாய் வேலை நடந்து வருவதாகத் தெரிகிறது. மீன்களை வேகவைத்து காரம் ஊட்டிப் பதப்படுத்தல், மீன்களிலிருந்து எண்ணெய் இறக்குதல் முதலிய காரியங்கள் நவீன முறைகளின் படி ஸர் நிக்கல்ஸனின் பார்வையின்கீழ் நடந்து வருகின்றன. இங்கு தயார் செய்யப்பட்ட மீன்களை அனுப்பும்படி வேண்டி, ரெங்கூன், கொழும்பு முதலிய விடங்களிலிருந்து கடிதங்கள் வந்து குவிகின்றனவாம். இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய மீன்களை ஸப்ளை செய்யும் பொருட்டு மாஸச் சம்பளத்தின் மேல் 5 முக்குவர்களை நியமித்திருக்கிறார்கள். இவர்கள் தினஸரி 8 டன் மீன்கள் ஸப்ளை செய்கிறார்கள். தேவைக்குத்தக்கபடி மேன்மேலும் அதிக முக்குவர்களை நியமித்து இன்னும் விசாலமாய் வேலை செய்யலா மென்ற உத்தேச மிருக்கிறதாம்.

**Coir Industry.**

தென்னை உறி மட்டைகள்.—முதிர்ந்த உறிமட்டைகளை ஊறப்போட்டு நாரெடுத்துத் தாம்புக்கயிறுகள் திரிக்கிறார்கள். மெஷினின் உதவிகொண்டு செய்வது சுலபமாயிருந்தாலும், கையினால் திரிக்கப்படும் கயிறே சிலாக்கியமானதாம். உறிமட்டைகளை நுனி மட்டமாக நறுக்கி உயர்ந்த ப்ரஷ்கள் போல ஆக்கி வீடுகளில் சுண்ணும்படிக்கவும், சித்திர வேலைப் பேனாவாகவும் உபயோகிக்கிறார்கள். நம்மவர்களில் பலர் இவ்வுறிமட்டைகளை சிலாக்கியமான வகையில் உபயோகியாமல், அடுப்பெரிக்கப் பயன்படுத்திக்கொள்ளுவது நாட்டிற்கு நன்மை தரத்தக்கதன்று. நிலங்களில் வேலிப் பயிரை வளர்த்து அவற்றைக் கழித்து விறகுகளை அடுப்பெரித்தும், தழைகளையும், சாணிகளையும் உரம்போட்டால் நம் நாட்டு விவஸாயத்தொழில் சிறக்குமே யொழிய, தேங்காய் மட்டைகளையும் சாணிவறட்டிகளையும் அடுப்பெரிக்கும் வரையும் விவஸாயம் ஓங்காது.

**Egg Powder.**

கோழிமுட்டைப் பொடி.—கோழிமுட்டைகளைப் புதிதாய்வாங்கி அப்போதப்போது சாப்பிட்டுவருவது அனேகருக்குப்பழக்கமா யிருந்தாலும் அப்படிக் கிடைக்காத காலத்திற் புதிதாய்வாங்கிச் சாப்பிடும் பலனையே கொடுக்கத்தக்கதாயும், கெடாமல் வைத்துக்கொள்ளத் தக்கதாயு முள்ள கோழிமுட்டைப் பொடியென்று ஒரு வஸ்து புறப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலியா தேசத்தில் மெல்போர்ன் என்ற நகரத்தில் இத்தொழிலை நடத்த ஒரு கம்பெனி ஏற்பட்டிருக்கிறதாம். அந்தக் கம்பெனியார் ஏராளமாய் கோழிமுட்டைகளை வாங்கி வைக்கிறார்கள். பிறகு அந்தக் கோழிமுட்டைகள் யந்திரங்களாலோட்டப்படும் ஒரு பெரிய இரும்புக் குழாயால் நசுக்கப்படுகின்றன. அப்படி நசுக்கப்பட்ட முட்டையின் கருவெல்லாம் பசைபோல அந்த இரும்புக்குழாய்கள் மேல் ஒட்டிக்கொள்ளுகிறதாம். பிறகு அதிக உஷ்ணம் பிறப்பிக்கக்கூடியதான ஜ்வாலையின் மேலாக இந்தக் குழாய்கள் சுழன்றுவரும்படி செய்வதால் அவைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் முட்டைப் பசை உலர்ந்துபோகிறது.

இப்படி உலர்ந்தபிறகு செம்மையாய்ச் சொரண்டினால் முட்டைத்தூள் உதிருமாம். இந்தத்தூளை டப்பிகளிற்சேர்த்து அடைத்துவிடுகிறார்களாம். இப்படியே பாற்பொடியுஞ் செய்கிறார்களாம்.

# ECONOMICS.

## பொருளாதாரம்.

**Mirting Gold in India.**

இந்தியாவில் ஸவரன் அடித்தல்.—தற்போது இந்தியாவில் வழங்கும் ஸவரன்களெல்லாம் இங்கிலாந்திலும் ஆஸ்ட்ரேலியாவிலும் செய்யப்பட்டவைகள். இந்தியாவிலேயே ஸவரன்களை அடிக்கக் கூடாதாவென்று கவர்ன்மெண்டார் யோஜித்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

**Jewels and Gold Currency.**

நகைகளும் தங்க நாணயமும்.—சுதேச மித்திரனில் கே. வி. சுப்ரமணிஐயர் எழுதுகிறார்:—ரோமேஷ்சந்திரதத், இந்திய ஸ்திரீகளுக்கு ஸேவிங்ஸ் பாங்க் அவர்களணியும் ஆபரணங்களே யென்று கூறுகிறார். நகைகளை தாயாதிகள் தமக்கும் பங்குண்டென்று கேட்கமுடியாது. கோர்ட்டார் ஜப்தி செய்து வீடு, பாத்திரங்களை ஸ்வாதீனப் படுத்தலாமே யொழிய, நகைகளைத் தொடமுடியாது. ஆபரணங்களும் கண்ணுக்கு ரமணீயமா யிருக்கின்றன. உடுத்தும் ஆடைகள் போலன்றி இவைகளால் வட்டி கிடைக்காமற் போனாலும் முதலுக்கு என்றும் அழிவில்லை. அவஸரமாய்ப் பணம் வேண்டியிருந்தால் இவைகளை அடகு வைத்து எளிதில் பணம் வாங்கலாம். இக்காரணம் பற்றியே இந்திய ஸ்திரீகளுக்கு நகையின் மேல் ஆசை அதிகமாயிருக்கிறது. இந்தியாவில் புழக்கத்திற்கு விடப்பட்ட ஸவரன் முதலிய தங்க நாணயங்கள் அழிக்கப்பட்டு நகையாக மாறிவிட்டன. சில மாஸங்களாய் வெளி தேசங்களிலிருந்து பொன் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. இது அதிகமாய் நகை பாத்திரங்கள் முதலியவைகள் செய்வதற்கே உபயோகப்படுகிறது. ஸர்-விட்டல் தாஸ் தாக்கர்ஸே முதலியோர் கூறுகிறபடி 10 ரூபா தங்க நாணயம் ஏற்படுத்தி, இலவசமாய்த் தங்கத்தைக் கொடுத்து யார் வேண்டுமானாலும் நாணயங்களை கவர்ன்மெண்ட் அச்சில் அடித்துக் கொள்ளலாமென்று உத்தரவு பிறப்பிக்கப்படுமானால், உபயோகிக்கப்படாமல் பணக்காரர்கள் வீட்டில் வைக்கப் பட்டிருக்கும் நகைகள் நாணயமாகப் புழக்கத்திற்கு வர வழியுண்டு.

தற்கால நாகரிகத்தை அநுஸரிக்கும் ஸ்திரீகள் கர்நாடக நகைகளை அணிவதில்லை. குருட்டுபாவலி, இராக்குடை, ஜிமிக்கை முதலிய நகைகள் மறைந்து விட்டன. சூரியகாந்திபோல் ஒரு மூக்குப் பொட்டும் காதில் ஒரு வைரத்தோடும், கழுத்தில் ஒரு கடியாரச் சங்கிலியும், கையில் காப்புவளையும் (கெட்டிக்காப்பன்று) நாஜூக்கா யணிகிறார்கள். தேசத்தில் க்ஷேமமும் அமைதியும் ஏற்படவே முன்போல் பணத்தை யெல்லாம் நகையாக மாற்றி உடம்பின் மேலே வைத்துக் கண்ணிமை கொட்டாமல் காக்கவேண்டுமென்கிற நிர்பந்தமில்லை. மேலும் நாகரிகம் பரவப் பரவ அதிகப்பட்ட நகைகள் அவலக்ஷணமென்று ஸ்திரீகள் உணர்கிறார்கள். தட்டாருடைய தட்டலுக்குப் பயந்து நகைகளை யழிக்க விரும்பாதவர்கள் பலர். ஆகையால் உபயோகியாமல் நகையாகப் பொன் சேமித்து வைக்கப்பட்டு வருகிறது. ஆனால் 10 ரூபா தங்க நாணயம் ஒன்று உண்டாக்கினால் இவைகள் உபயோகிக்கப்படும்.

இந்தியாவில் முற்காலத்தில் தங்க நாணயங்களே உபயோகிக்கப்பட்டு வந்தனவென்பதற்குப் பல அத்தாட்சியுண்டு. தற்காலத்திலும் வைதீகர்கள் 'ஸ்வர்ண புஷ்பமென்றே' தான் தக்ஷிணை கேட்கிறார்கள், நமது இதிகாச புராணாதிகளில் வராகன் மோஹர் இவைகளைப் பற்றிதான் பிரஸ்தாபம் வந்திருக்கிறது. வெள்ளியின் விலை அதிகமாய்க் குறைந்து விட்டதால் ரூபாயின் மதிப்பும் வெளித்தேசங்களில் குறைந்து விட்டது. நம்முடைய ரூபாயில் 10 அணா வெள்ளிதான் இருப்பதால் ஸாமான்களின் விலை முன்னைவிட அதிகமாயிருக்கிறதென்று கனம் கோகலே முதலியவர்களுடைய கொள்கை. உலகத்தில் பல தேசங்களில் தங்கநாணயமே உபயோகிக்கப் பட்டு வருகிறது. ஆனால் இந்தியா ஏழைத் தேசம் என்று கூறலாம். ஆகையால் இப்பொழுதிருக்கும் வெள்ளி நாணயங்களோடு ஒரு 10 ரூபா தங்க நாணயம் ஏற்பட்டால் தீமை யொன்றும் ஏற்படாது. ஆனால் வியாபாரிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும் அதனால் பெருத்த நன்மையுண்டு.

# CO-OPERATION.
## கோவாபரேஷன்.

**Co-operation.**

கோவாபரேஷன்.—திவான் பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளை ஐக்கிய நாணயச்சங்க அபிவிருத்தியைப்பற்றி சென்னையில் ஸமீபத்தில் ஒரு உபந்யாஸம் செய்தார்.

மனிதர்கள் சேர்ந்து காரியங்களைச் செய்வது மூவகைப்படும்.

1. எல்லாரும் ஒருவருக்காக உழைப்பது.
2. ஒருவர் எல்லாருக்கும் உழைப்பது.
3. எல்லாரும் எல்லாருக்கும் உழைப்பது.

அனேகர் சேர்ந்து உழைத்து ஒருவருக்கு லாபத்தையுண்டு பண்ணினால் அது எல்லாரும் ஒருவருக்கு உழைப்பது என்ற வகுப்பைச் சேரும். உதாரணமாக, அடிமைகளும், அரசனின்கீழ் வஸிக்கும் ஜனங்களும் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

ஒருவர் எல்லாருடைய ஸுகத்திற்கும் உழைப்பதுண்டு.

"கூட்டுறவு" என்பது இவ்விருகக்ஷிகளுக்கு நடுவிலிருப்பது. ஒருவன் மற்றொருவனுக்கு உபகாரம் செய்வதால் அவன்தனக்கே உபகாரம் செய்துகொள்வது போலாகும்.

கூட்டுறவு ஸம்பந்தமான காரியங்கள் மூவகைப்படும்.

1. கடன் கொடுக்கல் வாங்கல் செய்தல்-இது நம்முடைய தேசத்தில் அதிகமாக விருக்கிறது.

2. சரக்குகளை விர்ப்பனைசெய்தல்-இது இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐயர்லாந்து முதலிய இடங்களிலிருக்கிறது.

3. கூட்டாக வேலைசெய்து உபயோகமுள்ள பதார்த்தங்களை உற்பத்திசெய்தல். டென்மார்க், ப்ரான்ஸ், ஜெர்மனிமுதலிய இடங்களில் ஸாமான்களைச் செய்யும் கூட்டுறவுச் சங்கங்களிருக்கின்றன.

ஐக்கிய நாணயச்சங்கத்தால், ஸ்வல்ப வட்டிக்கு அளவற்ற கடன் கிடைக்குமென்பதை ஜெர்மன் தேசத்தார்தான் கண்டு பிடித்தார்கள். இதைக்கண்டு பிடித்தவர் ரெய்பீஸன் என்பவர். இங்கிலாந்தில் கோவாபரேஷன் என்றுசொன்னால் ஜனங்கள் ஞாபகத்துக்கு வருவது அந்ததேசத்தில் மொத்தமாக ஸாமான்களைச்செய்து விற்கும் சங்கங்களே.

இப்படிக்கு 1906-ம் வருஷத்தில் 1,400 ஸ்டோர்கள் அதாவது கடைகளிருந்தன. 125,00,000 மெம்பர்கள் கோவாபரேடிவ் சங்கங்களில் சேர்ந்திருந்தார்கள், இந்தச் சங்கங்களின் மூலதனம் 330,00,000, பவுன். ஸாமான்களின் விற்றுமுதல் 630,00,000, பவுனுக்கு அதிகமாகவே யிருந்தது.

**Co-operative Societies in Travancore.**

திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் கூட்டுறவுச் சங்கங்கள்.—தற்காலம் திருவாங்கூரில் கூட்டுறவுச் சங்கங்களே இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த ஒருசட்டம் வேண்டுமென்று ஹைக்கோர்ட் வக்கீல் மிஸ்டர் எஸ். என். கிருஷ்ண அய்யர் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார். செலவை மட்டுப்படுத்த கோவாபரேடிவ் சங்கரெஜிஸ்டிரார் உத்தியோகத்தை விவஸாய டைரக்டரே பார்த்து வரலாமென ஓர்யோசனையும் கொடுத்திருக்கிறார். பர்மாவில் இவ்விரு உத்தியோகங்களையும் ஒருவரே பார்த்து வருகிறார்.

**The Co-operative Societies Act.**

ஐக்கிய நாணயச்சங்க ஆக்ட்.—ஐக்கிய நாணயச் சங்கங்களைப்பற்றின சட்டத்தை சிலவிஷயங்களில் கவர்ன்மெண்டார் மாற்றியிருக்கிறார்கள். முதலாவது கிராமச் சங்கங்கள் அல்லது ரூரல் ஸொஸைடிகளுக்கும் பட்டணத்துச் சங்கங்கள் அல்லது அர்பன் சங்கங்களுக்கும் இப்போதுள்ள பேதம் நீங்கி விட்டது. அன்லிமிடெட் லயபிலிடிகளுள்ள சங்கங்கள் லாபத்தைப் பாகிப்பதில் ஏற்பட்டிருந்த நிர்ப்பந்தங்கள் தளர்த்தப்பட்டு விட்டன. பல சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரு யூனியனாக அமைவதுபுதுச் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது; ஒரு ஸொஸைடி ரெஜிஸ்டர் செய்துக்கொள்ள வேண்டுமென்று மனுச்செய்துகொள்கையில் அதனுடைய பை-லாக்களும் ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டும். பை-லாக்கள் திருத்தப்பட்டாலும் அந்த திருத்தங்களும் ரெஜிஸ்டர் செய்யப்பட வேண்டும். ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஸொஸைடிகள் அந்த ஸொஸைடிகளின் மெம்பர்களல்லாத மற்றவர்களுடன் கொடுக்கல் வாங்கலைத்தவிர வேறு விவகாரங்கள் நடத்துவதை நிர்ப்பந்தங்களுக்கு உட்படுத்த மாகாணகவர்ன்மெண்டுகளுக்கு இந்தப் புதுச் சட்டத்தில் அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிர்ப்பந்தங்கள் இந்தப் புதுச்சட்டத்திலே விபரமாய்க் காணப்படாததற்கு இந்தச்சங்கங்களைப் பற்றின போதுமான அனுபோகம் இல்லாதது காரணமெனப்படுகிறது. அதனாலே மாகாணக் கவர்ன்மெண்டுகளுக்கு இவைகளைப்பற்றி அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## BANKING.

## பாங்கி வியாபாரம்.

**Five Great English Banks.**

ஐந்து பெரிய இங்கிலீஷ் பாங்கிகள்.—75 கோடி ரூபாய்க்குமேல் டிபாஸிட் உள்ளபாங்கிகள் இங்கிலாந்தில் ஐந்திருக்கின்றன. இன்னும் ஐந்து பாங்கிகள் 30 கோடிமுதல் 75 கோடிரூபாய் வரையில் டிபாஸிட்டுள்ளனவாக விருக்கின்றன. இப்பாங்கிகளிலுள்ள பணம் நாளுக்கு நாள் விருத்தியடைந்து கொண்டுவருகிறது.

**Saving Banks for Schools.**

பள்ளிக்கூடங்களுக்கு ஸேவிங்ஸ் பாங்கிகள்.—கீழ்வங்காளத்திற்கும் அஸ்ஸாமிற்கும் டைரக்டர் ஆவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷனாகிய மிஸ்டர். என். எல். ஹால்வார்ட் என்பவர் பள்ளிக்கூடங்களில் ஸேவிங்ஸ் பாங்கிகள் ஏற்படுத்த சில முயற்சிகள் செய்துக் கொண்டிருக்கிறார். இவ்விதமான பாங்கியானது முதலில் ஐரோப்பாவில் கென்ட் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

**Bank Profits.**

பாங்கிகளின் லாபம்.—பாங்கிகளின் ஷேர்ஹோல்டர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் டிவிடெண்டு அதாவது வட்டி அதிகம் குறைந்ததா யிருப்பதைக் கொண்டு பாங்கி நல்லது கெட்டதென்று எண்ணக் கூடாது. அதிக டிவிடெண்டு பிரித்துக்கொடுப்பது பாங்கிகளில் டிபாஸிட்டுகள் அதிகமாக விருந்து ஷேர்ஹோல்டர்களின் முதல் குறைந்ததாகவிருப்பதால்தான். அதாவது ஒரு பாங்கிபோட்டுப் புரட்டும் மொத்தத்தொகைக்கு ஷேர்ஹோல்டர்கள் போட்ட முதல் எவ்வளவுக் கெவ்வளவு குறைந்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு டிவிடெண்டு ஜாஸ்தியாகக் கிடைக்கும்.

**The Madura Co-operative District Bank.**

மதுரைஜில்லா கோவாபரேடிவ் பாங்கி.—ஸமீபத்தில் மதுரையில் சில கனவான்கள்கூடி மதுரை ராமனாதபுரம் ஜில்லாக்களிலுள்ள ஐக்கிய நாணயச்சங்கங்களுக்கு பணவுதவி செய்வதற்காக மதுரைஜில்லா கோவாபரேடிவ் பாங்கி என்பதாக ஒரு பாங்கி ஸ்தாபிக்கத் தீர்மானம் செய்திருக்கிறார்கள். தற்போது இந்த ஜில்லாக்களிலுள்ள ஐக்கியநாணயச் சங்கங்களுக்கு வேண்டிய பணம் சென்னப்பட்டணத்திலுள்ள ஸென்ட்ரல் அர்பன் பாங்கியிலிருந்தும், மதுரை பர்மனென்ட் பண்டு அதாவது சாச்வதநிதியிலிருந்தும் வருகிறது. இந்த பாங்கியானது ஏற்கனவே யுள்ள பாங்கிகளுக்குப் போட்டியாக ஏற்பட்டதல்ல. கோவாபரேஷன் விஷயமாகவுள்ள கோட்பாடுகளைப் பரவச்செய்வதற்கும் கடன் வாங்கும் சங்கங்களுக்கு பாங்கி நிர்வாகத்தில் இடங்கொடுப்பதற்கும் இந்த புதியபாங்கி ஏற்படுகிறது. புதியபாங்கியின் ஷேர்களைகிராம ஐக்கியநாணயச் சங்கங்களுக்கும், ப்ரைவேட் ஷேர் ஹோல்டர்களுக்கும் ஸமபாகமாகப்பிரித்துக் கொடுப்பார்கள். பாங்கியின் நிர்வாக கமிட்டியில் மேற்சொன்ன சங்கங்களுக்குப் பிரதி நிதிகளிருப்பார்கள். பாங்கிக்கு வேண்டிய ரூல்களைச்செய்வதற்கும் அதை ரிஜிஸ்டர் செய்வதற்கும் ஒரு கமிட்டி ஏற்பாடா யிருக்கிறது.

**Savings Banks in India.**

இந்தியாவில் ஸேவிங்ஸ் பாங்கிகள்.—இந்தியாவில் ஜனங்கள் வருஷாவருஷம் ஸேவிங்ஸ் பாங்கிகளில் போடும் தொகையைக்கொண்டு தேசத்தின் க்ஷேமத்தை ஸுலபமாய் அறிந்துகொள்ளலாம். பஞ்சம் நேரும் பக்ஷத்தில் ஸேவிங்ஸ் பாங்கிகளில் போடும் பணம் திடீரென்று குறைந்து பஞ்சம் நீங்கிய பிறகு முன்னிருந்தஸ்திதிக்குவர இரண்டு மூன்று வருஷம் செல்லும். 1896-97ம் வருஷத்தில் ஏற்கனவே யிருந்த தொகையோடு 51 லக்ஷம் ரூபாய் புதிதாக ஸேவிங்ஸ் பாங்கிகளில் போடப்பட்டது. 1897-98ம் வருஷத்தில் இப்படிப் புதிதாகப் போடப்பட்ட பணம் 15 லக்ஷம் ரூபாய்தான் 1898-99 ம் வருஷத்திலே இதற்குமுன் வருஷத்திலிருந்த தொகைக்கு 22 லக்ஷம் ரூபாய் குறைந்தேபோய் விட்டது. 1910-11ல் ஏற்கனவேயிருந்த தொகைக்குமேல் 105 லக்ஷம் ரூபாய் அதிகமாகப் போடப்பட்டது. 1911-12ம் வருஷத்தில் மறுதிட்டப் பிரகாரம் 188½ லக்ஷம் ரூபாய் வரையில் ஜனங்கள் ஸேவிங்ஸ் பாங்கிகளில் போடுவார்களென்று மதித்திருக்கிறார்கள். இது ரொம்ப பெரிதென்று நாம் சொல்லவேண்டியதில்லை. இப்படிஸேவிங்ஸ் பாங்கிகளில் பணம் அதிகமாவதற்கு ஒரு காரணம் என்னவென்றால் அவைகளில் ஒரு வருஷத்தில் 200 ரூபாய்க்குமேல் போடக்கூடாதென்ற நிபந்தனைபோய் 500 ரூபாய் வரையில் போடலாமென்று புதியரூல் செய்திருப்பது தான். இனிமேல் ஸாதாரணமாக வருஷம் ஒன்றுக்கு ஸராஸரியில் ஒரு கோடி ரூபாய் ஜனங்கள் புதிதாக வருஷா வருஷம் ஸேவிங்ஸ் பாங்கிகளில் போடுவார்களென்று தோன்றுகிறது.

## INSURANCE.

## இன்ஷியூரென்ஸ்.

**Insurance Bureau.**

இன்ஷியூரென்ஸைப் பற்றிய ஓர் ஸமாசார ஆபீஸ்.—ஓரியண்டல் லைப் இன்ஷியூரென்ஸ் கம்பெனியிலும், சைனும்மியூச்சுவல் லைப் இன்ஷியூரென்ஸ் கம்பெனியிலும் வேலையாயிருந்த வி. டி. பொன்னம்பல முதலியாரென்பவர் தன் ஸொந்தத்திலேயே ஒரு ஆபீஸ் வைத்திருக்கிறார். இன்ஷியூரென்ஸைப்பற்றி ஜனங்களுக்கு தெரிவிப்பதும் இன்ஷியூரென்ஸ் செய்யப்புகும் ஜனங்களுக்கு ஒத்தாசை செய்வதும் இவர் எண்ணமாம். இவர் எடுத்துக் கொண்டிருக்கும் அலுவல் நூதனமானது.

**Cattle Insurance.**

கால்நடைகளை இன்ஷியூர் செய்வது.—விவஸாயிகளுக்கு கால் நடைகளே முக்கியமான மூலதனமாகும். வியாதிகளாலும், இசை கேடுகளாலும், இன்னும்இதர காரணங்களாலும் ஆடுமாடுகள்இறந்து போவதாலுண்டாகும் நஷ்டத்தை ஈடு படுத்திக் கொள்ள ஐரோப்பாவில் அனேக தேசங்களில் விவஸாயிகள் ஒன்று சேர்ந்து பரஸ்பரம் உபயோகமான கால்நடை இன்ஷியூரென்ஸ் சங்கங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆடு மாடுகளிறப்பது விசேஷமாக அவைகளை ஸொந்தக்காரர்கள் வைத்திருக்கும் ஜாக்கிரதையைப் பொறுத்தது. ஆகையால், மேற்சொன்ன சங்கங்களுக்கு கால் நடைகளின் ஸொந்தக்காரர்கள் மெம்பர்களாயிருக்கும் பக்ஷத்தில் ஒவ்வொரு மெம்பர்களின் கால் நடைகளும் நல்ல ஸ்திதியிலிருப்பதோடு ஸொஸைடியும் நன்றாக நிர்வகிக்கப்பட்டு அதற்குச் செலுத்த வேண்டிய ப்ரீமியம் அதாவது கட்டணமும் குறைச்சலாகவே ஆகிறது. இந்தச் சங்கங்களில் ஒரு கண்டிப்பான ரூலுண்டு. அதாவது ஸொந்தக்காரன் தன்னுடைய ஆட்டையோ, மாட்டையோ கொஞ்சம் கூட கவனியாமல் அதனால் அது சாகும் பக்ஷத்தில் அவனுக்கு அதற்கு ஈடாக ஒன்றும் கொடுக்கமாட்டார்கள். இந்த ரூலால் என்ன ஆகிறதென்றால் கால் நடையின் ஸொந்தக்காரன் ஒவ்வொருவனும் அதை ஸர்வ ஜாக்கிரதையாகப் பார்த்து வருகிறான். சில சங்கங்களில் இன்ஷியூர் செய்யும் கால் நடைகளுக்கு இவ்வளவு கட்டணமென்று கொடுக்க வேண்டும். மற்ற சங்கங்களில், ஒரு வருஷத்தில் இறந்த கால் நடைகளுக்கு எவ்வளவு ஈடுகொடுக்கவேணுமென்று ஏற்படுகிறதோ அவ்வளவையும் நபர் வீதமாக வீதித்து கட்டணமாக வஸூல் செய்கிறார்கள். ஆனால் பின் சொன்ன விதத்தில் ஒரு அஸௌகரியமிருக்கிறது. அதனால் ஒரு மெம்பருக்கு இன்னதுதான் கட்டணம் கொடுக்க வேண்டுமென்று முன்னாலேயே தெரியாதிருப்பதோடு வருஷா வருஷம் கட்டணம் ஏறியும் இறங்கியுமிருக்கிறது. இறந்துபோகும் மாட்டின் முழு விலையையும் கொடுத்தால் ஸொந்தக்காரருக்கு அவைகளை ஸரிவர பாதுகாத்துவர ஒருவித தூண்டுகோலுமில்லாததால் அவர்கள் தங்கள் கால் நடைகளை கவனிக்க மாட்டார்கள் என்று எண்ணி எப்பொழுதும் முக்கால் விலைதான் கொடுப்பார்கள். ஜெர்மனி தேசத்தில் இன்ஷியூர் செய்யப்பட்ட கால்நடைக்கு ஏதாவது பெரிய வியாதி வரும் பக்ஷத்தில் அதை ஸொந்தக்காரன் உடனே ஸம்பந்தப்பட்ட இன்ஷியூரென்ஸ் கம்பெனிக்குத் தெரிவிக்கவேண்டும். இப்படித் தெரிவித்தால் அந்த கம்பெனியார் தகுந்த மிருகவைத்தியரையனுப்பி சிகிச்சை செய்விப்பார்கள். கால் நடைகளை தனித்தனியாய் இன்ஷியூர் செய்தால் ஒவ்வொன்றுக்கும் இறந்த பிறகு ஈடு கொடுப்பது கஷ்டமாயிருப்பதாலும் மோசம் நடப்பதற்கு இடங் கொடுப்பதாலும் பல மிருகங்களைச் சேர்த்தே சில சங்கத்தார் இன்ஷியூர் செய்கிறார்கள். இப்படிச் செய்தால் அவர்கள் ஒரு கால் நடைக்குக் கொடுக்கும் ஈடானது அதன் ஸராஸரி விலையே யாகும்.

இந்தியாவில் கறவை மாடுகளுக்கும், வண்டி மாடுகளுக்கும் வர வர விலையதிகமாகிவிட்டதால் இவைகள் இறந்து போகும் பக்ஷத்தில் ஸொந்தக்காரர்களுக்கு வரும் நஷ்டம் பெரிதாக விருக்கிறது. இப்படி நேரிடாமலிருப்பதற்காக விவஸாயிகள் அவைகளை இன்ஷியூர் செய்யவேண்டும். தற்காலம் அங்கங்கே ஏற்பட்டுவரும் ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஐரோப்பாவிலுள்ள மேற்சொன்ன இன்ஷியூரென்ஸ் சங்கங்களைப் போன்றவைகள். ஆகையால் ஐக்கிய நாணயச் சங்கங்கள் கால் நடைகளை இன்ஷியூர் செய்வதைப் பற்றி கவனித்தால் விவஸாயிகளுக்கு க்ஷேமமுண்டாகும்.

# EDUCATION.
## வித்யா விஷயம்.

**State Scholarship for Technical Education.**

தொழிற் படிப்புக்கு ஸ்டேட் உபகாரச் சம்பளம். எலெக்ட்ரிக்எஞ்சினியரிங்தொழிற்படிப்புக்கற்க உத்தேசிக்கும் மாணவருக்கு இந்த வருஷம் ஸ்டேட் ஸ்காலர்ஷிப்பு கொடுக்கப்படுமென்று சென்னை கவர்ன்மெண்டார் போர்ட் ஸெயிண்டு ஜார்ஜ் கஜட்டில் பிரசுரப்படுத்தி யிருக்கிறார்கள்.

**Pay of Primary Teachers.**

ப்ரைமரி உபாத்தியாயர்களின் சம்பளம்.—லாகூரில் இதுவரையில் இவர்களின் சம்பளம் ஆரம்பத்தில் ஹெட்மாஸ்டருக்கு 12 ரூபாயும், மற்ற உபாத்தியாயர்களுக்கு 10 ரூபாயுமாக இருந்தது. இப்பொழுது டிஸ்ட்ரிக்ட் போர்டுகளுக்கு இம்பீரியல் கிராண்டும், ப்ரொவின்ஷியல் கிராண்டும், பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் சம்பளத்தின்மேல் கொடுக்கப்படுமென்று உத்தரவு பிறந்து விட்டதால், கவர்ன்மெண்டு சாங்ஷன்படி இவ்வுபாத்தியாயர்களின் சம்பளத்தை ரூபாய் 15-ஆகவும் 12-ஆகவும் உயர்த்திவிட்டார்கள்.

**Technical Scholarships.**

டேக்நிகல் படிப்பிற்காக உபகாரச் சம்பளம். டெக்னிகல் படிப்புக்கு ஸர்க்கார் உபகாரச் சம்பளம் ஏற்படுத்தினது முதல் சென்னை ராஜதானியிலிருந்து 7 மாணாக்கர்கள் உபகாரச் சம்பளம் பெற்று அயல் தேசங்களுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களுக்குள் இருவர் தான் இந்தியாவிற்கு திரும்பி வந்திருக்கிறார்கள். 1909-ம் வருஷத்தில் திரும்பிவந்த மாணாக்கர் ஸர்க்காரால் நியமிக்கப்பட்டிருந்த நெசவுச்சாலையில் ஒருவருஷ மிருந்துவிட்டு பிறகு பம்பாயிக்குப் போய்விட்டார். மற்றொருவர்ஒரு மாதத்திற்கு முந்தித்தான் திரும்பிவந்தார். மாணாக்கர்களுடைய ஸ்கூல் சம்பளங்களையும், பிரயாணச் செலவுகளையும் தவிர ஸ்காலர்ஷிப்பாக சென்னை கவர்ன்மெண்டாருக்கு இதுவரைக்கும் பிடித்த செலவு மொத்தம் ரூ. 33,000.

**Instruction in Weaving.**

நெசவுத்தொழிலில் போதனை.—சென்னப்பட்டணத்தில் கைத்தொழில் அபிவிருத்தி சங்கத்தார் போன்ற இந்தியாவிலுள்ள சில சங்கங்கள் இங்கிலாந்துக்கு பையன்களைப் பொறுக்கி எடுத்து அங்கே நெசவுத்தொழில் ஸம்பந்தமான விஷயங்களைக் கற்று வரும்படி அனுப்புகிறார்கள். இப்படிச் செய்வது அனாவசியமென்று தோன்றுகிறது. பம்பாயில் விக்டோரியா ஜூபிலிடெக்னிகல் இன்ஸ்டிட்யூட் என்பதாக ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அதில் நூல் நூர்த்தல், துணி நெய்தல், இன்னும் இவைகளுக்கு ஸம்பந்தமானவைகள், இவைகளை யெல்லாம் கற்க மான்சஸ்டரிலுள்ள வசதிகள் போலிருக்கின்றனவாம். இன்னொரு ஸௌகரிய மென்ன வென்றால் மான்செஸ்டரில் சொல்லிக் கொடுப்பதைப் போலல்லாமல் பம்பாயின் வியாபாரத்திற்கு வேண்டியபடி விக்டோரியா இன்ஸ்டிட்யூட்டில் சொல்லிக் கொடுக்கிறார்களாம். ஆகையால், பையன்களை நெசவுத்தொழில் கற்றுக்கொண்டு வரும்படி மான்செஸ்டருக்கு அனுப்புவது அனாவசியம்.

**A Co-operative School.**

ஒரு கோவாபரேடிவ் ஸ்கூல்.—செங்கல்பட்டுஜில்லாவில் உத்தரமல்லூர் கோவாபரேடிவ் யூனியனுக்குள்பட்ட சங்கங்களில் மெம்பர்களுடைய குழந்தைகளுக்காக சம்பளம் ஒன்று மில்லாமல் கோவாபரேஷன் முறையில் ஒரு ஸ்கூல் ஏற்படப் போவதாகத் தெரிகிறது. உத்தரமல்லூரில் ஏற்கனவே ஒரு சின்ன பள்ளிக்கூட மிருக்கிறதாம். ஆனால், அது ஸரிவர நடக்கவில்லையாம். ஆகையால் அந்த ஸ்கூலை ஐக்கிய நாணயச் சங்கங்களெடுத்துக் கொண்டு ஒவ்வொரு மெம்பரும்தான் சங்கத்தில் போட்டிருக்கும் பணத்துக்குக் கிடைக்கும் வட்டியில் மூன்றணா வீதம் போட்டு மானேஜ் செய்யப் போகிறார்களாம். இப்படிக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 60 கிடைக்கும். இதையும் கவர்ன்மெண்டாரிடத்திலிருந்து கிடைக்கக் கூடிய ரூ 100 கிராண்டையும் வைத்துக் கொண்டு ஸ்கூலை நடத்துவார்கள். ஐக்கிய நாணய மெம்பர்களின் குழந்தைகளுக்கு ஸ்கூல் சம்பளம் ஒன்றுமில்லை. மற்றவர்களின் குழந்தைகளுக்கு ஸ்வல்ப சம்பளம் வாங்குவார்கள்.

## ECONOMIC PRODUCTS.

## விலையுள்ள பொருள்கள்.

**Guava.**

கோய்யா.—இது கனிமரங்களி லொன்று. இம் மரத்துப்பட்டை துவர்ப்புள்ளதும் அதிலிருந்தெடுக்கப்படும் நீர் முரணுன தோல்களைப் பதனிடுமாறு உபயோகிக்கப்படுவதுமாயுள்ளது. அதிலே நூற்றுக்கு 25 விகிதம் தோலைப் பதனிடக்கூடிய திராவக மிருக்கின்றதாம். அதன்பழம் மிக்க சுவையுடையதேயாயினுஞ் சிறுபிள்ளைகளுக்கு அஜீரணத்தாலாகும் மாந்தம் முதலிய நோய்களை வருவிக்குந் தன்மையுடையதாயிருக்கிறது. இதன்வேரின் பட்டையைத்துருவி அரை அவுன்ஸ் நிறையுள்ள பாகத்தை 6 அவுன்ஸ் நீரிலிட்டு அவித்து 3 அவுன்ஸாக வற்றச்செய்து சிறு கரண்டி அளவாகக் கொடுத்துக்கொண்டுவர அது குழந்தைகளின் கிராணி மாந்தம்முதலிய வியாதிகளை நீக்குவதில் திறமான மருந்தெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இஃது இந்தியாவிலே பலவிடங்களிற் பயிராகநாட்டிச் செய்கைபண்ணப்படுகிறது. வங்காளம், ரங்கூன்முதலியவிடங்களிலே ஏராளமாய்க்காணப்படுகிறது. அப்படியிருந்தாலும் அவ்விடங்களிலே இதன் விலையோ குறைவல்ல. பழத்துக்குத்தக்கபடி நூற்றுக்கு 3 ரூபாமுதல் 5 ரூபாவரையுமாக விலைப்படுகிறது. ரங்கூனிலே புகைவண்டியோடத் தொடங்கு முன் நூறு 12 அணுமுதல் ஒருரூபா எட்டணுவரையில் விலைப்பட்டதாம். தற்காலத்து ரங்கூனிலே இது புகைவண்டிப்பாதை கடுத்துள்ள விடங்களில் ஏராளமாகச் செய்கைபண்ணப்படுகிறது. ஆனுல் இதனைப் பிரயோகப்படுத்துந்தன்மையை உணராதவர்களாய்ப் பலர் பனந்தோட்டங்களிற் சிலவற்றிலே தான் பயிராக வளரவிடுகிறுர்கள். அனேகர் அதன் பிரயோஜனத்தை அதன் பழகாலத்திலே விற்று லாபமடைந்திருப்பினும் அதிகமாகவுள்ள அச்செய்கைக்கேற்ற பாழான நிலங்களிலாவது அதனைச்செய் பயிராகச் செய்தற்கு முயல்கின்றுரில்லை.

இதன் பழச்சாற்றைப் பாகுசெய்து தகரத்திலடைத்து இங்கிலீஷ் வியாபாரிகள் பெருத்தவியாபாரஞ் செய்கிறுர்கள். கொய்யாமரச்செய்கையைச் செய்ய முயல்வார்களாயின் அதிக இலாபத்தை அடைவார்கள்.

**The Use of Maize.**

மக்காச்சோளத்தின் உபயோகம்.—நமது தேசத்தில் பஞ்சாப், அயோத்தியா, வடமேற்கு மாகாணங்களில் மக்காச்சோளத்தை உடைத்து அரிசிபோலச் சமைத்து சாப்பிடுகிறுர்கள். அத்தேசத்தவர்களுக்கு இது தான் பிரதானமான போஜன பதார்த்தம். பஞ்சாப் தேசத்திலும், வட மாகாணங்களிலும் இதை மாவாகத் திரித்துரொட்டி செய்து சாப்பிடுகிறுர்கள். வங்காளத்திலும், சூட்டியா நாகப்பூர் என்னும் மாசாணத்திலும் மச்காச்சோளத்தை அரைத்துக் கூழ் காய்ச்சிக் குடிக்கிறுர்கள். சென்னை ராஜதானியிலும், இன்னும் சில இடங்களிலும், பச்சைக் கதிர்களைக் கொய்து வேவித்தும் வறுத்தும் சாப்பிடுகிறுர்கள். திருச்சினப்பள்ளி ஜில்லாவைச சேர்ந்த புதுக்கோட்டை சமஸ்தானத்திலிருக்கும் குடியானவர்கள் மக்காச்சோளத்தை இறவைப் பயிர்செய்து அதை உடைத்து மாச்சாதம் செய்து சாப்பிடுவதுடன், அதைத் தங்களுடைய கால்நடைகளுக்கும் சிலவேளைகளில் கஞ்சியாக உபயோகிக்கிறுர்கள். இந்த தானியத்தின் அருமை பெருமை இவர்களுக்கு அனுபோகத்தில் நன்ருய்ப் புலப்பட்டிருப்பதினுல், அவர்கள் கூலிவேலை செய்வதில் அவர்களுக்கு தானியத்தைக் கூலியாய்க் கொடுக்கும்போது நெல், சோளம், ராகி முதலாகிய தானியங்களைவிட இதை சிலாக்கியமாய்ப் பேசி இதையே கொடுக்கும்படி கேட்கிறுர்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் விளையும் மக்காசோளம் அநேகமாய்ப் புதுக்கோட்டைக்குத் தான் கொண்டுபோய் விற்கப்படுகிறது. கங்காநதி தீரத்திலுள்ள அனேக இடங்களிலும், தென்னிந்தியாவிலுள்ள பட்டணங்களிலும், மக்காச்சோளக் கதிர்களைப் பச்சையாகக் கொய்து காய் கறி சமைப்பதுபோல் சமைக்கிறுர்கள். மேலும் விளைந்த தானியத்தைப் பொரியாகப் பொரித்து மத்தியான போஜனமாக உபயோகிக்கிறுர்கள். பொரியை மாவாக்கி சர்க்கரை கலந்து "சத்துமா" வாசவும் சாப்பிடுகிறுர்கள். அமெரிக்கா ஐரோப்பா தேசங்களில் குதிரை, மாடு, ஆடு, பன்றி முதலிய மிருகங்களையும், கோழிவாத்து முதலிய பக்ஷிகளையும் கொழுக்கச் செய்வதற்கு மக்காச்சோளத்தின் பச்சைக்கதிர்களை விசேஷமாக உபயோகிக்கிறுர்கள்.

நூல் நிலையம், சென்னை-600090.

## BUSINESS METHODS.
## வியாபாரமுறைகள்.

**Business.**

வியாபாரம்.—வியாபாரத்துக்கு கையில் திட்டிருக்கவேணும். அதோடு திறமையும் வேணும். அனேகம் பேர்களுக்கு ஆசை மட்டு மிருக்கிறது, சக்திதான் இல்லை.

**Dress in Business.**

வியாபாரத்தில் நல்ல உடை.—வியாபாரத்தை யதிசப்படுத்த நல்லஉடை அவசியமென்பதை எல்லா உயர்ந்த வியாபாரிகளும் அறிவார்கள். இந்தவிஷயமாக "மான்செஸ்டர் கார்டியன்" என்ற பத்திரிகை நிருபரின் அனுபவத்தைக் கவனித்தல் பயன்தரக்கூடியது. அவர் சொல்லுவதாவது:—

"நான் லண்டன் நகரத்தில் உலாவிக்கொண்டிருந்த பொழுது ஒரு வியாபார ஊக்கமுள்ள பிரயாணியைச் சந்தித்தேன். அவன் தொப்பியை வைத்துக்கொண்டிருந்ததைப் பார்த்தால் அவலக்ஷணம் பிடித்துத்தின்னது. நான் அவரை நிறுத்தி வெகு மரியாதையாய் அவருக்கு ஸங்கதியை எடுத்துச்சொன்னேன். அவர் எனக்கு அந்த உதவிக்காக வந்தனம் செய்துவிட்டு என் விலாஸத்தையும் பெற்றுக்கொண்டுபோய் விட்டார். மறுநாள் காலையில், ஒரு பவுனும், அதோடு மிகவும் வணக்கமான ஒரு கடிதமும் அவரிடமிருந்து எனக்கு வந்தது" அந்தக்கடிதம் என்னவென்றால்:—

"ஐயா, இன்றையதினம் தாங்கள் எனக்கு ஒரு பெருத்த உபகாரம் செய்தீர்கள். நான் நேற்று ஒரு பெரிய வியாபாரியிடத்திற்கு போனேன். நான் என்னுடைய தொப்பியை அவலக்ஷணமாய் வைத்துக்கொண்டு போயிருந்தேனேயானால் எல்லாவித கஷ்டங்களோடு ஆர்டரே கிடைக்காமல் போயிருக்கும். இவ்வித கஷ்டங்களிலிருந்து என்னைத் தாங்கள் விடுவித்ததற்காக நான் ஒரு பவுன் அனுப்பியிருக்கிறேன். தாங்கள் என்னைக் கூப்பிட்டுச் சொன்னது எவ்வளவோ லாபமாயிற்று. இன்னொருவனு யிருந்தால் நமக்கென்ன அதிகப்பிரஸங்கித்தனம் என்று சும்மாயிருந்திருப்பான்."

**Advice from Experience.**

அனுபோகத்தால் சொல்லும் புத்திமதி.—நம்முடைய தேசத்து வியாபாரிகளுக்கு வியாபார விஷயமாய் எவ்வளவு சொன்னாலும் தேவைதான். அடியில்கண்ட விஷயங்கள் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்து நியூயார்க் பட்டணத்து வியாபாரி ஒருவர் அனுபோக வித்தமாய்க் கண்டறிந்தவைகள்.

1. எவனுக்காவது நீ கடன் கொடுக்கவேண்டியிருந்து அவன் எப்பொழுது வேணுமானாலும் மென்னியைப் பிடிக்கும்படியான ஸ்திதியில் நீ இருந்தால் உடனே நீ தகுந்த ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

2. உன் ஸ்நேகிதனோடு ஏதாவது வியாபாரம் வைத்துக்கொள்ளும் பட்சத்தில் பிறத்தியானிடம் வியாபாரம் செய்தால் எப்படி தஸ்தாவீஜ் ஏற்படுத்திக்கொள்ளுவாயோ அப்படியே, தஸ்தாவேஜ் ஏற்படுத்திக்கொள். வியாபாரத்தில் தாக்ஷண்யப்பட்டால் தனம் நாசமாகும்.

3. உன் கடை சிறியதாயிருந்து ராஜபாடையில் இல்லாமல் பக்கத்து சந்துக்களிலிருந்தால் நீ விற்கும் பக்ஷணம் கொஞ்சம் திறமாயிருந்து வந்தவர்களுக்கு கொஞ்சம் நன்றாய் எடுத்துக்கொடுத்தால் எல்லாரும் தேடி வருவார்கள்.

4. நீ என்ன மரியாதையாயிருந்தும் உன் வியாபாரத்தை பைரங்கப்படுத்தியும் பக்கத்துக்கடைகளில் வாங்கும் வாடிக்கைக்காரர்கள் உன் கடைக்கு வராதபக்ஷத்தில் பக்கத்துக்கடையில் வாங்குகிறார்களே வாங்குகிறார்களே என்று சொல்லி துக்கிப்பதில் பிரயோஜன மில்லை.

5. முன்னுக்கு வரவேண்டுமானால் ஸமயம்வாய்ந்த போதெல்லாம் புகுந்து கொள்ளவேணும். கொடுக்கிற தெய்வம் கூரையைப்பூறிக் கொடுக்குமென்று சும்மாயிருந்தால் ஒன்றும் வராது.

6. பட்சணக்கடை இருட்டாய் வெளிச்சமில்லாமலிருந்தால் ஒருவரும் வரமாட்டார்கள்.

7. உன் கடையை நன்றாய் வைத்துக்கொண்டிருந்தால் உன் குமாஸ்தாக்களும் நன்றாய் விற்பார்கள். வருகிறவர்களும் நன்றாய் வாங்குவார்கள்.

## FRAUDS AND FAKES.
## மோசங்களும் பித்தலாட்டங்களும்.

### A Novel Use of the Snake.

பாம்பின் பிரயோஜனம்.—கல்கத்தாவிலுள்ள ஹைகோர்ட் சிவில் கோர்ட்டில் நடந்த ஒருகேஸில் கக்ஷிக்காரனை மகமதியனொருவன் கணக்கை தாக்கல் செய்திருந்தான். அக்கணக்கை பரிசோதித்ததில் ரூ. 500-க்கு நேபாளத்திலிருந்து பாம்பு வாங்கினதாக எழுதியிருந்தது. அதை விசாரித்ததில், பாம்பின் கொழுப்பைக்காய்ச்சி நெய்யோடுகலக்கிறதாக தெரிய வந்தது. இந்த அசியாயம் புதிதாயிருக்கிறது.

### False Coins and Currency Notes.

கள்ள நாணயங்களும் நோட்டுகளும்.—இரங்கூனில் கள்ள நாணயங்கள் பரவி வருகின்றனவாம். நமது நாட்டிலும் ஆங்காங்கு நடமாடக் காண்கிறோம். பலர் சிக்ஷிக்கப்பட்டுமுள்ளார். ஒரு ரூபாயில் வருஷமிருக்கிறதற்கு ஸமீபத்தில் ஒரு புள்ளி சில நாணயங்களில் காணப்படுவதுண்டு. அது பொய் ரூபாயென்று சொல்லிக்கொள்வதையும் கேட்டிருக்கிறோம். இப்போது இதெல்லாம் பெரிதல்ல; ஒரு அணு நாணயத்தில் பொய் நாணயம் அதிகமாகப் பரவுகிறது. அது ஈயத்தில் செய்யப்படுகிறதென்று காண்கிறது அதை வளைத்தால் வளையும். உண்மையாண நாணயம் வளையமாட்டாது. இக்குறிப்பு கவனிக்கத்தக்கது. இரங்கூனில் பொய் நோட்டுகள்கூட உற்பத்தியாகிவிட்டதில் நோட்டுகளிடத்து நம்பிக்கைத் தாழ்வேற்பட்டுளதாம். இஃதெல்லாம் வர்த்தக நாணயத்துக்கு அபாயகரமான காரியங்களாகும்.

### Fraudulent Advertisements.

மோசக்கருத்தர்ன விளம்பரங்கள்.—பத்திரிகைகளில் வெளிவரும் சில விளம்பரங்கள் மோசக்கருத்துள்ளவைகள். சில காலத்திற்குமுன் ஓர் வியாபாரி மூட்டுப்பூச்சியைக் கொல்வதற்கு ஓர் யந்திரம் கண்டு பிடித்திருப்பதாகவும், அதைவேண்டு வோர்க்குக்குறைந்த விலைக்கு வி. பி. யில் அனுப்பவதாகவும் விளம்பரம் போட்டான். அனேகர் ஆர்டர் அனுப்பினர்கள். கடைசியில், வியாபாரி, ஒவ்வொருவருக்கும் இரண்டுகெற்களை யனுப்பிப் பின்வருமாறு உபயோகிக்கும்படி யெழுதினன்:—"ஓர் கல்லில்மூட்டுப்பூச்சியைப் பிடித்துவைத்து மற்றொருகல்லால் நசுக்க வேண்டும்."

### Adulterated Milk.

கலப்படஞ் செய்யப்பட்ட பால்.—லாபத்தை உத்தேசித்து உணவுப்பொருள்களைக்கலப்படஞ்செய்வது மிகவும் ஸாதாரணமாகவிருக்கிறது. பப்ளிக் அனலிஸ்ட் அதாவது பரிசோதகர்களிடத்தில் வரும் கலப்படஞ் செய்யப்பட்ட உணவு பதார்த்தங்களில் முக்கியமானது பால். வியாபாரிகளும், விற்பவர்களும் பாலைக்கலப்படஞ்செய்ய பின்வரும் முறைகளில் ஏதாவது ஒன்றை அநுஷ்டிக்கிறார்கள்.

(1) பாலில் ஜலத்தைச் சேர்த்தல். இது மிகவும் ஸாதாரணம். அனேகமாய் கறக்கும்ஸமயத்தில் ஸமீபத்திலிருந்து வாங்கினலொழிய நல்லபால் கிடைப்பது அரிது.

(2) பாலிலிருந்து ஏடையெடுத்துவிடல். பாலைக் காயவைத்து மேலாக நிற்கும் ஆடையை யெடுத்துவிட்டு நல்லபாலென்று சிலர் விற்கிறார்கள். யந்திரத்தால் பாலிலுள்ள எல்லாக் கொழுப்பையும் எடுத்துவிட்டு ஏடெடுத்த பாலை நல்லபாலென்று வேறுசிலர் விற்கிறார்கள். மற்றும் சிலர் ஏடெடுத்தபாலை நல்ல பாலுடன் கலக்கிறார்கள். பாலிலிருந்து ஏட்டையெடுத்துவிட்டு ஜலத்தையும் சேர்க்கிறதுண்டு.

(3) பால்ரொம்ப நாளைக்கிருக்கும்படி போரிக் ஆஸிட் அல்லது வெண்காரத்தைச் சேர்த்தல். சிலர் "பார்மலின்" என்றகெடுதலான சரக்கைச் சேர்ப்பதுமுண்டு.

(4) பால் வாங்குபவர்களை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் பார்வைக்குத் தடிப்பும் நல்ல நிறமும் கொடுக்கக்கூடியதுமான பதார்த்தங்களைச் சேர்த்தல்.

(5) சில பசுக்கள், பாலில் எவ்வளவு கொழுப்பு, சர்க்கரை, ஜலம் முதலியவை யிருக்கவேண்டுமோ, அவ்வளவு அளவுள்ள பாலைக் கொடுக்கிறதில்லை. இதற்குக்காரணம் சொந்தக்காரர்கள் அவைகளுக்கு ஸரிவர தீனிபோடாமலிருப்பதாலும், அவைகளை ஸரிவர கவனிக்காம லிருப்பதாலுந்தான். இதனல் பாலில் கொழுப்பு குறைவாகவாவது அல்லது தண்ணீர் அதிகமாகவாவது இருக்கிறது. விற்பவர்கள் பாலைக் கறந்து நல்லெண்ணத்துடன் விற்றாலும் ஸ்வயப் பாலுக்குள்ள குணங்களில்லாததால் அவைகளைக் கலப்படஞ் செய்யப்பட்ட பாலென்றே எண்ணவேண்டும்.

## MACHINERY AND INVENTION.
## யந்திரங்களும் நூதனகற்பிதமும்.

**A New Yoke.**

புதிய நுகத்தடி.—இப்போது அநுஷ்டானத்திலிருந்துவரும் நுகத்தடியால், மாடுகளின் பிடரில் புண் படுவதை நீக்கத்தக்க நவீன நுகத்தடி யொன்று யாழ்ப்பாணத்தில் கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

**A Novel Bed.**

ஓர்நூதன மெத்தை.—படுத்துத் திரும்பும்போதெல்லாம் அந்த அந்தப்பக்கத்துக்குக் காற்றை யெழுப்பி வீசிக்கொண்டிருக்கும் புதுவகை மெத்தை யொன்று அமெரிக்காவிலே அமைக்கப்பட்டிருக்கிறது. வீசுங்காற்று விசிறியால் வீசிப்பெறும் ஸுகத்துக்கொத்திருக்கிறதாம்.

**Plantain Wine.**

வாழைப்பழ உவைன்—ப்ரான்ஸ் தேசத்தாரிருவர் கொச்சின் சீனாவிலே வாழைப்பழத்திலிருந்து ஒருவகை உவைன் (சாராயம்) வடித்தார்கள். அது வாழைப்பழச்சாற்றைப் பல பழங்களிலிருந்தெடுத்த புளி நுரையுடன் கலந்து புளிக்கவைத்து வடிக்கப்பட்டது. அது ஸாதாரண குடி வகைளிலும் மலிவானதும் மிக்க சுவையுள்ளதும் நறுமணங் கொண்டதுமாம்.

**A Rat Trap.**

ஒரு எலிப்பிரை.—எலிகளைக் கொல்ல ஒரு புதுமாதிரியான யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கூட்டுக்குள் மின்சார விளக்கும் அதனுலுண்டான தீனியும் காணப்படுகின்றன. எலி உள் நுழைந்தவுடன் மறுபடி திரும்ப முடியாமல் 50, 60. ஸெகண்டுகளுக்குள் மடிகிறது. இதோடு விடாது அது இறந்தது என்றுகூட தெரிவிக்கக்கூடிய அமைப்பும் வைக்கப்பட்டிருக்கிறதாம்.

**Life-Restoring Machine.**

பிழைப்பூட்டும் யந்திரம்.—ஜர்மன் சாஸ்திரியொருவர் பல்மோடார் என்னும் பிழைப்பூட்டும் யந்திர மொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். இதன் நீளம் 21-அங்குலமாம்; குறுக்களவு $3\frac{1}{2}$ அங்குலமாம். இதில் 2800 பவுன் நிறையுள்ள பிராணவாயு அடங்கியிருக்குமாம். இந்த யந்திரத்தை இறந்தவரது உடம்பில் உடனே செலுத்தி உபயோகப்படுத்தினால் அவர் பிழைத்து நல்ல நிலையைப் பெருவாராம். இந்த யந்திரத்தின் உதவியால் அமெரிக்காவின் சிக்காக்கோ முதலிய நகரங்களில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் பிழைத்துக்கொண்டார்களாம்.

**The New Petrol.**

புதிதான பெட்ரோல்.—தென் அமெரிக்காவில் மோட்டார் வண்டிக்குப் பிரயோஜனப்படும்படியான "பெட்ரோல்" என்னும் எண்ணெயை பளிங்குபோன்ற செங்கற்களைப்போல் கெட்டிப்படுத்தி எளிதில் கொண்டுபோகக் கூடியதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதைக் காற்றிலும் மழையிலும் போட்டிருந்தாலும் கெட்டுப்போகாதாம். இக்கல்லைக் கொளுத்துவதால் மெல்லன உருகிவருவதை இலகுவாய் தணித்துவிடக்கூடுமாம். இந்தக் கல்லின் பிரகாசத்தினுலேயே, மோட்டார்வண்டி விளக்கையும் பிரகாசிக்கச்செய்யலாமாம். மேலும் பெட்ரோலைக்காட்டிலும் நூற்றுக்கு இருபது மடங்கு குறைத்து, செலவிடக்கூடுமென்கிறார்கள்.

**A New Thermometer.**

சீதோஷ்ணந் தெ. விக்குங் கருவி.—ஜுரமடிப்பவர்களைப் பரிசோதிக்கும்போது ஆங்கில வைத்தியர்கள் உபயோகப்படுத்துங் கருவியை நேயர்கள் பார்த்திருக்கலாம். உலகத்திலெல்லாம் பெரிய கருவியொன்று அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அது 20 அடி உயரமும் 100 அடி தூரத்திலுமிருந்து பார்த்தால் தெளிவாய்த் தெரியக்கூடிய பெரிய எழுத்துகளை யுடையதாயிருக்கிறது. இக்கருவி குளிர்ச்சியை 35 டிக்கிரி வரையிலும் உஷ்ணத்தை 115 டிக்கிரிவரையிலுங் காட்டுமாம்.

**A New Safe.**

ஒரு புதுவகைப்பெட்டி.—புதுவகை நகைப்பெட்டி யொன்று கண்டுபிடிக்கபட்டிருக்கிறது. யாராவது வந்து நகைப்பெட்டியைத் தூக்கினால் அது நாய்போல ஓயாமற் குலைத்துக்கொண்டிருக்குமாம். எட்டுமணி ஓயாமற் குலைக்குமாம். அதை நிறுத்த வேண்டுமானுல் பெட்டியின் சொந்தக்காரன் வந்து அதைத் திறந்து குலைக்கும்படி உள்ளே வைத்த யந்திரத்தை அமர்த்திவிடவேண்டுமாம். இப்பெட்டி உபயோகத்துக்கு வந்தபின் களவுபோகமாட்டாது. எங்கே வேணுமென்றாலும் அச்சமின்றி நகைப்பெட்டியை வைத்துப்போகலாம்.

# LAW.
## சட்டம்.

**Master and Servant.**

எஜமானும் காரியஸ்தனும்.—காரியஸ்தன் மாஸம் ரூபா 16 மேனிக்கு 6 மாஸம் வேலை பார்ப்பதாக ஒப்புக்கொண்டான். அப்படி பார்க்கவில்லை. எஜமான் நஷ்டதாவா கொண்டுவந்தான். விசாரணையில் இரண்டுமாதம் சம்பளம் பாக்கி யென்று ருஜுப்பட்டது. ஒப்பந்தம் மாஸச்சம்பளமானபடியால் மாஸா மாஸம் எஜமான் சம்பளம் கொடுத்திருக்கவேண்டும். அப்படிக் கொடுக்காததால் காரியஸ்தன் வேலைக்கு வருமல் நின்றுபோக பாத்தியமுடையவன். ஆதலால் நஷ்டத்திற்கு ஜவாப்புதாரியல்ல.

**Water Tax.**

தண்ணீர் வரி.—ஆக்ரா டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப் முன் ஓர் தண்ணீர்வரி கேஸ் கொண்டுவரப்பட்டது. அனேகர் குழாய்களிலிருந்து வரும் தண்ணீரை யனுபவிக்கமுடியாமல் வரி மாத்திரம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள்.

ஸயட் முஸ்டாபா ஹுஸெயின் என்பவன் குழாய்த்தண்ணீர் கிடைக்காததனால் ஆக்ரா முனிஸிபாலிடியிலிருந்து ரூ. 60 நஷ்டங் கிடைக்கவேண்டுமென்று பிரியாது செய்துகொண்டான்.

முனிஸிபாலிடிக்கு விரோதமாக, செலவுதொகையுள்பட டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப் தீர்ப்பு செய்துவிட்டார்.

ஆகையால் குழாயில் தண்ணீர் வராமலிருக்கும் பக்ஷத்தில் முனிஸிபாலிடிக்கு வரி கொடுக்கவேண்டியது அவசியமில்லை யென ஏற்படுகிறது.

**An Ungrateful Vakil.**

நன்றிகெட்ட வக்கீல்.—நெல்லூர் ஜில்லாவில் ஒரு ஜமீன்தார் ஆதரவற்ற ஒரு பிராமணப்பையனைச் சிசுவிலிருந்தே எடுத்து வளர்த்து பி.ஏ., பி.எல். வரையிலும் இங்கிலீஷ் படிப்பித்துக் கல்யாணமும் செய்வித்து ஆளாக்கிவிட்டார். அவர் பி.ஏ, பி.எல். பாஸ்பண்ணி மற்றொரு ஊரில் வக்கீல் வேலையில் அமர்ந்தார். ஜமீன்தார் காலஞ்சென்றுவிட்டார். அவருக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தமகன் பட்டத்துக்கு வந்தார். இளையவர் அந்த ஜமீனில் தனக்குப் பாதி பாகம் தரவேண்டுமென்று தமையனைக்கேட்டார். ஜமீனில் அந்த வழக்கமில்லாமையால் தமையன் மறுத்தார். தம்பி ஹைக்கோர்ட்டில் வியாஜ்யம் தொடுத்தார். இவர் வியாஜ்யம் தொடுத்ததையறிந்து தமையனாகிய ஜமீன்தார் தன் பக்ஷத்துக்கு வக்கீலாக முன் தம் தகப்பனரால் முன்னுக்கு வந்த பிராமணரை நியமித்தார். பின் தம்பியும் அது தெரியாமல் அந்த வக்கீலையே தன் பக்ஷத்துக்கும் கோரினார். அப்பொழுது அவர் "உங்கள் வீட்டு அன்னத்தை உண்டுவளர்ந்தவனாதலால் உங்களிருவருக்கும் நான் பாரபக்ஷமற்ற உதவியாகவேண்டியவனாயினும் இந்த வழக்கில் உம்முடைய தமையனார் என்னை முன்னரே வக்கீலாகக் கோரிக்கொண்டார். ஆயினும் உமக்கும் ஸகாயமாக என்னைப்போன்ற சாதுர்யஸாமர்த்தியமுடைய ஒருவக்கீலைக் கொடுக்கிறேன்" என்று கடிதமொன்றெழுதிக் குறிப்பிட்ட ஒரு வக்கீலிடம் கொடுக்கும்படி அவரிடம் கொடுத்தார். ஜமீன்தார் தம்பியாகிய வழக்காளி அதைப் பெற்றுக்கொண்டு போய் தனித்து ஒரு இடத்தில்வைத்து எப்படி எழுதியிருக்கிறார் என்று அறிந்துகொள்வதற்காக அக்கடிதத்தை உடைத்துப்பார்த்தார். அதில் "நெல்லூரிலிருந்து கொழுத்த பசுக்கள் இரண்டு வந்தன. அவற்றுள் ஒன்றை நான்கைக்கொண்டேன். எனது அரிய சிநேகரே, உமக்கு ஒன்றனுப்பியிருக்கிறேன். அதைப் பக்குவப்படுத்திப் பரிபாலித்தால் மனங்கொண்டமட்டும் கறந்து குடிக்கலாம்" என்றுஎழுதி இருந்தது. இதைக் கண்டவர் மனம் என்படும். உடனே அவர் வக்கீல் வீட்டுக்குப் போகாமல் நெல்லூருக்குத் திரும்பிவந்து தமையனாராகிய ஜமீந்தாரிடம் காட்டினார். அவரும் பார்த்துச் சிரித்துக்கொண்டு "நம் வீட்டு அன்னம் நம்மை மனித எண்ணிக்கையிலும் சேர்க்காமல் மாடாக்கிவிட்டது. இனியோசித்துப்பயனென்ன? உள்ள பொருளையெல்லாம் வக்கீல்களுக் கழுதுவிட்டு அவர்கள் மனங்கொண்டமட்டும் கறந்துகுடித்துக் கொழுக்க நம் பொருள் முழுவதையும் இழப்பதினின்றும் நம்மில் யாரேனும் ஒருவர் அனுபவிப்பதினால் குற்றமில்லை. உனக்கு விருப்பமானால் தம்பி அந்த ஜமீன் முழுவதையும் நீயே அனுபவித்துக்கொள். எனக்கு வேண்டுவது சாண்வயிற்றுக்கஞ்சிதான். இப்பொருளால் இதைவிடக்கண்ட ஸுகம் வேறில்லை யென்றார் தம்பியும் மனம் ஒத்து அண்ணா தங்களுக்கு நான் எப்பொழுதும் தம்பியாக இருக்க இப்பொழுது தீர்மானித்துக்கொண்டேன். அறியாமையாற் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டாரென்று ஒரு பத்திரிகை எழுதுகிறது. கதையோ வாஸ்தவமோ தெரியாது.

# MEDICINE.

## வைத்தியம்.

**A Lucky Doctor.**

ஒரு அதிர்ஷ்டமுள்ள டாக்டர்.—ருஷ்யா சக்ரவர்த்திக்கு வைத்தியஞ்செய்யும் டாக்டருச்கு ஒரு முறைபோய் பார்ப்பதற்கு பீஸ் 70-பவுண்டாம்.

**Medicated Chillies.**

மருந்துப்பக்குவமான மிளகாய்.—2 இந்துப்பு, மூங்கிலுப்பு, பெருங்காயம், வளையலுப்பு, தினுசுக்கு பலம் 1, புளித்ததயிர் படி $\frac{1}{2}$, பச்சமிளகாய் பலம் $1\frac{1}{2}$, இந்த உப்புக்களையும் பெருங்காயத்தையும் தயிரில் கலக்கி, மிளகாயையும் சேர்த்து, ஊறின மிளகாயை வெயிலில் உலர்த்தி, மறுபடியும் தயிரில் ஊறவைத்து இவ்வாருக தயிர் முழுவதும் சுருங்கும் வரை செய்ய வேண்டியது. கடைசியில் உலர்ந்து உப்பேறின மிளகாயை ஒரு மண் கலயத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும். அஜீரணம், ஆரோசிகம், உஷ்ணவாயு, பசியின்மை, அக்கினி மந்தம், அன்னத்துவேஷம், புளிச்சேப்பம், அஜீரணபேதி, வயிற்றுப்போக்கு, வயிற்றுக்கடுப்பு, இவைகளால் கஷ்டப்படுகிறவர்கள் 4 மிளகாய்களைப் பொன்னிறமாய் வறுத்துப் பொடி செய்து அன்னத்துடன் சேர்த்துக்கொண்டு நெய் விட்டுச் சாப்பிட்டால் மேற்கூறிய வியாதிகள் சொஸ்தப்படுமாம்.

**Ear Diseases.**

காதுநோய்.—அமெரிக்காவில் ஒரு டாக்டர் பிரஸங்கஞ் செய்தபோது ஸொந்த இனத்தில் விவாகஞ் செய்துகொள்பவர்களின் பிள்ளைகளில் மூவருக்கொருவர் காதுநோய்க்குள்ளாகிருர்கள். அதனுல் ஸொந்த இனத்தில் கலியாணஞ் செய்து கொள்ளுவது கூடாதென்று கூறினுர்.

**Evils of Animal Food.**

மாமிச போஜனத்தா லுண்டாதுங் கெடுதி.—மாமிசத்தின்பொருட்டுக் கொல்லப்படும் மிருகங்களிற் பல மனுஷரைப்போலவே பலவிதநோயுடையவைகளாயிருக்கின்றன வென்றும், அவைகளைப் புசிப்பவர்களும் அந்தந்த நோய்களினுலேயே பீடிக்கப்படுகிருர்களென்றும் ஒருவர் போதிய ஆராய்வொடு வெளிப்படுத்தியிருக்கிருர்.

**Scorpion Sting.**

தேள்கடி.—காஞ்சுரம் வேரை மூத்திரத்தாலரைத்துப் பூசவும் (2) இங்கிலீஷ் மருந்தாகிய டர்பென்டய்ன் என்றதைப் பிரயோகிக்கவும். (3) அறுகம்புல் தோகைகளைக்கொண்டுவந்து கசக்கி அதில் வருகிற சாற்றை நசியமிடவும்.

**Tamarind Trees and Malaria.**

மலேரியா என்னும் விஷஜுரமும் புளியமாங்களும்.—சில நூற்ருண்டுகளுக்கு முன் திருவாங்கூர் சமஸ்தானம் தென்பாகம் முழுமையும், மலேரியா என்னும் விஷஜுரத்தினுல் அநேக ஜனங்கள் மாண்டார்கள். 300 வருஷங்களுக்கு முன்னிருந்த ஒரு மஹாராஜா வைத்திசாஸ்திரிகளை தன் முக்கியப்பட்டணமாகிய பத்மனுபபுறத்திற்கு வரவழைத்து, இவ்விஷஜுரத்தைப் போக்கடிக்கக்கூடியவழியைகண்டு பிடிக்கும்படி அவர்களுக்குச்சொன்னுர். அதின்மேல் வைத்திய நிபுணர்களெல்லாரும் ஒன்ருய்க்கூடி, பின் வருமாறு கண்டுபிடித்தார்கள். புளியமரத்திற்கு ஈரத்தை இழுத்துக்கொள்ளுகிற சக்தியிருக்கிறது, தேகத்தில் எதாவதுஒரு வீக்கமிருந்தால் அதன்மேல் புளிஇலைக் கஷாயத்தை பொறுக்கக்கூடிய சூட்டுடன் அடிக்கடி விட்டுக்கொண்டிருந்தால், அவ்வீக்கம் வாங்கிப்போகும், புளியமரங்களின் கீழ்ப்படுத்திருந்தால் தேகத்தில் உஷ்ணம் அதிகரிச்கும். நமதுதேகத்தில் ஏதாவதொருபாகம் ரத்த ஓட்டமில்லாமல் ஜில்லிட்டிருந்தால், புளியஇலைக்கஷாயத்தை சூட்டுடன் அந்த இடத்தில் ஊற்றினுல், சூடு உண்டாகி ரத்த ஓட்டம் உண்டாகும். ஜன்னி பிறந்தவன், புளியமரத்தின் கீழ் படுத்திருந்தால அந்த ஜன்னி தெறித்துப்போகும். மலேரியாவிஷஜுரம் இருக்கிற இடங்களில் புளியமரங்களைப் பயிராக்கினுல், பூமியிலுள்ள நசுநசுப்பு ஈரத்தை இழுத்துக்கொள்ளும், அதனுல் அவ்விஷஜுரம் நீங்கிவிடும். புளியமரத்திற்கு மின்சாரத்தை விடுகிறசக்தி ஜாஸ்தியிருக்கிறது. இவர்கள் இப்படிச் சொன்னதை மஹாராஜா கேட்டு, தன் ராஜ்யத்தில் ஒவ்வொருவனும் ஒரு புளியமரத்துக்குக் குறையாமல் பயிராக்க வேண்டுமென்று, தம்பட்டம் போடச்சொன்னுர். அப்படிச்செய்த கொஞ்சகாலத்துக் கெல்லாம் அவ்விஷஜுரம் இருந்த இடங்கள் முழுதும் புளியந் தொப்புகளாயின. அவ்விஷஜுரமும், தென்திருவாங்கூர் ஸமஸ்தான முழுமையும் நீங்கியது. இப்படிச் செய்ததினுல், அந்த ராஜாங்கத்திற்குப் புளியமரங்களிலிருந்து வரும்படி ஏற்பட்டதல்லாமல் அநேக ஜனங்கள் அவ்விஷஜுரத்திலிருந்து ரக்ஷிக்கப்பட்டார்கள்.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்

**Performed his Sandyavandanam.**

ஸந்தியாவந்தனம் பண்ணினான்.—ஸந்தியாவந்தனம் பண்ணினாயா? என்று தகப்பன் பிள்ளையைக் கேட்க "பெருமாள் கோவில் குளத்தில் பண்ணினேன்" என்றான். "அதில் தண்ணீரில்லையே" என, "தண்ணீர் இருக்கிறது என்று அடுத்த வீட்டுக் குப்பனுக்கு யாரோ சொன்னானாமே" என்றான்.

**An Anecdote about our Empress.**

சக்ரவர்த்தினியைப் பற்றி ஒருகதை.—சக்ரவர்த்தினி கல்கத்தாவுக்கு விஜயம் செய்திருந்தபோது அவரைப்பற்றிப் பின் வரும் கதை சொல்லப்படுகிறது:—சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் ஸர்டேவிட் யூலுடைய ஜூட்மில்லைப் பார்க்கப்போயிருந்த போது, அங்கு வேலை செய்துகொண்டிருந்த ஒரு பெண் அரைகுறையாயுடுத்து அழுக்குள்ளவளாய் முன்வந்து, சக்ரவர்த்தினியைப் பார்த்துக் கூச்சத்தோடும் குழந்தைத்தனமாயும் "ஸலாம், மெம்சாகிப்!" என்று ஒரு புஷ்பச்செண்டைக் கொடுத்தாளாம். சக்ரவர்த்தினி அதைப் புன்னகைப்புடன் சந்தோஷமாய் ஏற்று அதைக் கையில் வைத்துக்கொண்டு கவர்ன்மெண்ட் அவுஸுக்குத் திரும்பிச்சென்றாராம். இந்த சிறிய ஜூட் தொழிற்சாலைப் பெண் கொடுத்த கொடையை சக்ரவர்த்தினி தமக்கு இந்தியாவில் மன்னர்களும் மற்றச் செல்வவான்களும் கொடுத்த மதிப்பேறின நன்கொடைகளுடன் சேர்த்து சேமித்து வைத்துக்கொள்ளுவாரென நம்பக்கூடும்.

**Asses Introducing Newspaper.**

கழுதைகளால் வெளிப்பட்ட பத்திரிகை.—இங்கிலாந்தில் ப்ரய்டன் என்கிற இடத்தில் ஒரு பத்திரிகையை யாரும் வாங்காமலிருந்தார்களாம். பத்திரிகாதிபதி வாங்காதவர்களுக்குப் புத்திவரும்படி இரண்டு கழுதைகளுக்கு வெள்ளைத் துணியைத் தைத்துக் கழுத்துகளுக்குப்போட்டு பெரிய சிவப்பு எழுத்தில் "நாங்கள் பத்திரிகையை வாசிக்கமாட்டோம்" என்றெழுதி ஊரெல்லாம் சுற்றிவரும்படி செய்தாராம். இதைக்கண்டு சிலர் கைகொட்டிச் சிரித்தார்கள். சிலர் வெட்கங்கொண்டார்கள். இதனுடைய அர்த்தம், கழுதைகள் மாத்திரம் பத்திரிகைகளைப் படிக்காதே தவிர மற்ற மனித ஜென்மமெடுத்த எல்லாரும் பத்திரிகை படித்தே தீரவேண்டுமென்பதாம். அந்த வாரத்திலிருந்து பத்திரிகையை அநேகம்பேர் வாங்க ஆரம்பித்தார்களாம்.

**A Novel Case.**

ஓர் விநோத வழக்கு.—போலீஸ் கோர்ட்டிலிருந்தவர்களெல்லாம் குடல் குலுங்க நகைக்கும்படி வேடிக்கையானஸம்வாதமொன்று போலீஸ் நீதிபதிக்கும் ஒரு கிராமவாஸிக்கும் நடந்தது. கொள்ளுப்பிட்டியிலிருந்து தெஹிவளைமட்டாக போகக்கூடிய ஒரு ரெயில்வே டிக்கட்டை வைத்துக்கொண்டு கண்டியிலிருந்து மருதானைமட்டும் பிரயாணம்பண்ணி வந்தானென்று, 60 வயதுள்ள சமுசாரி ஒருவன் குற்றஞ்சுமத்தப்பட்டு போலீஸ் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்பட்டான்.

போலீஸ் நீதிபதிஅவன்செய்த தப்பிதத்தை விளக்கிக் கூறியபோது, அவன் எனரக்கொடையிலிருந்து மருதானை மட்டாக மாத்திரம் டிக்கட்டில்லாமல் வந்தது மெய்யென்றும், ரெயில்வே அதிகாரிகள் அநியாயமாகத் தன்னைக் கண்டியிலிருந்து வந்ததாகக் குற்றப்படுத்தப் பார்க்கிறார்களென்றும் கூறினான். நீதிபதி "நீ குற்றவாளியோ சுத்தவாளியோ என்கின்றாய் என்பதை மாத்திரஞ் சொல்லு" என்று வினவியபோது கிழவன் 'இல்லை என் சட்டை ஜோப்பில் பணமிருந்து டிக்கட் வாங்காமல் பிரயாணம் பண்ணினேனானால் குற்றவாளிதான். ஆனால் டிக்கட் வாங்கக் காசில்லாமல் நான் பிரயாணம்பண்ணி வந்திருக்கும்போது குற்றவாளியாகிறதெப்படி? ஆகையால் நான் குற்றவாளியல்ல' வென்றான்.

நீதிபதி சிரித்துக்கொண்டு "நீ குற்றவாளியோ சுத்தவாளியோ சொல்" லென்று மீண்டும் கேட்க கிழவன் "என்னிடத்தில் பணமிருக்கவில்லை யாதலால் நான் குற்றவாளியல்ல வென்று கோபத்தோடு சொன்னான்.

நீதிபதி, இந்தப்பட்டிக்காட்டானோடு பேசிக்கொண்டிருப்பதில் வேலை சுணக்கமே யொழிய வேறொன்று மில்லையென்று பத்து ரூபாய் அபராதம் விதித்தார்.

## CURIOSITIES.
## விநோதங்கள்.

**A Bird Carrying a Man.**

மனிதனைச் சுமந்து செல்லும் பட்சி.—ஜப்பான் தேசத்து உள்நாட்டிலிருந்து ஜப்பானியன் ஒருவன் ஒரு பட்சியின் மேலேறிச் சவாரி செய்துகொண்டு ஆகாயவழியாய் ஸைபீரியாவுக்குச் சென்றானாம். ஷை பட்சி நூதனமானதாகவும், ரூபத்தில் பருந்தைப்போலவும், தீக்குருவியிலும் பெரிய ரூபமுடையதாகவுமிருக்கிறதாம்.

**Chickens Taught to Drink.**

கோழிக்குஞ்சுக்குக் குடிகற்பித்தல்.—அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகரத்தில் ஒரு குடிகாரன் தன் வசமிருந்த கோழிக்குஞ்சுக்கு முதலில் சோடா, குடிக்கக் கற்பித்து அப்புறம் பீர், உஸ்கி முதலானவைகளையுங் குடிக்கக் கற்பித்துவிட்டானாம். அதற்காக அவனை தண்டித்திருக்கிறார்கள்.

**The Food of the Green Worm.**

பச்சைப்புழுவின் உணவு.—ஒரு மாஸத்திலே ஓர் பச்சைப்புழு தன் நிறையிலும் 6,000 மடங்கு அதிகமான நிறைகொண்ட தீனியை யுண்ணுமாம்.

**Bread Tree.**

ரொட்டிமரம்:—பங்களூரில் ரொட்டிமரம் என்ற நாமதேயங்கொண்ட ஓர் மரமுளதாம். அம்மரத்தின் காயை அநலில் சுட்டு அருந்தினால், ரொட்டி யெம் மாதிரி யிருக்குமோ, அம்மாதிரியான ருசியை கொடுக்கிறதாம்.

**Flesh Plant.**

மாமிசச்செடி :—அமெரிக்காவில் மாமிசச்செடி யென்ற ஓர் வகையானச் செடியுளதாம். அச்செடியின் இலை நிரம்ப அகலமுள்ளதாம். அவ்விலையின் நடுவில் மாமிசத்துண்டை வைத்தவுடன் மூடிக்கொள்ளுகிறதாம். பிறகு 1 மணி ஸாவகாசத்திற்கெல்லாம் இலை திறக்க அதில் வைத்த மாமிசம் காண்கிறதில்லையாம். இதை இன்னும் நன்றாய் ஆராய்ச்சி செய்யும்பொருட்டு களிமண்ணை உருட்டி வைக்கவே அவ்விலையானது மூடியும், களிமண் இருந்தாற்போலிருந்தனவாம். ஆகையால் அவ்விலை மாமிசத்தைத் தவிர வேறொன்றும் விரும்புவதில்லையெனத் தெரிய வருகிறது.

**Saturday and the Royal Family.**

சனிக்கிழமையும் ராஜகுடும்பமும்.—சென்ற 200 வருஷகாலமாய், சனிக்கிழமையானது ப்ரிடிஷ் ராஜ குடும்பத்தாருக்கு சுபதினமாயிருக்க வில்லையென்று மிஸ்டர் மகமது ராஹிமுதீன் எழுதுகிறார். 1702-ம் வருஷம் மார்ச்சுமாஸம் 18 தேதி சனிக்கிழமை 3-வது வில்லியம் அரசர் இறந்துபோனார். 1814-வருஷம் ஆகஸ்ட் மாஸம் முதல்தேதி சனிக்கிழமை ஆன்னி மகாராணி இறந்துபோனாள். 1727-ம் வருஷம் ஜூன் மாஸம் 10-ந்தேதி சனிக்கிழமையன்று 1-வது ஜார்ஜ் அரசர் இறந்தார். 1760-ம் வருஷம் அக்டோபர் மாஸம் 25-ந்தேதி சனிக்கிழமை யன்று 2-வது ஜார்ஜ் அரசர் இறந்தார். 1820 ம் வருஷம் ஜனவரி மாஸம் 15-ந்தேதி சனிக்கிழமையன்று 3-வது ஜார்ஜ் இறந்தார். 1830-ம் வருஷம் ஜூன் மாஸம் 26-ந்தேதி சனிக்கிழமையன்று 4-வது ஜார்ஜ் இறந்தார். விக்டோரியா மகாராணி யாரின் புருஷராகிய ப்ரின்ஸ் கான்ஸார்ட் 1861-ம் வருஷம் டிஸம்பர் மாஸம் 14-ந் தேதி சனிக்கிழமை யன்று இறந்தார். ஏழாவது எட்வர்ட் மகாராஜா சக்ரவர்த்தியும் 1910-ம் வருஷம் மே மாஸம் 7-ந் தேதி சனிக்கிழமை யன்று இறந்தார்.

**The Chinese and Flesh.**

சீனர்களும் மாம்ஸமும்:—எல்லாப் பிராணிகளின் எல்லா மாம்ஸமும் சீனர்களுக்கு ருசியான உணவாம். எலி, பூனை, பாம்பு, பல்லி இவைகளின் மாம்ஸம், பட்டு எடுத்த பிற்பாடு பட்டுப்பூச்சியின் மாம்ஸம், வேலைசெய்து ஓய்ந்து, ஜீவனைமாத்திரம் வைத்துக்கொண்டிருக்கும், கோவேறு கழுதை, குதிரை, ஒட்டகம் இவைகளின் மாம்ஸமும், தானாக இறந்துபோகும் பசு, பன்றி இவைகளின் மாம்ஸமும் இவைகளெல்லாம் சீனர்களுக்கு ருசியான உணவாம். காண்டன் என்ற மாகாணத்தில் எலியையும் பூனையையும் பக்குவம்பண்ணி உணவாகக் கடைகளில் வெளிப்பக்கத்தில் விற்கிறார்களாம். இறந்து போன பன்றியின் தோலையுங்கூடப் பக்குவமாகச் சமைத்து இனிப்பான உணவாக சீனர்கள் நன்கு மதிக்கிறார்களாம். ஜனங்கள் 4 பேர் சம்பாஷணை செய்தால், சம்பாஷணையின் பெரும்பான்மையான பாகம் உணவைப்பற்றியே இருக்குமாம்.

## HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

**Good Ghee.**

நல்ல நெய்—கெட்டிருக்கும் நெய்யைச் சட்டியில் காய்ச்சி அதில் கொஞ்சம் பாலும் உப்பும் போட அழுக்கெல்லாம் அடியில் படியும். நீர் சுண்டும் ஸமயத்தில் சில கிராம்பும் எலுமிச்சை இலையும் போட்டு இறக்கிக்கொள்ள கெட்டநெய் நல்லதாகுமாம்.

**Juice of the Aloe.**

கற்றழைச்சாறு.—எழுத்துமை, திராட்சப்பழ ரஸம் முதலானவைகளாற் சீலையிலுண்டாகும் அடையாளங்கள் கற்றாழைச்சாற்றால் நீங்குமாம்.

**Chips of Leather for Roads.**

ரோட்டுகளுக்குத் தோல் துண்டுகள்.—பர்மிங்ஹாம் பட்டணத்தில் மிகுதியான தோல்துண்டுகளைக் கிலுடன் சேர்த்து ரஸ்தாக்களுக்குப் போட்டிருக்கிறார்கள். அவை உறுதியாயும் பழுதுபடாமலும் இருக்கின்றனவாம். குதிரைகளின் கால்களுக்கு மெதுவாயிருக்கிறதாம்.

**Crushed Fingers.**

நசுக்கப்பட்ட விரல்கள்.—விரல்கள் எந்தக்காரணத்தினாலாவது நசுங்கிப்போனால் உடனே பொறுக்கக்கூடிய வெந்நீரில் அந்த விரலை அமிழ்த்தவேண்டியது. அப்படிச் செய்வதனால் அந்தவிரலின் நகமானது பருத்து ரத்த ஒட்டத்திற்கு இடவெளி விஸ்தாரப்படுத்திக் கொடுக்கிறது. ரத்த ஒட்டத்துக்குஇடம் ஏற்படவே வலிகுறைவாகும், உடனே ரொட்டியைத் தண்ணீரில் நனைத்துக்கட்டவேண்டும். இப்படி நசுங்கினவிரலை அஜாக்கிரதையாய் விட்டுவிடக்கூடாது. பெருத்த கெடுதலுக்குக்காரணமாகும்.

**Poor Light Oil-lamps.**

விளக்குகளில் மங்கலான வெளிச்சம்.—சிலஸமயங்களில் எண்ணெய்க்கெடுதலால் வெளிச்சம் மங்கலாயிருக்கும். அப்பொழுது கொஞ்சம் சூடத்தைப் போட்டால், விளக்கு பிரகாசமாக எரியும். சூடம் கிடைக்காத பக்ஷத்தில் கொஞ்சம் காடி (வினிகர்) யைப்போடலாம். இது வெளிச்சத்தை விருத்தியாக்குவதில் சூடத்தைக் காட்டிலும் மேலானதாக விருக்கிறது.

**Facts about Eggs**

முட்டைகளைப்பற்றிய சில விஷயங்கள்.—உடைந்த முட்டைகளை ஒருபொழுதும் வீணக்க வேண்டியதில்லை. கோழிகளையடைத்து வைத்திருக்கும்கூட்டில் உடைந்த முட்டைகளை அதிகநேரம் வைக்காமல் சீக்கிரம் எடுத்துவிடவேண்டும். ஏனெனில், உடைந்த முட்டைக்கரு பெட்டைக்கோழிகளின் இறகுகளில் ஒட்டிக்கொண்டு அவைகளுக்கு அதிக தொந்தரவைக் கொடுக்கும். குடித்தனக்காரி கெட்டிக்காரியாக இருந்தால் உடைந்த முட்டைகளை வீணக்காமல் அனேக காரியங்களுக்கு உபயோகப்படுத்தி செலவை மட்டுப்படுத்திக்கொள்ளலாம்.

கொஞ்சம் புதிய சுண்ணும்பு நீறைப் பொடியாக்கி அதை வெள்ளைக் கருவுடன் சேர்த்து மிருதுவான பசையாக்கி உடைந்துபோன பீங்கான் பாத்திரங்களை ஒட்டலாம். இது அவைகளை ஒட்டுவதற்கு திவ்யமான பசையாகும். உடைந்துபோன இடத்தில் பசையைத் தடவி மற்றொரு பாகத்தைக்கொண்டுவந்து பசைதடவின இடத்தில் அழுத்திவைத்து அனல் பக்கத்தில் காட்டினல் பசை கெட்டியாகி உடைந்த பாகங்களை நன்றாகப் பிடித்துக் கொள்ளும். ஒட்டின பாகத்தில் அதிகஜலம் பட்டு ஊராமலிருந்தால் பிடிப்பு வெகுநாள் நிற்கும்.

நெருப்புப்பட்ட தேகத்தில் கொஞ்சம் வெள்ளைக் கருவைப்போட்டால் அது சுட்ட பாகத்தில் காற்றுப் படாமல் தடுத்து எரிச்சலையடக்கும். சுட்ட இடத்தில் மாவைத் தடவுவதைக்காட்டிலும் வெள்ளைக்கருவைப் போடுவது ரொம்ப உத்தமம். முட்டையில் ஒட்டுக்கும் கருவுக்கும் நடுவிலுள்ள தோலின் உபயோகம் அநேகருக்குத் தெரியாது. காலில் முள்தைத்து ஊசியால் குத்தியும் எடுக்கமுடியாமல் முள் அவ்வளவு ஆழத்திலிருந்தால் முட்டையின்தோலை பன்னிரண்டு மணிநேரம் கட்டிவைக்கவேண்டும். அப்படிச் செய்தால் முள் அநேகமாய் வெளியில் வந்துவிடும். முட்டையின் தோலை காயத்திலாவது அல்லது சிராய்த்த இடங்களிலாவது போட்டால் சீக்கிரம் ஸ்வஸ்தமாகும். எப்பொழுதும் புதிதான முட்டைகளை யுபயோகப்படுத்தவேண்டுமே தவிர நாள்பட்ட முட்டைகளை யுபயோகப்படுத்தக்கூடாது. இதனல் முட்டைகள் எவ்வளவு உபயோகமானவை என்று நாம் நன்றாயறிந்துகொள்ளலாம். மேற்சொன்ன காரியங்களுக்கு முட்டைகள் யுபயோகப்பட்டால் முட்டை வியாபாரம் பலக்கக்கேட்பானேன்,

# ECONOMIC LITERATURE.

## பொருளாதார ஸம்பந்தமான பிரசுரங்கள்.

### The Conservation of Soil Moisture.

**நில ஈரத்தைக் காக்கும் வகை.**—கமத்தொழில் விளக்கத்தின் மார்ச்சுமீ ஸஞ்சிகையில் மேற்சொன்ன தலைப்பின்கீழ் ஓர் வியாஸமிருக்கிறது.

கொஞ்சங்கூட தண்ணீர் பாய்ச்சாமல் முழுதும் புழுதிச் செய்கையாகவே பலவகைதானியப்பயிர்களை விளைவித்து அமெரிக்கா தேசத்தவர்கள் அதிக லாபத்தை யடைகிறார்கள்.

மழை பெய்தபிறகு ஈரத்தை நிலத்திலேயே தங்கும்படி செய்வதற்கு பின்வருமாறு செய்யவேண்டும். "மழைவருஷித்தபின் நிலங்கட்டிபடாம லுழக்கூடிய தருணம்பார்த்து அத்தருணத்தில் நிலத்தை யுழுது குறுக்குழவும் உழுது இயலுமாயின் உடனே உருளையென்னுங் கமவாயுதத்தைக்கொண்டு உழுதநிலம் முழுதையும் அமரச்செய்து பின்னர் அதிற்செய்ய வேண்டிய பயிரைநாட்டி இடையிடையே நிலம்முழுதையும் பயிர்களுக்கூடாக (ஹார்ரோ) பலகொழுத்தட்டு என்னுங் கமவாயுதத்தாற் கிளறுதலினால் நிலப் புழுதிகள் பிரிவுபட்டு அவைகளுக்கிடையே யுள்ள துவாரங்கள் பெரிதாகி நிலத்துட்சென்ற நீர் ஆவியாய்ப்போகுஞ் சக்தியின்மையினால், அந்நிலத்திலே யுண்டாகிய பயிர்களின் வேர்கள்வழியாய்ப் பயிர்களுக்கு உணவாகிறது. இங்ஙனமாகவே நிலத்துட் சேர்ந்த நீர் மாத்திரமே, பயிரின் வளர்ச்சிக்குப் போதியதாகிறது. புழுதிச்செய்கையாகச் செய்யப்பட வேண்டிய நிலத்தை முதலுழவிலேயே ஆழமாயுழுது அல்லது கொத்திக் கீழ்மண்ணை நுகைவாக்க மேல் நிலத்திலே சேரும் நீர் கீழே சிக்கலின்றிச் செல்லவும் பயிரின் வேர்கள் இலகுவாயூடுருவிக் கீழேபோகவும் ஏதுவாகின்றது. மேல்மண்ணையும் போதிய அளவாகக் கிண்டிக்கிளறி நுகைவாக வைத்திருப்பதினால் துவாரக்கவர்ச்சித் தத்துவத்தினால் மேலே செல்லும் ஈரம், மேற்பரப்புக்குவராது முன்னுழப்பட்டவன்று உருளையாலமரச்செய்த உறுதியான மண்தட்டிலே நிலைநின்று புகைபரவுவதுபோல உள்நிலத்திலே பரவிப் பயிருக்கு அதிக உபயோகமாகின்றது. இங்ஙனமாகவேசெய்து, வருடங்கள்தோறும் பதினைந்து அங்குலத்துக்கு மேற்பட மழையில்லாதவிடங்களில் தானியவகைகளும் பலகனி விருட்சங்களும் நீர்ப்பாய்ச்சலின்றி அனுகூலமாகச் செய்கைபண்ணிப் போதிய பிரயோசனத்தைப் பெறுகின்றார்கள்." தவிர, நிலத்திலுள்ள நீர் வெளியே போவதற்குப் பயிர்களுங் காரணமாயிருத்தலால் வீணே வளருகின்ற பயிர்வர்க்கங்களை நிலத்திலிருந்து பிடுங்கிப் போடவேண்டியது முக்கியமேயாம்.

### Japanese Agriculture.

**ஜாப்பான் தேசத்து விவஸாயம்.**—பிப்ரவரி மாஸத்துக் கிருஷிகனில் ப்ரசுரித்திருக்கிற ஸர் ப்ரெடரிக் நிக்கல்ஸன் துரையவர்களின் ப்ரஸங்கத்தில் ஜப்பான் தேசத்துச் சங்கங்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

ஜப்பானில், ஜில்லாச் சங்கங்கள், தாலூகாச் சங்கங்கள், கிராமச் சங்கங்கள், என்று மூன்றுவகையான சங்கங்கள் உண்டு. அவற்றில் முதலாவதும் இரண்டாவதும் விவஸாயத்தையும் அதன் ஸம்பந்தமான கைத்தொழில்களையும் சேர்ந்த ஒவ்வொரு பிறிவிலும் அநுபோகத்தை அதிகமாய் நாடி வேலைசெய்யும். விசேஷமாய் கிராமச் சங்கங்களை ஸ்தாபிப்பதும், விவஸாய ஸம்மந்தமான படிப்பு ஏற்படுத்தி பரிக்ஷைகள் நடத்தி வெகுமதிகள் கொடுப்பதும் உண்டு. சீர்திருத்தப்பட்ட விவஸாயக்கருவிகளைச் செய்வதற்கும் பழுது பார்ப்பதற்கும் திறமைபெற்ற கம்மாளரைத் தயார்செய்வதும் உண்டு.

மூன்றாவதான கிராமச்சங்கங்கள் செய்யும் வேலைகளாவன:—

1. கிராமவளம் முதலியவற்றைக் குறித்தும் திரவிய நிலமையைக் குறித்தும் ரிபோர்ட்டு தயாரித்துப் பிரசுரிப்பது. (2) சங்கத்தின் வர்த்தமானப் பத்திரிகைகளைப் பிரசுரஞ்செய்வது. (3) பிள்ளைகளுக்கு ஆங்காங்கு விவஸாயக் கல்வி பயிற்றுவதற்காக விவஸாய வகுப்புகள் சிறிது காலத்துக்கு ஏற்படுத்துவது. (4) பயிர்களுக்குக் கெடுதி விளைவிக்கும் விஷப்பூச்சிகளைப்பற்றிக் கற்றுவரும்படி ஒரு வித்தியார்த்தியைக் கலாசாலைக்கு அனுப்புவது. (5) விவஸாய விஷயமான பிரஸங்கங்களுக்கு ஏற்பாடுசெய்வது. (6) காரியஸித்திபெற்ற கிருஷிகளுக்கு கௌரவப்பட்டங்களும் வெகுமதிகளும் கொடுப்பது. (7)

விவஸாய விஷயங்களில் தேறின பிள்ளைகளுக்கு வெகுமதி கொடுப்பது. (8) நாற்றங்கால்களைச் சரியாய் உண்டாக்குகிறவர்களுக்கு விவஸாயக்கருவிகள் முதலிய பரிசுகள் கொடுப்பது. (9) விருக்ஷங்கள் வைத்து உண்டுபண்ணுவதற்காக இளஞ்செடிகளைக் கொடுப்பது. (10) எருவை ஜாக்கிரதையாய்ச் சேகரித்து அதைக் கிருஷிகர் கவனிக்கும்படி செய்வது. (11) பிள்ளைகளுக்கும் கிருஷிகருக்கும் விதைகள் செடிகள் முட்டைகள் முதலானவைகளைக் கொடுப்பது. (12) அங்கங்கே சோதனைப் பண்ணைகளை ஏற்படுத்துவது. (13) பலபேர்களிடத்திலிருந்து பணம் சேர்த்து அதைக்கொண்டு அதிகமான எருவகைகளை வாங்கி மெம்பர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது. (14) பயிர்கள் வளர்ச்சிக்கும் மாசூலுக்கும் போட்டிப் பரிக்ஷைகள் நடத்தி வெகுமதி கொடுப்பது முதலானவைகளாம்.

இவற்றில் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு வெகுமதி கொடுப்பது மிகவும் முக்கியமானது. இந்த வெகுமதிகள் கொஞ்ச விலைமதிப்புள்ளவைகளாயினும் அதனால் கிராமத்தில் கௌரவமும் மரியாதையும் உண்டாகின்றன.

இன்னொரு முக்கியமான விஷயம் கடன் கொடுப்பதற்கும் மாசூலை வாங்குவதற்கும் விற்பதற்கும் கூட்டுத்தொழில் சங்கங்கள் ஏற்படுத்துவது. அவைகளில் கடன் கொடுப்பதன் நோக்கங்கள் பொருளுற்பத்திக்கேற்றவைகளாகவாவது செட்டை அபிவிர்த்தி செய்வதற்கேற்றவைகளாகவாவது இருக்கும். அதாவது எரு, பட்டுப்பூச்சி, இஞ்சி முதலிய விதைகள் இவைகளை வாங்குவது, நிலம் கிரயத்துக்கு வாங்குவது, பழய கடனைத்தீர்ப்பது, இவை போன்றனவாயிருக்கும். இந்த நோக்கம் இன்னதென்று விண்ணப்பத்தில் எழுதிக்கொடுக்கவேண்டும். விதிவிலக்குகளை மீறி நடப்பவர்கள் சங்கத்திலிருந்து நீக்கப்படுவார்கள். கடன் கேட்பவரின் ஸொந்த ஜாமீன்மேலேயே ஸாதாரணமாய் கடன் கொடுக்கப்படுகிறது. கூட்டு ஜாமீன்மேலும் கடன் கொடுப்பதுண்டு. இந்தச் சங்கத்தில் சேரும் மெம்பர்களின் குடித்தனச்செட்டு விருத்தியாகும். அவர்கள் அடிக்கடி கூட்டங்கூடி அனேக விஷயங்களைப்பற்றிப் பேசித் தெரிந்துகொள்வார்கள். தங்கள் பிள்ளைகள் கல்விகற்றுப் கொள்வதற்காக மாலைப்பள்ளிக்கூடம் ஏற்படுத்துவார்கள். அப்படிப்பட்ட சங்கங்களால் யோக்யத்தையும், போஜனம், பானம் முதலிய விஷயங்களில் மிதமும், தன்முயற்சி, பரஸ்பரஸகாயம், பரஸ்பரநம்பிக்கை, ஸகோதரத்வம் முதலிய அருமையான குணங்களும் விர்த்தியடையும். இத்தேசத்தில் இந்தச் சங்கங்களை ஸ்தாபிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

## TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

**Tamil and the Thiruvaduthurai Mutt.**

திருவாவடுதுறை ஆதீனமும் தமிழும்.—திருவாவடுதுறை ஆதீனத்தார் ஆரம்பமுதல் தமிழ்பாஷையை விருத்திசெய்வதற்குத் தகுந்த முயற்சிகளை யெடுத்துக்கொண்டு வந்தார்களென்பது யாவரும் அறிந்த விஷயம். இவ்வாதீனத்தைச் சேர்ந்த குருமூர்த்திகள் எந்தக் காலத்திலும், சிறந்த வித்வான்களைக்கூட வைத்துக்கொண்டு பல நூல்களையும் உரைகளையும் செய்வித்ததும் தவிர அனேக மாணாக்கர்களுக்கு ஆகாரம், உடை, முதலியவைகளைக் கொடுத்து தமிழ் பாஷையையும் கற்பிக்கும்படி செய்வித்தார்கள்.

வித்தியாபானுப் பத்திராதிபர் எழுதுகிறபடி "திருவாவடுதுறை ஆதீனத்திற் கல்விகற்றவர் என்றால், அதற்கே யொரு கௌரவமுண்டு. மஹா வித்வான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்தில் கல்விகற்றுத் தேறிய வித்துவசிகாமணியே என்பதும், அவர்கள் பால் கல்விகற்றுத் தேறிய வித்வ ரத்நமே ஸ்ரீ மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாதையரவர்க ளென்பதும் யாவரே யறியார் ?"

தமிழ்ச்சங்க ஸ்தாபகரும் அக்ராஸனாதிபதியுமான காலஞ்சென்ற ஸ்ரீமான் பாண்டித்துரை தேவரவர்கள் கற்ற கல்வியும், தமிழ்ச்சங்கத்தில் கற்பித்த கல்வியும், திருவாவடுதுறை ஆதீனத்துக் கல்வியேயாகும்.

"இப்போது ஞானக்கோமுத்தி ஆதீனத்து ஞானதேசிக மூர்த்தியாகிய ஸ்ரீமத். அம்பலவாண தேசிக்சுவாமிகள் தமது ஆதீனத்தில் பழைய வழக்கப்படியே எத்தனை மாணாக்கர்கள் வந்தாலும் அத்தனை பேருக்கும் உண்டியும் உடையும் உறையுளும் உதவிக் கல்வி கற்பிப்பதாக முன் வந்துள்ளார்கள். தமது ஆதீன வித்துவானும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவநூற் பரிசோதகரும் ஆகிய ஸ்ரீ. மு. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களையே பழையபடி தமது ஆதீன வித்துவானாக அழைத்துவைத்து மாணாக்கர்கட்குக் கல்விகற்பிக்க ஏற்பாடு செய்தருளியிருக்கின்றார்கள்."

திருவாவடுதுறை ஆதீனத்தார்கள் சில உபந்யாஸகர்களை நியமித்து அங்கங்கே ஊர்களுக்குப் போய் விவஸாயம் வியாபாரம், கைத்தொழில், வித்யாவிஷயம் முதலியதற்கால நாகரிகத்துக்கேற்ற விஷயங்களைப்பற்றி ப்ரஸங்கங்கள் செய்யவும், இவைகள் ஸம்பந்தமான துண்டுப் பத்திரங்களை ஆயிரக் கணக்காக அச்சிட்டுப் பரப்பவும் ஏற்பாடு செய்வார்களாகில் தமிழ் நாட்டார் மிகவும் மேன்மையான ஸ்திதிக்கு வருவார்கள்.

## MISCELLANEOUS NEWS.
## நாநா ஸங்கதி.

**Villages in India.**

இந்தியாவில் கிராமங்கள்.—இந்தியா முழுமைக்கும் 7-லட்சம் கிராமங்களிருக்கின்றன.

**Coffee Substitutes.**

மாற்றுக் காப்பி.—ஜர்மனி, ஆஸ்திரியா, ஹங்கரி ப்ரான்ஸ், முதலிய இடங்களில் அத்தி, பார்லி இவைகளிலிருந்து காப்பிச் செய்யப்படுகிறதாம். இந்த மாற்றுக் காப்பி நறுமணமுள்ளதாம்.

**The World's Currency.**

உலகத்தின் நாணயங்கள்.—உலகத்திலுள்ள செலாமணியாகும் நாணயங்களையெல்லாம் நாகரிகம் பெற்ற ஜனங்களுக்கு ஸமவிகிதமாகப் பங்கிட்டுக் கொடுத்தால் ஆளொன்றுக்கு ரூபா 90 கிடைக்குமென்று கணக்கிடப்படுகிறது.

**An Orphanage.**

ஒரு அநாத ரக்ஷணசாலை.—பெற்றோரையிழந்து பந்து மித்திரர்களையிழந்து நாதனற்றுக் கிடக்கும் ஏழைக் குழந்தைகள் தங்கிப்படிப்பதற்காக பவநகர் மகாராஜா அவர்கள் நாற்பத்தேழாயிரம் ரூபாயில் ஓர் அநாத ரக்ஷணசாலை கட்டுவிக்க ஏற்பாடு செய்திருக்கிறாராம்.

**Centenarians.**

நூறு வயதானவர்கள்.—ஜர்மனியில் எடுத்திருக்கும் கணிதப்பிரகாரம் ஐரோப்பாக் கண்டத்தில் அடியிற் குறிப்பிட்டவாறு 6760 பேர் நூறு வயதுடையவர்களாக இருக்கிறார்களாம். டென்மார்க் 2, பெல்ஜியம் 5, ஸ்வீடன் 10, நார்வே 23, ஜர்மனி 76, ருஷியா 89, கிரேட்பிரிட்டன் 92, ஆஸ்டிரியாஹங்கேரி 113, இத்தாலி 197, ப்ரான்ஸ் 213, ஸ்பெயின் 410, செர்வியா 573, ரோமானியா 1074, பல்கேரியா 3883.

**Domestic Training for Woman.**

ஸ்திரீகளுக்கு குடும்ப நிர்வாகப்பயிற்சி.—லண்டனில் ஆங்கிலேயச் சிறு பெண்களைகுடும்ப நிர்வாக முறையில் பயிற்றுவிக்கும் பொருட்டு, ஸ்திரீகளுக்கான கிங்கஸ் காலேஜ் என்னும் ஸ்தாபனத்தை ஒட்டியதாய் ஒரு முயற்சி செய்யப்படுகிற தென்றும், இம் முயற்சியை லண்டன் யூனிவர்ஸிடி அங்கீகரித்திருக்கிறதென்றும், சொல்லப்படுகிறது. இம்முயற்சிக்கு வேண்டிய மூலதனத்தின் பொருட்டு 50,000 பவுன் கையொப்பமாயிருக்கிறது.

**Marriage by Cigar.**

சுருட்டுக் கலியாணம்.—ஸயாம் ஜனங்களில் கல்யாணவிஷயத்தில் ஒரு நூதனவழக்க மிருக்கிறது. எந்தப்பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளலாமென்று ஒருவனுக்குத் தோன்றுகிறதோ, அவளுக்கு அவன் ஒரு புஷ்பத்தைத் தருகிறான். அவள் சுருட்டைப்பிடித்துக்கொண்டிருந்தால் அவளிடமிருந்து தன் சுருட்டைப் பற்றவைத்துக்கொள்கிறான். இதற்குஅவள்தடையொன்றும் செய்யாமலிருந்தால் சீக்கிரத்தில்கலியாணத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

**A Curious Sanitary House.**

அதிசய சுகாதார வீடு.—யோகஹாமாவில் ஒரு டாக்டர் தாம் குடியிருக்க ஒரு அதிசயமான வீடு கட்டியிருக்கிறார். வியாதிகளை உற்பத்திசெய்யக்கூடிய நுண்ணிய கிருமிகள் வீட்டுக்குள்ளே பிரவேசியாதபடிவீட்டின் சுவர்களெல்லாம் கண்ணாடிக் கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. அக்கண்ணாடிக் கற்கள் உள் துளைஉடையனவாய் அவற்றினுள்ளே சோடா உப்பினுலான திராவகம் ஊற்றப்பட்டிருக்கிறது. அது விட்டுக்குள் சீதோஷ்ணங்களை மட்டுப்படுத்தக் கூடியதென்று சொல்லப்படுகிறது. வீட்டிலுள்ள ஜன்னல்களும் வெளியினின்று உட்பிரவேசிக்கும் காற்றைக் கிருமியில்லாதபடி வடிகட்டி உட்செலுத்தக்கூடிய விதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று தெரிய வருகிறது.

**Toddy Shops.**

கள்ளுக்கடைகள்.—பம்பாய் கவர்ன்மெண்டார் கள்ளுக்கடை முதலியவைகள் எந்த ஜாகாவில் வைக்கலாம் வைக்கக்கூடாது, என்னும் விவரத்தை அறிவதற்காக, அங்கங்கேயுள்ள பெரிய தனக்காரரைச் சங்கத்தவராக்கி யிருக்கிறார்கள். கலெகடர்கள் இனியிவர்களுடைய இஷ்டத்தை யனுஸரித்தேகடைகளை வைக்க லைஸென்ஸ் கொடுக்கவேண்டுமென்றும் இவர்கள் வேண்டாத இடங்களில் வைக்கக்கூடாதென்றுஉத்தரவு பிறந்திருக்கிறது. இதை யெல்லாரும் கவனிக்கவேண்டும்.

**Barbers in Australia.**

ஆஸ்ட்ரேலியாவில் அம்பட்டர்கள்.—ஆஸ்ட்ரேலியாவிற்குத் தற்போது அம்பட்டர்கள் அதிகமாகச்

செல்வது அனுகூலம். இவ்வருஷ ஆரம்பம் முதல் மெல்போர்னில், க்ஷவரம்செய்து மயிர்கத்தரிக்கிறவனுக்கு வாரம் ஒன்றுக்கு 3 பவுன் சம்பள மென்று நிர்ணய சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுவரையில் 2 பவுன் 5 ஷில்லிங் இருந்து வந்தது. இப்போது கூலி அதிகப்பட்டு விட்டதால் மெல்போர்னியவாஸிகள் அம்பட்டர்களின் ஷாப்புகளுக்குப்போகாமல் ஒரே சுட்டாக நின்றுவிடவேண்டியதென்றும், தாங்களே க்ஷவரங்கள் செய்துகொண்டு மனைவிமார்கள் தங்கள் தலைமயிர்களைக் கத்தரிக்கச் செய்யவேண்டுமென்றும் ஏற்பாடு செய்து வருகிறார்களாம்.

**Wireless Telegraphy through Water.**

நீர்வழியாய் கம்பியில்லாத் தந்தி.—அலாஹபாத்து தந்தி டிப்டி ஸூபரிண்டண்டு முகம்மதிய ஹபீப் ரஹிமான்கான் அவர்கள் ஸமீபத்தில் பரீக்ஷைகள் செய்து, கம்பி ஸகாய மில்லாமல் நீரிலும் தந்திஸமாசாரம் கொடுத்து வாங்குவது ஸாத்தியமென்று ரூபித்தார். நிலத்தில் அவ்வாறு ஸாத்தியமென்பதைப் பலவருஷங்களுக்கு முன் இத்தலிய ஸ்ரீமானாகிய மார்கோனி என்பவர் நிரூபித்து, இப்பொழுது, அந்த முறைப்படி நடவடிக்கை அனேக இடங்களில் நடந்து வருவது அபிமானிகளில் அனேகருக்குத்தெரிந்திருக்கலாம். ஆகவே இனி ஸமீபகாலத்தில் நிலம் நீர் இரண்டிலும் கம்பியின் உதவிவேண்டாமல் தந்தி ஸமாசாரம் அனுப்புவது நடக்கும்.

இது ஒரு பெரிய அதிசயமாதலால், மேனாட்டில் பௌதிக சாஸ்திரிகளுடைய சங்கங்களில் அனேகத்திற்கு மேற்குறித்த ஸ்ரீமான் ஹபீப் ரஹிமான்கௌரவ மெம்பராகி யிருப்பதுடன், டில்லிதர்பாரிலும் அவருக்குப் பட்டதானம் கிடைத்தது. இந்த சந்தோஷத்தை இந்தியர் அனைவரும் அறிய விரும்புகிறோம்.

**Railway between India and Ceylon.**

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ரெயில்வே.—இப்போது தென்னிந்தியா ரெயில்வேயானது தநுஷ்கோடிவரை போகிறது. இடையில் பாம்பன் வாய்க்கால் குறுக்கே அதைத் துண்டிக்கிறது. அதன்மேல் ஒருபாலம் கட்ட உத்தேசித்திருக்கிறார்கள். தநுஷ்கோடிக்கும் இலங்கைத்தீவிலுள்ள மன்னாருக்கும் 22 மயில் சமுத்திரம் இருக்கிறது. ஒரு கம்பீரமான பாலம் கட்ட உத்தேசமிருந்தபோதிலும் அதை இப்போது கட்டப்போவதில்லை. தற்காலத்தில் இந்த 22 மையிலுக்கு 3 நீராவி யந்திரக் கப்பல்கள் மூலமாய் யாத்திரை நடத்தப்படும். இக்கப்பல்கள் ஸ்காட்லாண்டிலுள்ள க்ளாஸ்கோவில் கட்டப்படுவருகின்றன. வருகிற வருஷம் ஜூன் மாஸத்திற்குள் இக்கப்பல்கள் ஓடும் என்று தெரியவருகிறது.

**The Sringeri Swami.**

ஸ்ரீ சிருங்ககிரி ஸ்வாமிகள்.—ஸ்ரீ சிருங்ககிரி மடாதிபதி அவர்களாகிய ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவந்ருஸிம்ஹபாரதீ ஸ்வாமிகள் நாளது மார்ச்சு ௴ 20௳ புதன்கிழமை காலை ஸுமார் 11 மணிக்கு, சுக்லபக்ஷம் த்விதியையில் வழக்கம்போல் பூஜை முடித்துஸமாதிகொள்பவர்போல இருந்தவர் யாவரும் எதிர்பாராமல், எவ்விதவியாதியுமின்றி விதேக முக்தி பெற்றார்கள். இது அவர்களுடைய எண்ணிறந்த சிஷ்கோடிகளுக்கு மிகவும் துக்கத்தை விளைவிக்கும். அவர்கள் தர்க்கம், சாங்கியம், வேதாந்தம், யோகம் முதலிய சாஸ்திரங்களில் மஹா பிரக்ஞையுள்ளவர்கள். உயர்ந்த ஸ்வாநுபவம் உடையவர். மஹா சீலர். மஹா காருண்ணியம் உள்ளவர். ஈசுவர கடாக்ஷம் பெற்ற புண்ணியர். சுபாநுக்கிரக சக்தியுள்ளவர். எப்பொழுதும் சிரித்த முகத்தினர். சாந்தர். எவரும் அவர் அவர் பிறந்துள்ள மதத்தை ஸரிவர அநுஷ்டிக்கவேண்டுமென்று வற்புறுத்தி அடிக்கடி உபதேசம் செய்வார்கள். பிற மதத்தினரைப் பொதுவாய் துவேஷியாமல் அன்போடு நன்குமதித்துப் பாராட்டினர்கள். அவர்கள் சிஷ்யர்களின் நன்மையின் பொருட்டு, தென்னாட்டில் இருமுறை யாத்திரை செய்தார்கள். அவர்கள் யாத்திரையில் தங்கிய க்ஷேத்திரங்களில் எல்லாம், சிஷ்யர்களின் ஸபையைக் கூட்டிவைத்து, அவர்களுக்கு ஆசார விஷயத்திலும் ஞானவிஷயத்திலும் உயர்ந்த உபதேசங்களுள்ள உபந்நியாஸம் செய்துவந்தார்கள். அவர்கள் ஸ்ரீ சிருங்ககிரி மடத்திற்கு குரு சிஷ்ய வார்சு கிரமத்தில் 33-ம் பட்டம் பெற்றிருந்தார்கள்.

## OPENINGS FOR BUSINESS.
## வியாபாரம் நடக்கக்கூடிய இடங்கள்.

[அடியிற்கண்ட வியாபாரங்களில் அக்கரையுள்ள வர்கள் "பிழைக்கும் வழி" பத்திரிகையைக் குறிப்பிட்டு விவரங்களைச்சொல்லி கல்கத்தாவில் "டைரக்டர் ஜெனரல் ஆப் கமர்ஷியல் இன்டலிஜன்ஸ்' என்னும் அதிகாரிக்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.]

**Jute Sacks.**

கோணிச் சாக்குகள்.—துருக்கி தேசத்தின் தலைநகராகிய கான்ஸ்டான்டிநோப்பிளில் உள்ள ஒரு வியாபாரிக்கு 9½ லக்ஷம் சாக்குகள் ஸப்ளை செய்யக்கூடியவர்களுடைய விலாஸந்தேவையாம். (1322)

**Cheap Cooking Lamps.**

மலிவான சமையல் செய்வதற்கான விளக்குகள்.—அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் மலிவானதும், இந்தியர்களுக்கு உபயோகமாய் சமையலுக்கு உபயோகப்படவுங் கூடிய விளக்குகளை விற்கத்தக்கவர்களுடைய விலாஸந்தேவை. (1324)

**Cotton Waste.**

கழிவடைப் பருத்தி.—மான்செஸ்டரிலுள்ள ஒரு வியாபாரிக்கு கழிவடை நூல்களை, முக்கியமாய் எண்ணெய்பட்ட நூல்களை, ஏற்றுமதி செய்யக்கூடியவர்களுடைய விலாஸந்தேவை. (1326)

**Cotton Seed Oil Industry.**

பருத்திக்கொட்டை எண்ணெய்த் தொழில்.—பருத்திக்கொட்டை எண்ணெயிலிருந்து சாப்பாட்டுக்குதவும்படியான ஸாமான்களைச் செய்யக்கூடிய, அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தில் வஸித்துவரும் ஒருநிபுணர் அந்தத் தொழிலில் இஷ்டமுள்ளவர்களோடு கலந்துகொள்ள பிரியப்படுகிறார். (1327)

**Coir and Kapok.**

தேங்காய்நாரும் இலவப்பஞ்சும்.—டாஸ்மேனியாவிலுள்ள ஒரு வியாபாரிக்கு தேங்காய்நாரும் இலவம் பஞ்சும் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸந்தேவை. (1330)

**Umbrella Fittings.**

குடைக்குவேண்டிய ஸாமான்கள்.—லண்டன் நகரத்திலுள்ள ஒரு வியாபாரிக்கு கல்கத்தாவிலும் பம்பாயிலும் குடைசெய்வதற்கு வேண்டிய ஸகல ஸாமான்களையும் விற்பதற்கு ஏஜெண்டுகள் தேவையாம். (1331)

**Oil Seeds.**

எண்ணெய் விதைகள்.—ட்ரீஸ்ட் துறைமுகத்திலுள்ள ஒரு வியாபாரிக்கு ஆஸ்ட்ரியாவில் எண்ணெய் விதைகளில் வியாபாரத்தைப் பரவச்செய்ய விருப்பமுள்ள வியாபாரியின் விலாஸம் தேவையாம். (1333)

**Rice.**

அரிசி.—புடாபெஸ்த் நகரத்திலுள்ள ஒரு வியாபாரிக்கு கல்கத்தா அல்லது ரங்கூனிலுள்ள அரிசி ஏற்றுமதி செய்யும் வியாபாரியின் விலாஸம் தேவையாம். (1337)

**Cotton Yarns.**

பருத்திநூல்.—ஸ்மர்னாவில் ஒருவருக்கு பருத்திநூல் செய்கிறவர்களுடைய விலாஸந் தேவையாம். (1339)

**Furniture Leather.**

ஸோபா முதலியவைகளுக்குப் போடும் தோல். லீட்ஸ் நகரத்திலுள்ள ஒரு வியாபாரிக்கு கல்கத்தா பம்பாய், மதராஸ், டெல்ஹி முதலிய விடங்களில் ஸோபா முதலியவைகளுக்குப்போடும் தோல் விற்க ஏஜெண்டுகள் தேவையாம். (1340)

**Patna Rice.**

பாட்னா அரிசி.—ட்ரீஸ்ட் பட்டணத்திலுள்ள ஒரு வியாபாரிக்கு பாட்னா அரிசி ஏற்றுமதி செய்பவர்களின் விலாஸங்கள் தேவையாம். (1341)

**Oil Seeds.**

எண்ணெய்வித்துக்கள்.—ட்ரீஸ்டிலுள்ளவியாபாரிக்கு எண்ணெய் வித்துக்கள் ஏற்றுமதி செய்பவர்களின் விலாஸம் தேவையாம். (1342)

**Fancy Leathers.**

வேலைப்பாடான தோல்கள்.—லீட்ஸிலுள்ள ஓர் வியாபாரிக்கு பைகள் செய்வதற்கும், புஸ்தகம் பைண்டு செய்வதற்கும் உபயோகமான வேலைப்பாடான தோல்கள், விசித்திரமான ஸாமான்கள், இவைகளை வியாபரம் செய்துகொடுக்க ஏஜெண்டுகள் தேவையாம். (1343)

**Tussore Silk.**

டஸ்ஸோர் பட்டு.—டஸ்ஸோர்பட்டு ஸப்ளை செய்யக்கூடியவர்களின் விலாஸங்களை ஓர் திரான்ஸ்வால் வியாபாரி அறிய விரும்புகிறார். (1349)

கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தருக்கு சாக்குகள் ஏற்றுமதி செய்யும் வியாபாரிகளின் விலாஸங்கள் தேவையாம். (1348)

## MADRAS MARKET REPORTS.

## மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்றுசொல்லப்படும் வர்த்தகச் சங்கத்தாரின் மார்ச்சுமாஸம் 13-ம் வ ரிப்போர்ட்டுப்படி.

**Produce Market.**--விளைபொருள்கள்.

| | | ரூ. |
|---|---|---|
| ஆவாரம்பட்டை பாரம் 1-க்கு | ... | 18 முதல் 25 |
| கொன்னைப்பட்டை ஷை | ... | 13 முதல் $15\frac{1}{2}$ |
| கடப்பை கடுக்காய் ஷை | ... | 9 முதல் 10 |
| சேலம் ஷை ஷை | ... | 17 முதல் 20 |
| நல்லெண்ணெய் ஷை | ... | 100 முதல் 110 |
| புங்கம் எண்ணெய் ஷை | ... | 65 முதல் 90 |
| எட்டிக்கொட்டை ஷை | ... | 14 முதல் 16 |
| விளக்கெண்ணெய் ஷை | ... | 77 |
| கொட்டை முத்து 195 ராத்தல் | | 10 |

| | | ரூ. அ. பை. |
|---|---|---|
| பந்தர் பச்சை அரிசி 44 படி | ... | 8 முதல் $9\frac{1}{2}$ |
| நெல்லூர் அரிசி 31 படி | ... | 7 2 0 |
| கோதுமை 4 படி | ... | 1 0 0 |
| கொள்ளு 195 ராத்தல் | ... | $5\frac{1}{2}$ முதல் 6 |
| வெங்காயம் (தாட்பத்திரி) பாரம் | ... | 10 0 0 |
| ஷை (பல்லாரி) ஷை | ... | 11 0 0 |
| பங்களூர் உருளைக்கிழங்கு | ... | 15 0 0 |

**Metals.**—உலோகங்கள்.

பித்தளைத் தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷுமும்

| | | ரூ. |
|---|---|---|
| பாரம் | ... | 216 |
| செப்புத் தகடுகள் பாரம் | ... | 265 |
| செப்புக்கட்டி ஷை | ... | 225 |
| நாகம் ஷை | ... | 80 |
| ஷை (உள்ளூர்) ஷை | ... | 87 |
| ஈயம் ஷை | ... | 60 |
| காரீயம் ஷை | ... | 67 |
| வெள்ளீயம் ஷை | ... | 199 வராகன். |

**Iron.**—இரும்பு.

| | | |
|---|---|---|
| மருக்கி சட்டம் 2 நெ. பாரம் | ரூ. | 23 முதல் 24 |
| சீமை | ... | 39 முதல் 40 |
| மருக்கி தகடு | 6--9, 12—13, | 24—40 |
| பீப்பாய்க் கட்டு | ... | 27—28 |
| 8 பட்டை எஃகு | ... | 22 |
| எஃகு வில்கட்டு | ... | 27—31 |
| திரணைக் கம்பி மருக்கி 2 நெ. | ... | 22—25 |
| சீமை | ... | 40—46—49 |

## SEASON.

## காலஸ்திதி.

**Rainfall.**

மழை.—1911ஹூ எப்ரல்மீ 1உயிலிருந்து 1912ஹூ எப்ரல்மீ 1உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம்,ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 84·7 | 77·0 |
| வால்டேர் | 86·1 | 77·4 |
| காக்கிநாடா | 92·7 | 76·1 |
| மசூலிப்பட்டணம் | 94·3 | 74·2 |
| நெல்லூர் | 95·6 | 75·1 |
| மதராஸ் | 92·0 | 74·7 |
| கூடலூர் | 91·3 | 76·2 |
| நாகப்பட்டணம் | 91·0 | 81·5 |
| பாம்பன் | 92·2 | 78·0 |
| கொழும்பு | 91·5 | 74·0 |
| திருவநந்தபுரம் | 89·0 | 76·1 |
| கொச்சி | 89·7 | 75·7 |
| கள்ளிக்கோட்டை | 90·8 | 78·1 |
| மங்களூர் | 90·8 | 77·3 |
| மெர்க்காரா | 85·0 | 62·0 |
| ஐதராபாத் | 97·8 | 70·7 |
| ரெய்ச்சூர் | 102·0 | 80·6 |
| பல்லாரி | 104·0 | 78·3 |
| கர்நூல் | 104·7 | 79·6 |
| கடப்பை | 104·7 | 77·6 |
| ஹாஸ்ஸான் | 92·4 | 64·1 |
| பெங்களூர் | 90·8 | 66·8 |
| கொடைக்கானல் | 69·5 | 51·5 |
| உதகமண்டலம் | 67·0 | 50.7 |
| கோயம்புத்தூர் | 98·5 | 70·3 |
| வேலூர் | 98·2 | 73·5 |
| சேலம் | 102·5 | 75·8 |
| திருச்சிநப்பள்ளி | 101·1 | 76·3 |
| புதுக்கோட்டை | 99·1 | 77·4 |
| மதுரை | 100.5 | 78·1 |
| திருநெல்வேலி | ... | ... |

MADRAS : Printed by Thompson & Co. at the Minerva Press
and published by G. A. VAIDYARAMAN & Co., Sunkurama Chetty Street, George Town, Madras.

Supplement to "The Practical Life"

"பிழைக்கும்வழிக்கு அனுபந்தம்."



THE HON. MR. P. S. SIVASWAMI AIYER, C. I. E.

கனம் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், ஸி. ஐ. இ.